கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை
195
பங்குனி 2023
10.03.2023
ஆளுமைச் சிறப்பிதழ்

# ஜீவநதி

100/-
பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

## மு.சிவலிங்கம் சிறப்பிதழ்



எம். எம் .ஜெயசீலன்
மு.அநாதரட்சகன்
பேராசிரியர் செ.யோகராசா
இ.சு.முரளிதரன்
சு.தவச்செல்வன்
புலோலியூர் வேல் நந்தகுமார்
ஜெயப்பிரசாந்தி ஜெயபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 JUN 2023
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை
2023 - பங்குனி- ஆளுமைச் சிறப்பிதழ்

# பொருளடக்கம்

கட்டுரைகள்

**மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளில் தொழிற்சங்க அரசியல்**
எம்.எம்.ஜெயசீலன்........................... 03

**மலையக நாவல் வரலாற்றில் மு.சிவலிங்கத்தின் நாவல்கள்**
பேராசிரியர் செ.யோகராசா.................... 07

**சமூக நீதியை கோரி நிற்கும் கதைகள்... மு.சிவலிங்கத்தின் " ஒரு விதை நெல்" சிறுகதைத் தொகுதியை முன்வைத்து**
மு.அநாதரட்சகன்................................ 09

**வியர்வையும் கண்ணீரும் செந்நீரும் கலந்த தேநீர்: ஒப்பாரிக்கோச்சி**
இ.சு.முரளிதரன்.................................... 12

**மலையக மூத்த படைப்பாளி மு. சிவலிங்கத்தின் "வெந்து தணிந்தது காலம்" சிறுகதைத்தொகுப்பு குறித்த ஒரு பார்வை**
புலோலியூர் வேல். நந்தகுமார்................ 18

**தோட்டத்து உழைப்பாளிகளின் துன்பியல் வாழ்வின் வெளிப்பாடாய் சி.வி.யின் தேயிலைத்தேசம்**
ஜெயபிரசாந்தி ஜெயபாலன்......................25

**மு.சிவலிங்கத்தின் படைப்புகள்**
சு.தவச்செல்வன்...............................27




சிறுகதை
மு.சிவலிங்கம் - 12, 29



நேர்காணல்
மு.சிவலிங்கம் - 21



கடிதம்
மு.சிவலிங்கம் - 39

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2023 பங்குனி இதழ் - 195**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



**ஜீவநதி சந்தா விபரம்**

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


## ஜீவநதி
**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## மலையக மக்களின் விடிவுக்காக குரல் கொடுத்த படைப்பாளி மு.சிவலிங்கம்

மு.சிவலிங்கம் மிகவும் அமைதியான செயற்பாட்டுவீரர். மலையகத்து மக்களின் வாழ்வியலை தரிசிக்க வேண்டுமாயின் மு. சிவலிங்கத்தின் சிறுகதைகளை வாசித்தால் போதும் என்று கூடச் சொல்லலாம். மலையக மக்களது துன்பம் நிறைந்த வாழ்க்கையை தன் படைப்புகள் வாயிலாக வெளியுலகிற்கு எடுத்துக் காட்டி வருபவர் மு. சிவலிங்கம். நாவல், சிறுகதை, கவிதை, மொழிபெயர்ப்பு என இலக்கியத்தின் பல்வகைமைகளிலும் நிபுணத்துவம் வாய்ந்தவராக விளங்குபவர் மு. சிவலிங்கம் அவர்கள்.

தனது படைப்புகள் வாயிலாக மக்களது பிரச்சினைகளை பேசுவதோடு அவற்றிற்கு தீர்வு காண முயற்சித்து வருகின்றார். இலக்கியத்தோடு அரசியலிலும் ஈடுபட்டு மக்களது பிரச்சினைகளைத் தீர்க்கும் பிரதிநிதியாக வாழ்பவர். 1946 ஆம் ஆண்டு தலவாக்கொல்லை பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தில் பிறந்தவர். பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் பொருளாதார நிலைமைய காரணமாக கல்வியை தொடர முடியாமல் இடர்பட்டாலும் தன் முயற்சி காரணமாக ஆசிரியராகப் பணியாற்றி பல மாணவர்களின் உயர்வுக்கு காரணமாய் அமைந்தார்.

1989 ஆம் ஆண்டு மலையக மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியை உருவாக்கியவர்களுள் இவரும் ஒருவர். அக்கட்சியின் செயலாளர் நாயகமாக பணியாற்றியவர். "புதிய காற்று" என்ற திரைப்படத்தில் முக்கிய பாத்திரம் ஏற்று நடித்துள்ளார். இவரது பஞ்சம் பிழைக்க வந்த சீமை, உயிர் போன்ற நாவல்கள் தனித்துவ மானவை. இலக்கியத்துக்கான பல விருதுகளைப் பெற்றுக் கொண்ட இவர் இலக்கியத்திற்கான உயர்விருதான சாகித்திய ரத்தினா விருதையும் பெற்றவர். தன்னலம் கருதாது மக்கள் சேவைக்காக தன்னை அர்ப்பணித்து வாழும் உன்னதமான படைப்பாளிக்கு சிறப்பிதழ் வெளியிட்டு ஜீவநதி பெருமை அடைகின்றது.

- க.பரணீதரன்


**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை.
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு. சிவலிங்கத்தின் சிறுகதைகளில் தொழிற்சங்க அரசியல்

■ எம்.எம். ஜெயசீலன்

மலையகத் தமிழரின் சமூக அசைவினையும் அந்த அசைவில் செல்வாக்குச் செலுத்தும் அரசியல் சமூக காரணிகளையும் யதார்த்தபூர்வமாகப் புனைவாக்கம் செய்துவரும் மு.சிவலிங்கம், ஒடுக்கப்பட்ட மக்களின் இலக்கியம், அம்மக்களின் பிரச்சினைகளுக்கு முதன்மையளித்து, அவர்களின் விடுதலைக்குப் பங்களிப்பு வழங்க வேண்டும் என்ற நோக்குடைய வராவார். இலக்கியப் படைப்பின் அழகியல், வடிவம் முதலிய கருத்தாக்கங்களில் அக்கறை செலுத்தாது, படைப்பின் உள்ளடக்கத்துக்கு அதிக முதன்மை கொடுத்துவரும் அவர், பெருந் தோட்டத் தொழிலாளர்களை ஒடுக்கும் ஆதிக்கச் சக்திகளுக்கும் அத் தொழிலாளர்களையே சுரண்டிக் கொழுக்கும் தொழிற் சங்கம் மற்றும் மலையக அரசியல் அமைப்புக்களுக்கும் எதிரான விமர்சனங்களைத் தன் படைப்புக்களில் அழுத்தமாக வெளிப்படுத்திவருவதை அவதானிக்க முடிகிறது.

மலையகத் தமிழரின் சமூக வாழ்வியலோடு இரண்டறக் கலந்ததாக அவர்களிடையே தொழிற்பட்ட தொழிற்சங்கங்கள் விளங்கி வந்துள்ளதால் அத்தொழிற்சங்கங்களின் செயற்பாடுகள், அவற்றின் அரசியல் ஆகியன மலையகப் படைப்பிலக்கியங்களின் பிரதான பேசுபொருட்களில் ஒன்றாக விளங்கி வந்துள்ளன. படைப்பாளிகள் தத்தம் கருத்துநிலைக்கு ஏற்ப மலையகத் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளை ஏற்றும் நிராகரித்தும் விமர்சித்தும் படைப்பாக்கங்களை மேற்கொண்டுள்ளனர்.



பெருந்தோட்டத் தொழிலாளர்களின் விடுதலைக்கான எவ்வித சமூகநல அமைப்புக்களும் அற்றிருந்த நிலையில் அச்சமூகத்திலிருந்து தோன்றிய தொழிற்சங்கங்களே அவர்களின் விடுதலைக்கான முதன்மை அமைப்புக்களாக இயங்கியுள்ளன. அவ்வமைப்புகளின் செயற்பாடுகளினாலேயே தொழிலாளர்கள் எழுச்சியும் விழிப்புணர்வும் பெற்றதோடு தமது உரிமைகளைப் பெற்றுக்கொள்ளவும் அநீதிகளை எதிர்த்துப் போராடவும் தொடங்கியுள்ளனர். அதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்மீதான அத்து மீறிய அதிகார துஸ்பிரயோகங்கள் தவிர்க்கப்பட்டதோடு தொழில் பாதுகாப்பு, வேலை நேரம், வேதனம் போன்றவற்றில் முன்னேற்றங்கள் ஏற்படத்தொடங்கின. சில தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளால் முற்போக்குத் தளத்தில் சிந்திக்கின்ற இளந்தலைமுறையினர் உருவாக்கம் பெற்றனர். அவர்கள் தமது சமூகம் குறித்து தீவிர அக்கறையுடன் செயற்படத்தொடங்கியதோடு மொத்தச்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தையும் வழிநடத்துபவர்களாகவும் மாற்றங் கண்டனர். இத்தகைய தன்மைகளால் மலையகத் தமிழரின் மேல்நோக்கிய அசைவு துரிதமாக இடம்பெறத் தொடங்கியது.

தொழிற்சங்கங்களின் தொடக்க காலத்தைவிட பிந்திய காலத்தே அவை தொழிலாளர்களையே சுரண்டிக் கொழுக்கும் நிறுவனங்களாகவும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான நிறுவனங்களாக வும் மாற்றங்கண்டதோடு தொழிலாளர்களிடையே புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிப்பனவாகவும் அமைந்தன. மலையகத்தில் ஆரம்ப காலத்தில் இயங்கிய அகில இலங்கைத் தோட்டத்தொழிலாளர் சம்மேளனம், அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கம் ஆகியன இடதுசாரிய பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கியுள்ளன. அவற்றின் தொடர்ச்சியாக இடதுசாரி பின்புலத்தில் இயங்கிய தொழிற்சங்கங்கள் அம்மக்கள் வாழ்வில் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. ஆனால், பிற்காலத்தில் முன்னணி தொழிற்சங்கங்களாக உருப்பெற்றவை முதலாளித்துவ சக்திகளால் தாபிக்கப்பட்டவையாகவும் முதலாளித்துவ சக்திகளின் கைக்கூலிகளாகவும் அமைந்துள்ளதால் அவற்றின் செயற்பாடுகள் உழைக்கும் வர்க்கத்துக்கு விடுதலையைப் பெற்றுத்தராமல் தமது வர்க்க நலன் நோக்கியதாக அமைந்துள்ளன எனலாம். அத்துடன் மலையகத்துள் இடதுசாரிய சிந்தனை கொண்ட தொழிற்சங்கங்களை வேர்கொள்ள விடாமல் தடுப்பதி லும் அவை தீவிர கரிசனைகாட்டி வருகின்றன. இந்நிலை யால் மலையகத்தில் இயங்கும் தொழிற்சங்கங்கள் மீதான விமர்சனங்கள் பல தளங்களிலும் முன்வைக்கப் பட்டு வருகின்றன.

படைப்பிலக்கியங்களில் மலையகத் தொழிற் சங்க அரசியலின் பிற்போக்குத் தனங்களை வன்மை யாகக் கண்டித்து அவற்றுக்கு மாற்றான மாற்று தொழிற் சங்க அரசியலை முன்வைப்பவர்களுள் மு. சிவ லிங்கத்துக்கு முக்கியமான இடமுண்டு. மலையகத்தின் பாரம்பரிய தொழிற்சங்க வழிவந்த ஆதிக்க அரசியலை நிராகரித்து மாற்று அரசியலை முன்னெடுக்க முனைந்த குழுவுடன் இணைந்து செயற்பட்டு, நேரடி அரசியலில் ஈடுபட்ட அவர், மலையகத்தில் இயங்கிய தொழிற்சங்கங் களின் உள்ளும் புறமும் நன்கு அறிந்தவராக விளங்கிய தால் அத்தொழிற்சங்க அரசியலின் பிற்போக்குத் தனங்களைத் தனது சிறுகதைகளில் வெளிப்படையாகப் போட்டுடைத்து அவற்றுக்கு மாறான தொழிற்சங்க அரசியலை முன்னெடுக்க முனைந்துள்ளார் எனலாம். அவரது பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும், பிரிட்டிஸ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன, ஒரு ரட்சகனின் புறப்பாடு, மார்கழிப் பூக்கள், சங்ககாலம், எங்க ஊர் தேர்தல், வடதிசைக் காற்று, மேற்கில் தோன்றிய உதயம் முதலான கதைகள் அதற்குச் சான்றாக அமைந்துள்ளன.

மலையகத் தொழிற்சங்கத் தலைவர்களை, காலனியக் காலத்தில் வெள்ளைக்காரனுக்கு ஆதரவாக நின்று தொழிலாளர்களை அடக்கிய பெரிய கங்காணி களின் மறுபிறவியாகக் கொள்ளும் (எங்க ஊர் தேர்தல்) மு. சிவலிங்கம், தொழிற்சங்கமானது தொழிலாளர் விடுதலைக்கானது என்ற தடத்திலிருந்து மாறி, தொழிற் சங்க உரிமையாளர்களின் சுகபோகத்துக்கானதும் அவர்களது அரசியல் இருப்புக்கானதுமான நிறுவனமாக இயங்கிவருவதைப் பல கதைகளில் வெளிப்படுத்தி யுள்ளார். எடுத்துக்காட்டாக, சங்க காலம் என்ற கதை யில் வரும் மகேந்திரன் என்ற பாத்திரம், தொழிற் சங்கத்தை வணிக நிறுவனமாக்கி பொருளாதாரத்திலும் அரசியலிலும் வளம்பெறுவதைக் குறிப்பிடலாம். தொழிற்சங்கம் அமைப்பதே ஒரு வியாபார உத்தியாக மாறியது என்பதை மு.சிவலிங்கம் பின்வருமாறு அக்கதையில் பதிவுசெய்கின்றார்:

> "இன்று யூனியன்காரர்கள்தான் சீரும் சிறப்புமாக வாழ்கிறார்கள். ஒரு தொழிற்சங்கவாதிக்கு இன்றைய மார்க்கட் ரேட் அங்கத்துவ சந்தா பணம் ஒரு தொழிலாளி யின் நாள் சம்பளத்தில் மூன்றில் இரண்டு பங்கு அறவிடப்படுகின்றது. அதாவது ஒரு தொழிலாளியிடம் 65 ரூபாய் கிடைக்கிறது... ஒரு தொழிற்சங்க உரிமையாளன் 100 தொழிலாளர்களைத் தனது சங்கத்துக்குள் பிடித்துக் கொண்டால் 65 ரூபாய் வீதம் 6 500 ரூபாய் கிடைக்கும்...! 1000 தொழிலாளர் களைப் பிடித்தால் 65 000 ரூபாய் கிடைக்கும்...! பத்தாயிரம் தொழிலாளர்களைப் பிடித்துக் கொண்டால் ஆறு லட்சத்து ஐம்பதினா யிரம் ரூபாய் சுளையாக ஒவ்வொரு மாதமும் கிடைக்கும். இந்தப் பணத்தில்... வீடு, வாசல், காணி, வண்டி, வாகனம் வாங்க முடி கிறது...! பிள்ளைகளை வெளிநாடு களுக்கு அனுப்பி படிக்க வைக்க முடிகிறது...!"



இத்தகவல்கள் தொழிற் சங்கம் எனும் அமைப்பு எவ்வாறு ஒரு லாபம் தரும் நிறுவனமாக மாற்றப் பட்டுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அதனால் பலரும் தொழிற்சங்க அமைப்பினை லாபம் தரும் தொழிலாகக் கருதும்நிலை பெருகியதோடு அரசியல் ரீதியாக எழுச்சி பெறுவதற்கும் தொழிற்சங்க


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்



அமைப்பினைத் துணை கொண்டனர். மேற்கூறிய கதையில் வரும் மகேந்திரன் பாட்டாளி முன்னேற்ற சங்கம் என்ற அமைப்பைத் திட்டமிட்ட அடிப்படையில் உருவாக்கி, பொருளாதார ரீதியாக வளம் பெற்றதோடு தேர்தலிலும் வெற்றி பெற்று பாராளுமன்ற உறுப்பினராகி, ஆளுங்கட்சிக்கு ஆதரவு வழங்கி அமைச்சரா கின்றான். ஆனால், அவனுக்கு வாக்களித்த அவனுடைய தொழிற்சங்க உறுப்பினர்கள் குறித்த எந்த அக்கறையும் அவனிடத்தில் இல்லை என்பதை கதையின் ஒவ்வொரு அசைவிலும் சுட்டிச் சொல்லும் ஆசிரியர் ஈற்றில், "இந்த மகத்துவமான வாழ்க்கைக்கு அடித்தளச் சக்தியாக விளங்கும் பாமரத் தொழிலாளர் குடும்பங்களின் வாழ்க்கையை ஒரு நொடியேனும் நினைத்துப் பார்க்க மகேந்திரா விரும்புவதில்லை...!" எனத் தன்கூற்றாக முன்வைக்கும் சாட்சியம், மலையகத்தில் இயங்கும் தொழிற்சங்கங்களின் பிற்போக்கு நிலையின் யதார்த்தத்தை அம்பலப் படுத்தியுள்ளது.

தொழிற்சங்கத்தை வியாபார நிறுவனமாக்கிய தொழிற்சங்கச் செயற்பாட்டாளர்கள் தமது நன்மைக்காக மக்களையும் மக்களின் போராட்டங்களையும் சொற்ப விலைக்கு விற்றுப் பிழைக்கும் நபர்களானார்கள் என்பதையும் மு.சிவலிங்கம் மீளமீள பதிவு செய்துள்ளார். உதாரணத்துக்கு, "மார்கழிப் பூக்கள்" என்ற கதையில் சம்பள உயர்வுக்காகப் போராடிய தொழிலாளர்கள் இறுதியில் போராட்டத்தில் தோல்வியடைகின்றனர். அத்தோல்வி பற்றி உரையாடும் பெண்கள் சிலரின் உணர்வுகளும் கருத்துக்களும் பின்வருமாறு அமைந்துள்ளன:

"வேலியே பயிரை மேயும்" கதையாக தொழிற்சங்கங்கள், அவர்களைக் காட்டிக் கொடுக்கும் துரோகங்களுக்கு எதிராகவும் போராட வேண்டிய நிலைமையை எண்ணி வேதனைப்பட்டார்கள்...!

நம்மகிட்ட யூனியன் போட்டு, நம்ம கிட்ட சந்தா சேத்து, நம்மகிட்ட வோட்டு வாங்கி மந்திரியாகும் தலைவர்மார்க நம்ம போராட்டத்தக் காட்டி குடுத்தாங்க...! நமக்குச் சொந்தமான தொழிற்சங்கத்தைக்கூட அவுங்க சொந்த சொத்தா வச்சிக்கிட்டாங்க...! அவங்களுக்கு கொடும்பாவி எரிச்சி, கருமாதியும் செஞ்சிட்டோம்... இனிமே யூனியன் வேணாமுன்னு சந்தாவ தோட்டம் தோட்டமா நிப்பாட்டுவோம்...! என்றாள் ரஞ்சினி"

இந்த உணர்ச்சி வெளிப்பாடும், ஆக்ரோசமும் தொழிற்சங்கங்களின் சுரண்டலையும் போலிமையையும் அம்பலப்படுத்தி நிற்பதைக் காணலாம். அவ்வாறே "பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும்" என்ற கதையிலும் தொழிற்சங்கம் மூலம் அரசியலில் உயர்ந்தவர்கள் மக்களை ஏமாற்றி அரசியலில் நிலைப்பதைக் காண முடிகின்றது. அக்கதையில் பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் ஒன்றிணைந்து தமது உரிமைக்காகப் போராடும் மக்களை, அம்மக்களினால் அமைச்சராக்கப் பட்டவர் திசை திருப்பிச் சிதைக்கின்றார். அதனால் தொழிற்சங்கம் மீதான நம்பிக்கையும் தொழிலாளர்களின் பிரச்சினைகளைத் தொழிற்சங்கம் தீர்க்கும் என்ற எதிர்பார்ப்பும் தொழிலாளர்கள் மத்தியிலே வெகுவாகக் குறையத்தொடங்கின. இளந்தலைமுறையினர் தொழிற்சங்கச் செயற்பாடுகளையும் செயற்பாட்டாளர்களையும் வெறுக்கத்தொடங்கினர். அதனை எங்க ஊர் தேர்தல், வடதிசைக் காற்று முதலான கதைகளில் மு. சிவலிங்கம் வெளிப்படுத்தியுள்ளார். "எங்க ஊர் தேர்தல்" என்ற கதையில் வரும் சங்கரன் என்ற பாத்திரத்தின் "நாம இப்படியே நம்ம சமூகத்த விட்டுக்கிட்டு இருக்க முடியாது...! கம்பெடுத்தவனெல்லாம் பாம்படிக்கிற மாதிரி... நெனச்ச நெனச்சவனெல்லாம் சங்கம் உண்டாக்குறான்... நாங்க லெச்சம் லெச்சமாக சந்தா சேத்துக்குடுத்துக்கிட்டே இருக்கோம்... நம்ம சந்தாவுல சங்கம் உண்டாக்கி, நம்ம வோட்டுல மந்திரியாகி, நம்மலையே மேய்க்கிறத நாம ஒணரனும்..." என்ற உணர்ச்சித் தெறிப்பு, புதிய தலைமுறையினரின் நிலைப் பாட்டினை வெளிப்படுத்தி நிற்கின்றது. அத்துடன் இப்புதிய சமூக அமைப்பின் பிரதிநிதிகள் மு.சிவலிங்கத்தின் பல கதைகளில் நடமாடுகின்றனர். உதாரணத்துக்கு வடதிசைக் காற்று என்ற கதையில் வரும் ராஜகுமாரனின் பின்வரும் உணர்வலைகள் அவனின் நிலைப்பாட்டையும் புதிய சமூக எழுச்சியையும் வெளிப்படுத்துகின்றது:

"அந்தத் தொழிற்சங்கத்துக்குப் பரம்பரை பரம்பரையாக அவனது பெற்றோர் சந்தாப் பணம் கட்டி வந்தார்கள். தேர்தல் காலங்களிலெல்லாம் அடி, உதை, வெட்டு, குத்து பட்டு ஓட்டு வாங்கிக் கொடுத்தார்கள். சங்கத் தலைவரை மந்திரியாக்கினார்கள். அன்று ஒட்டாண்டியாக பெட்டிக்கடையில் பீடி வாங்க வழியில்லாமல் கிடந்தவன்... இன்று மாடமாளிகை... கூட கோபுரத்தில்... கார் வண்டி... மெய்க்காப்பாளர்... சகிதம் வாழ்க்கை நடத்துகின்றான்.

இவர்களால் சமூகத்துக்கு என்ன பாதுகாப்பு...?


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமூக அரசியலில்... தூர நோக்கு இல்லாதவர்கள்... தேர்தலில் மட்டும் ஜெயிக்கின்ற கெட்டிக்காரர்கள்... இவர்களிடம் சமூகம் ஒப்படைக்கப்படுகின்றது. மக்களை வழிநடத்திச் செல்வதற்கு தலைமைகள் இல்லாதபோது நாங்கள் தான் இந்தச் சமூகத்தின் அரசியல் கொம்பன் என்றும் தொழிற்சங்க மேதாவி என்றும் தம்பட்டம் அடித்துக்கொண்டு சமூகத்தை எதிரிகளிடம் தொடர்ந்து காட்டிக் கொடுத்துக்கொண்டு இருக்கும்போது... இவர்களை நம்பி எப்படி சமூகத்துள் வாழ்வது...?

இந்த உணர்வுகள் மலையகத்தில் மேற்கிளம்பும் புதிய சமுதாய அமைப்பின் பிரதிநிதிகளின் நிலைப் பாட்டையும் தொழிற்சங்கங்களினதும் அத்தொழிற் சங்கத்தை அடித்தளமாகக் கொண்டு மேற்கிளம்பிய அரசியல்வாதிகளின் போலிமையையும் சுரண்டலையும் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன.

நிலைபெற்றுள்ள தொழிற்சங்கங்களின் அரசியல் பிற்போக்குத்தனம் நிறைந்தது என்ற எண்ண மும் தொழிற்சங்க அரசியல் மீதான நம்பிக்கையீனமும் இளந்தலைமுறையினரிடம் வளர்த்துவருகின்ற யதார்த்தத்தைக் கதைகளில் சிறப்பாக வெளிப்படுத்தி யுள்ள மு. சிவலிங்கம், தொழிற்சங்க அரசியலே வேண்டாம் என்று புறமொதுக்காமல் அப்பிற்போக்குத் தனம் கொண்ட தொழிற்சங்கக் கலாசாரத்துக்கு மாற்றான தொழிற்சங்க அரசியலைக் கட்டியெழுப்புதில் ஆர்வம் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. உதாரணத்துக்கு "பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும்" என்ற கதையில் தொழிற்சங்கச் செயற்பாடு களில் ஈடுபடும் புதிய தலைமுறையினரின் முற்போக்கு எண்ணமும் எதிர்கால மலையகம் குறித்த எதிர்பார்ப்பு களும் போராட்டத்துக்கு அவர்கள் தயார் செய்துள்ள பின்வரும் சுலோகங்கள் மூலம் கண்டுகொள்ள முடிகின்றது:

"உழைப்புக்கேற்ற சம்பள உயர்வு கொடு!
வீடு கட்டுவதற்கு நிலம் கொடு!
தோட்டப் பிரதேசங்களில் தொழிற்
பேட்டைகளைத் திற!
புதிய பரம்பரையினருக்குப் புதிய தொழிலைக் கொடு!
தரிசு நிலங்களைச் சுயதொழிலுக்காக வழங்கு!
எங்கள் பாரம்பரிய நிலத்தில்
குடியேற்றங்கள் செய்யாதே
தோட்டத் தொழிலிலேயே
எங்களை அடைத்து வைக்காதே"

இச்சிந்தனைகள் புதிய மலையகத்தின் வெளிப் பாடுகளாகும். நீண்டகாலமாக நிலைத்து தம்மை வளப் படுத்திக்கொண்டுள்ள தொழிற்சங்கங்கள், தொழிலாளர் களை ஒரு கட்டுக்குள்ளேயே முடக்கி வைத்திருந்ததி லிருந்து வெளியேறத் துடிக்கும் முனைப்பைப் புதிதாக மேற்கிளம்பும் மாற்றுத் தொழிற்சங்கங்களிடம் மு.சிவலிங்கம் எதிர்ப்பார்ப்பதை இங்கு காணலாம்.

பெருந்தோட்டத் தொழிலாளரின் விடிவுக்காக அமைக்கப்பட்ட தொழிற்சங்கங்களும் அத்தொழிற் சங்கங்களின் துணையினால் வளர்ச்சிபெற்ற அரசிய லும் அச்சமூகத்தின் ஐக்கியத்தைச் சிதைத்ததிலும் அவர்களிடையே புதிய முரண்பாடுகளைத் தோற்று வித்ததிலும் முக்கிய பங்குவகிக்கின்றன; அதற்குத் தொழிலாளர்களிடையே நாளுக்கு நாள் பெருகத் தொடங்கிய தொழிற்சங்கங்களும் அவற்றின் அதிகாரப் போட்டிகளும் அடிப்படையாக அமைந்தன. இவற்றையும் மு.சிவலிங்கம் தன்னுடைய கதைகளில் வெளிப்படுத்தி யுள்ளார். எடுத்துக்காட்டாக, தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுக்கொள்வதில்கூட தொழிற்சங்கங்களிடையே ஒற்றுமை நிலவவில்லை என்பதை "மேற்கில் தோன்றிய உதயம்" என்ற கதையில் பதிவு செய்துள்ளதைக் குறிப்பிடலாம். இப்போக்கினால் பொது எதிரிக்கான போராட்டம் மழுங்கிப்போய் தொழிற்சங்கங்களுக்கு இடையிலும் தொழிலாளர் களுக்குள்ளும் முரண்பாடுகளும் எதிர்ப்புக்களும் பெருகி வருகின்றன என்பதை அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மு.சிவலிங்கம் தொழிற்சங்கங்கள்மீது முன்வைக்கும் விமர்சனங்களானவை வெறுமனே தொழிற்சங்கங்களோடு மட்டும் மட்டுப்பட்டவையாக இல்லாமல் தொழிற்சங்க அரசியலை அடித்தளமாகக் கொண்டு வளர்ச்சிபெற்றுள்ள மலையக அரசியலையும் அரசியல் தலைவர்களையும் விமர்சிப்பதாகவும் அமைந் துள்ளமையைக் காணலாம். அரசியல்வாதிகளின் சுயலாபமும் சமூக அக்கறையின்மையும் தொழிற்சங்க அரசியலின் முக்கியத்துவத்தைச் சீரழித்து, தொழி லாளரின் கூட்டுப்பலத்தை நீர்த்துபோகச் செய்கின்ற வாற்றை அவர் மீளமீள பதிவுசெய்ய விழைந்துள்ளார். இதன்மூலம் தொழிற்சங்க அரசியலும் அதிலிருந்து வளர்ச்சிபெற்றுள்ள மலையக அரசியலும் மக்கள்நலன் என்பதிலிருந்து அந்நியப்பட்டுநிற்கின்ற அபத்தத்தை வெளிப்படையாகப் போட்டுடைத்துள்ளார். அத்துடன் அவர் தொழிற்சங்கங்களின் பிற்போக்குத் தனங்களாக காட்டுகின்ற தொழிற்சங்கம் சுரண்டல் நிறுவனம், தொழிற்சங்கம் அமைப்பது இலாபகரமான வியாபாரம், தொழிற்சங்கங்கள் தமது இலாபத்துக்காக மக்கள் போராட்டங்களைச் சொற்ப விலைக்கு விற்கின்றன, போராட்டங்களைத் திசை திருப்புகின்றன என்பவை யெல்லாம் அத்தொழிற்சங்கங்கள் முதலாளித்துவ அமைப்பாக, முதலாளித்துவத்தைப் பாதுகாக்கின்ற அமைப்பாக விளங்குவதையே சுட்டி நிற்கின்றன. தொழிற்சங்கங்களின் இத்தகைய திசை மாறிய பயணத் தாலேயே மலையகத்தில் மாற்றுத் தொழிற்சங்கங்களின் - மாற்று அரசியலின் அவசியத்தை எங்க ஊர் தேர், வடதிசைக் காற்று ஆகிய கதைகளில் அவர் பதிவு செய்துள்ளார்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மலையநாவல் வரலாற்றில் மு.சிவலிங்கத்தின் நாவல்கள்



■ பேராசிரியர் செ.யோகராசா

சிறுகதை உலகில் பிரவேசித்த மு.சிவலிங்கம் நாவல் உலகில் பிரவேசித்து இன்று வரை பஞ்சம் பிழைக்கவந்த சீமை (2016) உயிர் (2012 ) ஆகிய இரு நாவல்களை எழுதியுள்ளார். இவ்விரு நாவல்கள் பற்றியும் பல்வேறு விமர்சனக் கோட்பாடுகளின் அடிப்படையில் அணுக முடியுமாயினும் இவ்வேளை கோட்பாட்டு அடிப்படையில் மலையக நாவல் வரலாற்றில் பெறும் முக்கியத்துவம் பற்றி கவனிக்கின்ற முயற்சியே இடம் பெறுகின்றது.

மேற்கூறிய விதத்தில் முதலில் மலைய மக்களது வாழ்க்கையுடன் தொடர்புபட்ட பின்வரும் விடயங்களை நினைவு கூரலாம்:

1. மலைத்தோட்ட தொழிலாளரின் வரவு : வர வேண்டிய சூழ்நிலை;பிரச்சினை பயணத்தின் போது எதிர்கொண்ட பிரச்சினைகள்
2. ஆரம்ப கால வாழ்க்கை நிலை ; குடியிருப்புமுறை
3. தொழிற்கள வாழ்க்கை சார்ந்த பிரச்சினைகள்
4. பிரஜா உரிமைப்பிரச்சினை
5. தாயகம் செல்ல வேண்டிய சூழல்
6. தொழிற்சங்கச் செயற்பாடுகள்
7. நாளாந்த வாழ்க்கை நெருக்கடிகள்
8. தோட்ட நிர்வாகமும் தொழிலாளர் அனுபவித்த இன்னல்களும்
9. தொழிலாளர்களுக்கெதிரான வன் செயல்கள்
10. தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டமையும் அதற்குப் பிற்பட்ட வாழ்வியலும்
11. சமகால வாழ்க்கையில் காணப்படும் மாற்றங்கள்

மேற்கூறிய விடயங்களுள் முதலில் குறிப்பிட்ட வியடம் தவிர ஏனைய விடயங்கள் பலவும் ஏதோ ஒரு விதத்தில் ஏற்ற இறக்கங்களுடன் பேசப்பட்டு வந்த சூழலில் முக்கியமானதொரு விடயம் மட்டும் பேசாப் பொருளாக இருந்து வந்துள்ளது. அதுதான் பஞ்சம் பிழைக்க வந்த சீதனம் பேசமுற்பட்ட பொருள். அது தான் தென்னிந்திய தமிழர்கள் இங்குவரவேண்டிய சூழலும், பயணம் மேற்கொண்ட போது ஆரம்பத்தில் நீண்ட பயணத்தின் போதும் எதிர்கொண்ட பிரச்சினைகளும் அனுபவங்களும் சார்ந்த விடயமாகும்.

மேற்குறிப்பிட்ட விடயம் பேசாப்பொருளாக இருந்து வந்தமைக்கான காரணம் அதிக தேடலையும் வாசிப்பையும் கடின உழைப்பையும் அது வேண்டி நின்றமையாகும்.

ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களுக்கு பெரும்பாலானோர், பகுதி நேர விரிவுரையாளர்கள் போன்று பகுதி நேர எழுத்தாளர்களாகவிருக்கின்ற சூழலில் அவர்கள் பேசாப் பொருள்கள் பலவுள்ளன அதற்கு விதிவிலக்காகவுள்ள சில எழுத்தாளர்களுள் ஒருவரான மு.சிவலிங்கத்தினால் அவை பற்றி எழுதுவது சாத்தியமாயிற்று. ஆக மேலே குறிப்பிட்டது போன்று தென்னிந்தியத் தமிழர்கள் இங்கு வந்த வரலாறும் ஆரம்ப கால வாழ்க்கை நிலைமைகளும் இணைந்து வர அவை பற்றி விரிவாகப் பேசுகின்ற முதல் நாவலாக இது பரிணமித்திருப்பது பாராட்டப்பட வேண்டிய விடயமாகின்றது.

தமிழகத்திலிருந்து இங்கு புறப்பட்ட சமூக நிலைமை பற்றி மிகச் சுருக்கமாக பேசிய குறுநாவலாக "…. கேணி" சிறிதளவு பேசிய நாவலாக "தூரத்துப் பச்சையும் விளங்குகின்றன. புறப்பட்டோர் மேற்கொண்ட நீண்ட பயணம் பற்றி இவை அதிகம் பேசவில்லை. பின்னர் மலை நாட்டில் எதிர்கொண்ட இன்னல்கள் பற்றியே அவை அதிகம் பேசின. "கண்ணனின் காதலி" அதுபற்றி சற்று விரிவாகப் பேசுகின்றது. அண்மையில் வெளிவந்த மு.நித்தியானந்தனின் "கூலித் தமிழ் கட்டுரைகளூடே சுவையான தகவல் பல வெளிவந்துள்ளன. மாறாக இந்நாவல் தமிழகத்திலிருந்து இங்கு புறப்பட்ட சூழ்நிலை பற்றியும் நீண்ட நெடும் பயண பேரவலங்கள் பற்றியும் மனத்தை நெகிழச் செய்யும் விதத்தில் சித்திரிக்க முற்பட்டுள்ளது.

"துன்பக் கேணியில வெள்ளையன் திருச்சி ஜில்லாவிலிருந்தும் "தூரத்துப்பச்சை" வேலன் இராமனாதபுர ஜில்லாவிலிருந்தும் புறப்பட, இந்நாவலில் வேலாயுதம் திருச்சி ஜில்லாவிலுள்ள கிராமமொன்றிலிருந்து தனது நண்பர்களான அர்ச்சுனன், தாண்டவன், பழனி, ஸ்ரீரங்கன் ஆகியோரோடு வேறு பலருமுட்பட நெடும் பயணத்தை ஆரம்பிக்கின்றான். (1867ல்) அதற்கான நிர்ப்பந்தம் பழைய புதிய காரணங்களோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலாசிரியரால் எடுத்துரைக்கப்படுகின்றது. காட்டு வழிப்பயணம் படகு வழிப் பயணம் பேசாலையை அடைதல், மறுபடி கால்நடைப் பயணங்கள், மதவாச்சி, அனுராதபுரம், தம்புள்ளை முதலான இடங்களில் தங்குதல் வழிநடுவே சிங்களவர், வேடர் முதலானோரைச் சந்தித்தல், கனவுகளில் மீதியோடு மாத்தளையை வந்தடைதல் என்றவாறான நீண்ட பயணத்தினிடையே (இரு நண்பர்களது இழப்பு உட்பட) எதிர் கொண்ட பேரவலங்கள் - பேரிழப்புகள் வார்த்தைகளினால் வர்ணிக்க இயலாதவை.

இப் பகுதிகள் முதன் முதலாக இந் நாவலிலேயே பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதே கவனத்துக்குரியது. வந்து சேர்ந்தோர், தமது தோட்டத்து வாழ்க்கையில் எதிர் கொண்ட பிரச்சினைகள், துயரங்கள் இன்னொரு பகுதியாகவிருக்கின்றன. துன்பக் கேணியிலும், தூரத்துப் பச்சையிலும் கண்ணனின் காதலியிலும் பேசப்படாத பிரச்சினைகள், இடம்பெறாத சம்பவங்கள், இங்கு இடம்பெறுகின்றன. இவ்விதத்திலும் இந் நாவல் புதுமை செய்கின்றது.

வேலாயுதம் தனது பத்தாண்டு (1867 – 1877) கால வாழ்க்கையை முடித்துவிட்டு தாயகம் திரும்புவதோடு நாவலும் முடிந்து விடுமென்ற வாசகர்களது எதிர்பார்ப்பிற்கு மாறாக, வேலாயுதம் சென்ற பின்னர் அவன் வாழ்ந்த தோட்டத்திலேற்றப்பட்ட வரவேற்கக் கூடிய மாற்றங்களும், வேண்டத் தகாத மாற்றங்களும், சுருக்கமாக நாவலாசிரியரால் விவரிக்கப்படுகின்றன. நம்பிக்கை கீற்றோடு நாவல் நிறைவெய்கின்றது.

இந்நாவலில் பல பாத்திரங்கள் நடமாடுகின்றன. எனினும் வாசகர்களுக்கு அதனால் குழப்பங்களேதும் ஏற்படாத விதத்தில், அவர்கள் வந்து செல்வது குறிப்பிடத்தக்கது.

வாசகரை ஈர்க்கக் கூடிய விதத்தில் நாவலாசிரியரது கதை கூறும் ஆற்றலும், மொழி நடையும் வெளிப்பட்டு இந் நாவலுக்கு அழகு சேர்க்கின்றன. அது விபரிப்புத் தேவைக்கேற்ப விஸ்தாரமாகவும் செறிவாகவும் வெளிப்பட்டுள்ளது; மொழிச் செறிவிற்கு எடுத்துக் காட்டாக ரொட்டித் துண்டுகளுக்கு முன்னே அவர்களது கிராமிய உலகம் மண்டியிட்டது என்றும் கால்பதித்த அடையாளமே பாதை என்றும் வரும் பகுதிகள் இவ்வேளை நினைவிற்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. மிகப் பொருத்தமான மலையக நாட்டார் பாடல்கள் மிகப் பொருத்தமான இடங்களிலே ஆங்காங்கே இடம் பெற்று இந்நாவலுக்கு மேலும் அழகுசேர்க்கின்றமை குறிப்பிடத்தக்கது.

ஆக, பேசாப்பொருள் பற்றிப் முதன் முதல் பேச முற்பட்ட இந்நாவல் மலையக நாவல் வரலாற்றிலும் நிரந்தரமாகப் பேசப்படுமென்பதில் ஐயமில்லை!

மு.சிவலிங்கத்தின் மற்றொரு நாவலான "உயிர்" முற்குறிப்பிட்டவாறான மலையகப் பிரச்சினைகள் பற்றிப் பேச முற்படவில்லை. மாறாக உலகளாவிய மனித சமூகம் சார்ந்த பிரச்சினை பற்றிப் பேசமுற்படுகிறது. மருத்துவ உலகம் சார்ந்ததாக அது அமைகிறது.

புனைகதையுலகம் குறிப்பிட்ட சமூகம் சார்ந், குறிப்பிட்ட பிரதேசம் சார்ந்த, குறிப்பிட்ட நாடு சார்ந்த பிரச்சினைகள் பற்றிப் பேசலாம். அதேவேளையில் மனித குலத்தின் அடிப்படைப்பிரச்சினைகள்; பற்றியும் பேசலாம். ஒரு காலகட்டத்து ஐரோப்பிய நாவல்கள் (எ-டு: பசி, அவமானச்சின்னம், நிலவளம்) அவ்வாறமைந்திருந்தமை பற்றி (எ-டு :க.நா.சு, புதுமைப்பித்தன், தொ.மு.சு, தி.ஜானகிராமன் முதலானோரது மொழி பெயர்ப்புகள்) தேர்ந்த நூல் வாசகர் அறிந்திருப்பர். அவ்வாறே மனித அடிப்படை உணர்ச்சிகள் பற்றி அன்ரன் செக்கோவின் பல சிறுகதைகள் பேசியிருப்பதையும் (எ-டு: குதிரை வண்டியோட்டியின் துயரம்; ஒரு எழுது வினையனின் மரணம்) அறிவோம். தமிழில் ஒப்பீட்டளவில் இவ்வாறான படைப்புகள் பெருமளவு எழவில்லை. மேற்குறிப்பிட்ட ஆரோக்கியமற்ற சூழலில் "உயிர்" நாவல் மருத்துவ உலகம் சார்ந்து அடிப்படை பிரச்சினைகள் பற்றிப் பேசுகின்றதென்பதே எமது கவனத்திற்குரியது. எனினும் மருத்துவ உலகம் சார்ந்து ஈழத்தில் வேறு நாவல்கள்எழுந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை. தங்கச்சியம்மா (நந்தி - 1977), கழுகுகள் (தெணியான் - 1981), வைகறை (கோகிலா மகேந்திரன் - 1987) தூர் தொடுவானம் (பொன்.கணேசமூர்த்தி - 1995), நோயில் இருத்தல் (மு.பொன்னம்பலம், 1999) கர்ப்ப நிலம் (குணா கவியழகன் 2018) ஆகியன அத்தகையன. ஆயினும், இவை மருத்துவ உலகம் சார்ந்த ஏதோ ஒரு பிரச்சினையை பற்றியே பேசுகின்றன. அவ்வாறு பேசும் ஒவ்வொரு நாவலும் சமமாக வேறொரு பிரச்சினை பற்றி முக்கியப்படுத்தவும் முற்படுகின்றன. அல்லது "பத்தோடு பதினொன்றான" பேசுகின்றன. அல்லது பிரதேச நாவலாக பிரச்சார நாவலாக உருவாகி விடுகின்றன. இத்தகை ஆரோக்கியமற்ற நிலையில் அத்தகை ஈழத்து நாவல்களின் நோக்கிலும் போக்கிலுமிருந்து இந்நாவல் விலகி அடிப்படைப்பிரச்சினைகள் பற்றியதாகி மருத்துவ உலகினை முழுமைப்படுத்தி, அவ்வுலகினை உலகளாவிய நிலைக்கு அகற்சிப்படுத்தியுள்ளது என்பதே கவனத்திற்குரியது!.

அதாவது மனிதர்களை ஆட்டிப்படைக்கும் பயங்கரமான நோய்கள்... அவற்றோடு கணந்தோறும் போராடும் நோயாளிகள்... அவர்கள் தங்கியிருக்கும் வைத்தியசாலைகள்... வியாபாரமே இலக்கான மருந்து விற்பனையாளர்கள்... தரகர்கள்... காலாவதியான மருந்துகள்... கொள்ளையர் உலகமான தனியார் வைத்தியசாலைகள்... மனித நேயமற்ற பணியாளர்கள்... மனித நேயமுள்ள பணியாளர்கள்... அவ்விதத்தில் அவர்களுக்குரிய சவால்கள்... வைத்தியசாலைகளில் எப்போதாவது நிகழும் பாலியல் துஷ்ப்பிரயோகங்கள்... என்றவாறு மருத்துவ உலகப் பிரச்சினைகள் இனி இல்லையெனுமளவிற்கு "எக்ஸ்றே" கண்கொண்டு படம் பிடித்துள்ளது...! அதுமட்டுமன்றி மேலைத்தேய நவீன வைத்தியமுறைகள், பாரம்பரிய வைத்திய முறைகள் ஆகிய இரு வேறு வைத்திய முறைகளின் நிறை குறைகளை அணுகி, அவை இரண்டுமே இணைந்து உருவாக வேண்டிய வைத்திய முறை பற்றியும் குறிப்பிட்டு மருத்துவ உலகினரைச் சிந்திக்கவும் தூண்டுகின்றது. சுருக்கமாகக் கூறின், இந்நாவலை மேலும் விரிவாக எழுதியிருக்கலாமென்பதைத் தவித்து விட்டு நோக்கும் போது மலையக எழுத்தாளரொருவர் எழுதிய இந்நாவல் மலையகத்திற்கு மட்டுமன்றி ஈழத்து நாவல் செல்நெறிக்கும் புது ரத்தம் பாய்ச்சியுள்ளது என்பதில் தவறில்லை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

மு.அநாதரட்சகன்

# சமூக நீதியைக் கோரி நிற்கும் கதைகள்... மு.சிவலிங்கத்தின் "ஒரு விதை நெல்" சிறுகதைத் தொகுப்பை முன்வைத்து



தொண்ணூறுகளில் வெளிவந்த "ஒரு கூடைக் கொழுந்து" - இந்த நூற்றாண்டின் ஈழத்துச் சிறுகதைகள் (தொகுப்பாசிரியர்கள் யோ.சுந்தரலட்சுமசி, செ.யோகநாதன்) என்ற கதைத்தொகுப்பில் இடம்பெற்ற "என்ன பெத்த ஆத்தா" என்ற கதையின் வழி எனக்கு அறிமுகமானவர் மலையகத்தின் மூத்த எழுத்தாளர் மு.சிவலிங்கம். எப்பவோ படித்தகதை இன்னும் மனதை நெகிழ வைக்கிறது. நோயுற்று கண்டி ஆஸ்பத்திரியில் இறந்துபோன அபலைப் பெண்ணொருத்தியின் பிணத்தை வீட்டுக்கு எடுத்து வருவதில் நிகழும் சம்பவங்களை கதை விபரிக்கிறது. மிக நேர்த்தியாக படைக்கப்பட்ட கதை அது. அக்கதை தந்த அனுபவத்தையே அவரது "ஒரு விதை நெல்" என்ற சிறுகதைத் தொகுப்பிலுள்ள பல கதைகளும் தருகின்றன. இக்கதைகளைப் படித்ததில் வலிகளைச் சுமந்து திரிகின்ற உழைக்கும் மக்களின் ஆன்மாவைத் தரிசிக்க முடிந்தது.

ஈழத்தின் மூத்த படைப்பாளியான மு.சிவலிங்கம் 1962ல் எழுதத் தொடங்கியவர். பத்திரிகையாளர், கார்ட்ருனிஸ்ட், நடைச்சித்திரக்காரர், தொழிற்சங்கவாதி, திரைப்படக்கலைஞர், எழுத்தாளர் என பன்முகம் கொண்டவர். இலக்கியத்துக்காக பல விருதுகளையும் பெற்றவர்.

இத் தொகுப்பிலுள்ள கதைகள் மலையக மக்கள் அனுபவிக்கநேர்ந்த துன்பம், துயரம், வாலிகள், சோகம், ஏக்கம், கோபம், போர்க்குணம் என்கின்ற உணர்வுகளின் வெளிப்பாடாக உருக்கொண்டுள்ளன.

மலையகத்தின் அடிநிலை மாந்தரின் வாழ்வியல் மதிப்பீடுகளையே பல தளங்களில் இக்கதைகள் பேசிச் செல்கின்றன. இம் மக்களது வாழ்வுக்கான நியாயங்கள் அதிகாரவர்க்கத்தினால் கண்டு கொள்ளப்படாது எவ்வாறு அடக்கி யொடுக்கப்படுகின்றன என்பதை மண்ணின் மனம் மாறாமல், மக்களின் பேச்சு மொழியில் தந்திருப்பது சிறப்பானது.

பிரிட்டிசார் காலத்தில் தமிழ் நாட்டிலிருந்து பெயர்ந்து வந்த மலையக மக்கள் இன்னமும் அல்லல்கள் சுமந்து நிற்கின்றார்கள் என்பது குறித்த துயரம் இக்கதைகளின் பொதுத்தன்மையாக இருக்கிறது. அம்மகளில் ஒருவராக வாழ்ந்து கழித்த படைப்பாளியின் அனுபவப்பதிவுகளே இக் கதைகள். இத்தொகுப்பில், அம்மக்கள் படும் துயரங்களை நார் நாராகக் கிழித்தும், கோர்த்தும் காட்டுவது போல 15 கதைகளை எழுதியுள்ளார்.

தன்னலமற்ற அதிபர் ஒருவருக்கு நேர்ந்த கதிபற்றி "ஒரு விதை நெல்" என்ற மகுடக்கதை பேசிச் செல்கிறது. அதிபர் ஆறுமுகம் தோட்ட அதிகார வர்க்கத்தினால், அரசியல் வாதிகளால் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறார் என்பதைக்கூறுகிறது. கதையைப் படித்ததில் தன்னல மற்ற அந்த அதிபருக்கு மாணவரது பெற்றோர்களின் ஆதரவு ஏன் கிடைக்கவில்லை என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

பொன்னி என்ற பெட்டை நாயை வளர்த்த பிச்சைக்காரப்பாட்டி, பாட்டி இறந்த பின், உணவுக்காக அலைந்துலைந்த பொன்னிக்கு நிகழ்ந்ததை கதை கூறு வருகிறது. கதையில் அரசியல் வாதிகள், மந்திரிகளின் அடிவருடிகளின் திருது தாளங்களை எள்ளலுடன் சொல்லிச் செல்வது சுவாரசியமானது.

தொகுப்பின் இன்னொரு கதை "சாரய புரம்" என்பது தோட்டத்தில் புதிதாக சாராயபார் அதில் பீடி கந்தையாவின் உயிர்காவு கொள்ளப்படுகிறது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதையில் ஒருபகுதி இப்படி நீள்கிறது.


"இந்தப் பகுதியில் ஏற்கனவே பழைய அர சாங்கம் கொடுத்த அங்சி பாரு இருக்குங்க. ஒடைச்சி சொன்னா மூனு கிலோ மீட்டருக்கு ஒரு பாரு இருக்கு துங்க. இப்போ புது அரசாங்கம் வந்ததும் இன்னும் நாலுபாரு இதே பகுதியில போடப்போறாங்களாம். இந்த பாருகள போடுறத ஆதரிக்கிற ஒரு கோஸ்டிக் கும், பழைய பாரு, புதுபாரு எல்லாத்தையும் ஒழிச்சுக் கட்டணு முன்னு எதிர்ப்பு காட்டுற இன்னொரு கோஸ்டிக்கும் இந்த மாசம் முழுவதும் ஒரே தகராறு. தகராறு முற்றி கடைசியில் கொலையில் முடிஞ்சு போச்சு... என்றார் சிவனாண்டி ரெயிலர். இக்கதை மது அரக்கன் மலையக சமூகத்தைச்சீரழிக்கும் விதத்தைக் கூறவருகிறது. எதிராகப் போராடத் துணிந்த தலைமுறை பற்றிய நம்பிக்கையும் விதைக்கிறது.

"மார்கழிப் பனி" என் கிறதை விட்டு வேலைக்கா பணக் கார வீடுகளுக்கு (கொழும்பில்) செல்லும் பெண்கள் முகம் கொள்ளும் சிக்கல்கள் பற்றியது இக்கதை. மனைவியை வேலைக்கு அனுப்பிவிட்டு பரிதவிக்கும் கதிர் வேல், சட்ட அங்கீகாரமும், பாது காப்புமற்ற நிலையில் பெண்களை வேலைக்கு ஆள் பிடித்துக் கொடுக்கும் ஏஜெண்டு பழனிச்சாமி பற்றியெல்லாம் விபரிக்கிறது.

தோட்டத்தொழிலாளர் களின் அன்றாட வேலைகளில் எதிர்கொள்ளுகின்ற பாடுகளை, சிரமங் களை கழிவிரக்கத்துடன் "நோட்டம்" கதை விளம்புகிறது.

தொகுப்பின் "பன்றியோடு சேர்ந்த எருமை மாடுகளும்" என்ற கதை. சம்பள உயர்வுகோரிய தொழி லாளர்களது வேலை நிறுத்தப் போராட்டம் குறித்தது.

இப்போராட்டம் 62 நாட்கள் நீடிக்கையில் பசி, பட்டினிக்குத் தாக்குப்பிடிக்க முடியாமல் தொழிலாளர் கள் அல்லாடுகின்னர். இது அரசுக்கும், கம்பனிக்கும் வாய்ப்பாகிறது. இதனை சாதகமாக்கி போராட்டம்




தீர்வேதுமின்றி ஒடுக்கப்படுகிறது.

தொழிலாளர்களிடம் மாதாந்தம் சந்தா வசூலிக்கின்ற தொழிற்சங்கங்களின் முன்னேற்பாடற்ற தன்மையையும் இறுதியில் நியாயமான போராட்டத்தை சலுகைகளுக்காக தலைவர்கள் காட்டிக் கொடுகின்ற அவலத்தையும் இக் கதையில் தரிசிக்க முடிகிறது.

கதையில்,

பசியில் வந்து அமர்ந்த மணிவேல் ருசித்துச் சாப்பிட்டுக் கொண்டிருக்கையில், சடாரென்று வெட்கித்திரும்பியவள்,

"எருமமாடு" பலவாக்கட்டையில ஒழுங்கா ஒக்காரத்தெரியாது, வேட்டி கட்ட தெரியாட்டி கோவணத்தையாவது கட்டிக்கணும்" என்றாள்.

"அடிப்போடி... அங்கயாரு ஒன்னப்பாக்கச் சொன்னது"

ஏழ்மையிலும் ஊடலும், அங்கதமும் கனத்து நிற்கும் வரிகள், மீண்டும் மீண்டும் ரசித்துப் படிக்கும் படியான வரிகள்.

தொகுப்பின் முக்கியமான கதைகளில் "இதுவும் ஒருகதை" என்பது ஒன்று, 1958ல் கொண்டுவரப்பட்ட பிராஜா உரிமைச்சட்டம் 1964ல் வந்த சிறிமா சாஸ்திரி ஒப்பந்தம் என்பன மக்களை வேரடிமண்ணோடுகிளப்பி நாட்டைவிட்டுத்துரத்தியதை வரலாற்று உணர்வோடு பேசிச் செல்கிறது.

"போங்கடா வாயி... வக்காளிகளா...!எனக்கு பெரசாவுரிமையும் வேண்டாம்... ஒரு இதுவுமும் வேண்டாம்... என் வாயில நல்லா வருது... நா... பேசவேண்டிய எடத்துல பேசிக்கிறேன்..." என்று உதறிதோளில் போட்டுக் கொண்டு கணபதி விசாரணை மண்டபத்தில் சத்திட்டான், பிறந்த மண்ணில் இப்படியொரு விசாரணையை முகம் கொள்வது அவனுக்கு மனித உரிமை மீறலாகவே படுகிறது.

தேயிலைச் செடியை நாற்றில் பதியமிடுவதில் கைதேர்ந்த வயோதிபத் தொழிலாளி தவறணைராமு அதில் பழுத்த அனுபவம் கொண்டவர். வேலை நுட்பங்களைத் தெரிந்தவர். முதுமை கடக்கும் வயதில் நிர்வாகத் திடம் ஒய்வு கேட்டும் கிடைக்கவில்லை. தனது பென்சன் பணம் தொள்ளாயிரத்தை எண்ணி மனதில் எத்தனையோ திட்டங்களைத் தீட்டியிருந்தார். இறுதியில் அப்பென்சன் பணத்தைப் பெறாமலே இறந்து மண்ணுக்கு உரமாகிறார். அவரது ஒரே மகளான பொட்டுவும் தனித்து விடுகிறாள் என்பதை "இதுவும் ஒரு கதை" விபரிக்கிறது.

அடுத்து தோட்டங்களில் வேலைக்கு ஆட்களை பேர்பதிவது என்பது சாதாரண நடைமுறை. இளம் கூலிப்படையொன்றை தேர்வு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதற்கு நேர்முகப் பரீட்சை நடக்கும். அதுவும் தோட்ட நிர்வாகி, தலைமைக் கிளாக்கர், கணக்குப் பிள்ளை, கமிட்டித் தலைவர்மாரின் தலையீட்டிலேயே நடக்கும். பெயர் பதிய வந்த இள வயதினரில் ஆறு பெண்களே பதியப் படுகிறார்கள். ஏனையோர் ஏமாற்றமடைகிறார்கள். அவர்கள் ரவிச்சந்திரன் என்ற இளைஞனின் தலைமை யில் அணி திரண்டு, சுயதொழில் வாய்ப்புகளை ஏற்படுத் தும் திட்டத்துக்கு தம்மை தயார்ப்படுத்திக் கொள்வ தாக, "ஓர் இள வேனிற்காலம்" என்ற கதை நகர்கிறது.

"நிலைமை கொஞ்சம் உயரும் போது" என்கிற கதை யதார்த்தப் பாங்கிலானது. மலையகத்தில் உயர் கல்விகற்று மேனிலையாக்கம் அடைந்தோர், இறுதியில் குடும்ப, சமூக உறவுகளைத் துறந்து அந்நியமாகி விடுகின்ற அவலத்தைச் சொல்கின்றது. புதிய சமூக மாறுதலின் மறுபக்கம் கதையில் விபரிக்கப்படுகின்றது.

"அனல் காற்று" என்ற கதை தோட்ட நிலத்தை அரசு சுவீகரித்து சிங்கள மக்களுக்கு வழங்க எடுத்த முடிவை எதிர்த்த மக்கள் போராட்டம் பற்றியது. இப்போராட்டத்தில் தீவிர பங்கெடுத்த ஆனந்தன் என்ற இளைஞன் மர்மமாகக் கொலை செய்யப்படுகிறான். பலவந்தமான திட்டமிட்ட குடியேற்றம் மக்களது இருப்பைச் சிதைத்த அவலத்தை இக்கதை கூறுகிறது. இப்போராட்டத்திலும் தொழிற்சங்கத் தலைமைகள் அதிகாரத்துக்கு விலை போய் விடுகிற அவலம் சித்திரிக்கப்படுகிறது. சிங்கள பேரினவாதம் மலையக மக்களையும் விட்டு வைக்கவில்லை என்பதை சில கதைகளில் உணர முடிகிறது!

தொகுத்துப் பார்க்கின், இத்தொகுப்பிலுள்ள கதைகள் சமூக நீதியை மறுத்து அதிகாரம் செலுத்து வோரை மனித விரோதிகளாகவே சித்திரிக்கின்றன. சமூகத்தின் எல்லாத் தளங்களிலும், சமத்துவமின்மை யைப் பேணி வரும் அதிகார வர்க்கத்தின் இழிவுகளை வன்மத்துடன் கூற முனைகின்றன. எதை, எப்படி, யாருக் காக எழுதுவது என்பது எழுத்தாளனின் வரக்கச் சார் புடன் தொடர்புபட்டது. இங்கு இந்நூலின் ஆசிரியர் மிகத் தீர்க்கமான சார்புநிலை எடுத்து உழைக்கும் மக்களின் பக்கம் நிற்கிறார் என்பது முக்கியமானது.

அத்துடன் இக்கதைகளில் வெளித்தெரியும் உலகம் துயரம் சூழ்ந்த உலகம். ஏழ்மை, ஏக்கம், ஏமாற்றம், ஏற்த்தாழ்வு இவைகளில் உழலுகின்ற உலகம். இவ்வுலகின் சாராம்சமே துயரம்தான். அத்துயரம் வாசக மனதிலும் சங்கடத்தினை ஏற்படுத்தும் வகையில் இக்கதை உருப்பெற்றுள்ளன. தவிர, மலையக மண்ணின் வனப்பி னூடே மக்களின் சோகமும் கதைகளில் முன்னிற்பது சிறப் பானது. சிலவற்றில் குறுக்கீடுகளாக (நெருடல்களாக) வந்து வாசக மனதைத் தீண்டுவன பற்றியும் குறிப்பிட்டாக வேண்டும். கதைகளில் செய லூக்கமற்ற ஒரே வார்ப்பான பாத்திரங்கள், எடுத்துரைப்பு முறை, சித்திரிப்புகள் சலிப்பைத் தருகின்றன. ஆசிரியரின் விளக்கங்களும், உரைகளும் சில இடங்களில் எல்லை மீறிச் செல்கிறது. அத்துடன் கதைகளின் தலைப்பு களிலும் கவனம் செலுத்தியிருக்கலாம் போலப்படுகிறது. இவை சில கதைகளின் இயல்புக்கு ஊறு விளைவிக்கின்றன.

இறுதியாக,

மக்கள் மீதான ஒடுக்குதல்களுக்கு எதிரான மலையக எழுத்தாளர்கள் பலரும் எழுதுவது ஒப்புக்காக வல்ல. அது அவர்களது நிஜ வாழ்க்கை பற்றியது. அவர்களது வாழ்வியல் இருப்பே ஒடுக்குமுறையை எதிர்ப்பதில்தான் வேர் கொண்டுள்ளது.

மலையகப் படைப்புலகம் என்பதே, தன்னள வில் ஒரு எதிர்ப்புச்செயற்பாடுதான். அவ்வகையில், "ஒரு விதை நெல்" என்கின்ற இத்தொகுப்பிலுள்ள கதை களிலும் எதிர்ப்பு முக்கிய பண்பாயுள்ளது. அத்துடன் இக்கதைகள் அனைத்தும், அந்த மண்ணின் அதிகார வர்க்கத்துக்கும், உழைப்பாளி வர்க்கத்துக்கு இடை யிலான முரணை மூல ஊற்றாகக் கொண்டுள்ளன. அந்த முரணின் சூட்டிலிருந்து பிறந்தவையே இக்கதைகள் என்பது சிறப்புக்குரியது.

---

தமிழகத்தின் மூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அரச குடியிருப்பு. லாசு பேட்டை. புதுவை.- ஒப்பாரி கோச்சி'' - 2010

.

பிஜித் தீவினிலே தமிழ்க் கூலிப்பெண்கள் சொல்லி அழும் ஒப்பாரியை காற்று வழியாக பாரதியின் காதில் விழுந்ததை "கரும்புத் தோட்டத்திலே" என்று பாடிய கவிதையை படித்துக் கண் கலங்கினோம். புதுமைப்பித்தனின் துன்பக்கேணியைப் படித்து மனம் கலங்கினோம். இப்போது மு.சிவலிங்கம் எழுதிய ஒப்பாரிக் கோச்சியைப் படித்து உள்ளம் அதிர்ந்தோம்.. மலையக மண்ணில் பாரதியின் சொற்கள் இப்போதும் அப்படியே இருக்கிறது.

இலங்கையில் போர் நடந்தது... இருபக்கமும் ஆயுதம் ஏந்திய போர் என்றால் பல வருடங்கள் நீடித்தாலும் ஒரு முடிவுக்கு வந்து விடும். மலையகத்தில் நடப்பது வாழ்நாள் போர்.... இருநூறு ஆண்டுகாலம் ஆகியும் முடிவுறாத வாழ்க்கைப் போர்.....ஒரு இனத்தை மறு இனம் அழிக்கும் போர்..... தந்திரம்தான் இனவாதிகளின் ஆயுதமாகவிருந்தது. மலையக மக்களிடம் ஒரேயொரு ஆயுதம்தான் இருந்தது. அது ஓட்டு என்கிற ஆயுதம்!. அதை ஒரு ஒப்பந்தம் போட்டு பரித்து விட்டார்கள். (சாஸ்திரி சிறிமா ஒப்பந்தம்)

இருநூறு ஆண்டுகாலம் என்பது எத்தனை தலைமுறைகள்...? அங்கேயே- அந்த மண்ணிலே பிறந்து. வளர்ந்து- அங்கேயே உழைத்த மக்களுக்கு உரிமை கிடையாது என்பது உலகில் எந்த அரசியல் சாஸ்திரத்தில் சொல்லியிருக்கிறது?

ஒப்பந்தம் செய்து இம்மக்களின் தொகை குறைப்பு...! பிறகு குடும்பக் கட்டுப்பாட்டு திட்ட மூலமும் தொகை குறைப்பு...!

தொழிற்சங்கங்கள்.. கட்சிகள். என்று தலைவர்மார்களெல்லாம் இருந்தும் அவர்களின் தகுதிகள் எந்தளவில் இருக்கிறது என்பதையும் இக்கதைகளில் பார்க்க முடிகிறது. இத்தொகுப்பிலுள்ள சிவலிங்கத்தின் ஏனைய கதைகள் அனைத்தும் இந்த சமூகத்தின் ஒவ்வொரு தகவலையும் உருக்கமாகச் சொல்லிக்கொண்டிருக்கின்றன. அவைகளை நானும் விலாவாரியாக விவரிக்க வேண்டியது அவசியமாகாது என்று எண்ணுகின்றேன். "ஒப்பாரிகோச்சி" கதையை. தீராநதியில் பிரசுரம் செய்வதற்கு ஏற்பாடு செய்துள்ளேன். மு.சிவலிங்கம் சமூகத்தை ஊடுருவி அவதானிக்கும் ஒரு படைப்பாளியாகவே எனக்குத் தென்படுகிறார். சிறப்பானதொரு சிறுகதைத் தொகுப்பினை இன்றைய தமிழ் சிறுகதை உலகத்துக்கு வழங்கியிருக்கும் இவரை மனமாற பாராட்டுவதில் நான் மகிழ்ச்சி கொள்கின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ மு.சிவலிங்கம்

# கேட்டிருப்பாயோ... காற்றே...!



இவ்வளவு காலமும் சிங்களச் சண்டியர்கள்தான் வீடுகளுக்கு நெருப்பு வைத்து, தமிழர்களை விரட்டித் துரத்திய சம்பவங்களைப் பார்க்க முடிந்தது.. இப்போது... தமிழ்ச் சண்டியர்கள் தமிழர்களின் வீடுகளுக்கு நெருப்புவைத்து, அடித்துத் துரத்து வதைப் பார்த்த வேலாயுதம் மாஸ்டரின் கண்கள் நம்ப மறுத்தன.. அச்சம்பவம் கனவில் நடப்பதாக நினைத்துக் கொண்டிருந்த அவரின் சட்டையைப் பிடித்து ஒருவன் இழுத்துத் தள்ளும் போதுதான் சுய உணர்வு வந்தது...! நடப்பது உண்மை சம்பவமே என்று.. விழுந்தவர் எழுந்து மெதுவாக நடந்தார்....

சக தமிழனிடம் அப்படி அடி வாங்குவதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.. உடலில் ஏற்பட்ட வலியை விட மனதில் அடிபட்ட வலியை அவரால் ஜீரணித்துக்கொள்ள முடியவில்லை..

இனி... தமிழர்களோடும் சேர்ந்து வாழ நினைத்த நம்பிக்கை அற்றுப் போனதாய் அவர் மனம் விரக்தியடைந்தது... கடைசி காலத்தில் இனத்தோடு இனமாய் சேர்ந்து வாழலாம்... என்ற நப்பாசையும் இன்றோடு விட்டுப் போனது....

***

வேலாயுதம் மாஸ்டர் காலி மாவட்டத்தில் நடந்த இனக் கலவரத்தில் அடிபட்டு, கட்டியத் துணியோடு மனைவி, மக்களை இழுத்துக் கொண்டு, செட்டிக் குளத்துக்கு வந்துச் சேர்ந்தவர்.

குருவி மாதிரி நாற்பது வருசங்கள் உழைத்துச் சேமித்தப் பணத்தில் வீடு கட்டி, தோட்டம், துறவு தேடி, இரண்டு மகன்மார்களையும் ஒரு மகளையும் வளர்த் தெடுத்த இறுமாப்பில் வாழ்ந்துக் கொண்டிருந்த போதுதான் 77 ம் ஆண்டு ஆடிக் கலவரம் முதற் கட்டத்தை ஆடி முடித்தது.

இரவு ஏழு மணி கூட ஆகவில்லை... மாஸ்டர் வீட்டுக் கதவு உதைக்கப்பட்டது, பின்னர் உடைக்கப் பட்டது..பெற்ரோல் கேனை வீட்டுக்குள் விசிறினான் ஒருவன்.. "பன பேராகென துவப்பன் எலியட்ட.." உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வெளியே ஓடு..! என்றான் இன்னொருவன்..அவனைத் தொடர்ந்து திமு.. திமு..வென காடையர் கூட்டம் வீட்டுக்குள் நுழைந்தது.. ஏற்கனவே வதந் தியைக் கேள்விப்பட்டிருந்த வேலாயுதம் மாஸ்டர் விசயத்தைப் புரிந்துக் கொண்டு, மனைவி, பிள்ளைகளோடு வெளியே ஓடி வந்தார்..

பெற்ரோல் தீயில் வீடு குபீரென எரிந்து வெளிச் சத்தைக் காட்டியது.. கம்பு, கத்தி ஆயுதங்களுடன் விரட்டி வருபவர்களிடம் அகப்படாமல், ஓடி மறைந்து, பதுங்கிப் பதுங்கி.. கால்கள் காட்டிய பாதையில் எங்கோ விளக்கெரியும் ஒரு வீட்டருகில் போய் நின்றார்கள்.. அதுவும் ஒரு சிங்களக் குடும்பம்.. திரும்பிப் போக நினைத்தவர்களை, அவர்கள் அழைத்து வீட்டுக்குள் மறைந்திருக்கும்படி சொன்னார்கள். அக்கம் பக்கத்திலும் தூரத்திலும் சத்தங்கள்.. ஓலங்கள்.. அதிர்ச்சியைக் கொடுத்துக் கொண்டிருந்தன.. வீட்டுக் காரர்கள் வேலாயுதம் குடும்பத்துக்கு ஆறுதல் சொன்னார்கள்..

இரவுசாப்பாடும்... மாற்றுத் துணிகளும்.. கொடுத்தார்கள்.. விடிந்ததும் ஊருக்கு வெளியே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழைத்து வந்து பஸ் ஏற்றி விட்டார்கள்..பிரயாணச் செலவுக்குப் பணமும் கொடுத்தனுப்பினார்கள்..

அவர்கள் இனவாதிகளுக்கும், அரசியல்வாதிகளுக்கும் அப்பாற்பட்ட மனிதாபிமானிகளாக இருந்தார்கள்..

***

காலி, நாக்கியா தெனிய தோட்டத்திலிருந்து, துரத்தப்பட்டபோது மூட்டை, முடிச்சுக்கள் கிடையாது! கட்டியத் துணியோடுதான் ஓடி வந்தனர்.. இன்று வவுனியா செட்டிக்குளத்திலிருந்து துரத்தப்பட்டபோதும், மூட்டை, முடிச்சுக்கள் கிடையாது...! கட்டியத் துணியோடுதான் நின்றனர்.

விடிய... விடிய.. குழந்தை, குட்டிகளோடு நெடுஞ்சாலை தார் ரோட்டில் உட்கார்ந்துக் கிடந்து, விடியற்காலையில் எழும்பி குடியிருந்த காணிகளை, அத்தனைக் குடும்பங்களும் போய் பார்த்தனர்.. குடிசைகள் சாம்பல் மேடுகளாய் கிடந்தன..பயிர்களுக்கு எந்த சேதமும் நடக்கவில்லை.. அதுவரை அவர்கள் மனதைத்திடப்படுத்திக் கொண்டார்கள்..

செட்டிக்குளம் டி.ஆர்.ஓ. காரியாலயத்தை அதிகாலையிலேயே போய் முற்றுகையிட்டார்கள்.. முற்றுகையிட்டார்கள் என்றுகூட சொல்ல முடியாது,. அவர்கள் போராட்டம் செய்யும் ஆவேசத்திலோ, நீதி கேட்கும் நோக்கத்திலோ இல்லாமல், அபயம் கேட்கும் நிலையில் மருவி நின்றார்கள்.. ஒன்பது மணியளவில் டி.ஆர்.ஓ. காரில் வந்து இறங்கினார். காரியாலயத்துக்குள் நுழையாமலேயே படிக்கட்டில் ஏறி நின்று, குழுமியிருக்கும் கூட்டத்தைப் பார்த்து பிரசங்கம் செய்வது போல பேசத் தொடங்கினார்.அவரின் பேச்சிலிருந்து முன் கூட்டியே நடந்த சம்பவங்கள் யாவும் அவர் அறிந்தவையாகவிருந்தன..

“நீங்கள் மலைநாட்டிலிருந்து வந்தச் சனங்கள்...! யாரையும் கேக்காமல், காணி பிடிச்சு குடிச போட்டு, விவசாயமும் செய்தனீங்கள்...!உங்களுக்கு யார் அதிகாரம் தந்தது,.? யார் கொட்டில் போடச் சொன்னவை..? யார் காணி பிரிச்சுக் கொடுத்தவை..? சொல்லேலுமோ..?” என்று உரத்தத் தொனியில் வினாக்களைத் தொடுத்தார்.

“ஐயா..! நாங்க அகதி சனங்க.. எங்க குடிசைகள எரிச்சிட்டாங்க...! காணியில நிக்க வுடாம வெரட்டிட்டாங்க...!எங்களுக்குப் போக ஊர் கெடையாது.. கலவரத்துல காலியிலயிருந்து சிங்களவங்க வெரட்டியடிச்சாங்க.. புள்ளக் குட்டிகளோட உயிரப் பாது காத்துக்கிட்டு, இங்க ஓடி வந்தோம்.. இங்கேயும் அடிச்சு கலைச்சா நாங்க எங்க போறது..? எங்க உயிர் வாழ்றது..? நீங்களேதான் அரசாங்கம்... நீங்கதான் எங்களுக்கு ஒதவி செய்யணும்...!” என்று கூட்டத்திலிருந்த ஒருவர் தெளிவாகப் பேசினார்..

அரசாங்க அதிகாரிக்குக் கோபம் வந்து விட்டது... “சும்மா விசர் கதை கதைக்காதே...!” என்று பாய்ந்தார்...“கொட்டில்கள எரிச்சிருப்பினம்...!ஆக்கள விரட்டி இருப்பினம்...!ஊர் சனங்கள் குழம்பும் போது, எங்களாலை ஒன்டும் செய்யேலாது.. நீங்க நல்லபடியா உங்கட ஊர் பக்கம் போய்ச் சேருங்கோ..! நாங்க எங்கட சட்டம் ஒழுங்க கவனிக்க உதவி செய்யுங்கோ..!” என்று பேச்சை முடித்து, திரும்பிப் பார்க்காமல் காரியாலயத்துக்குள் நுழைந்து விட்டார். பியோன் வந்து கதவைச் சாத்தினான்.

விக்கித்து நின்ற குடும்பங்கள் மத்தியில் மரண அமைதி நிலவியது.. அங்கே வந்திருக்கும் அத்தனை குடும்பங்களும் டி.ஆர்.ஓ. காரியாலயத்தின் அருகிலேயே உட்கார்ந்து விட்டனர்.. போக்கிடம் தெரியாத நிலை... “அந்த அரசாங்க அதிகாரி, நாங்க காடு வெட்டுறப்பவே எங்கள வெரட்டியிருக்கலாம்..

அந்த மனுசன் கபடக்காரன்.. துரோகத்தனமா எங்கள பாவிச்சியிருக்காரு..! காடுகள அழிச்சி.. காணி உண்டாக்கி..கெணறு வெட்டி, பயிர் பச்ச வளந்தப் பொறகு நடவடிக்க எடுக்கிறாரு..!இவரு ஒரு தமுழ் அதிகாரி.. தமுழ் சனங்களுக்கு ஒதவி செய்வாருன்னு நம்பிக் கெட்டுப் போனோம்...!” என்று ஒருவர் முனு முனுத்தார்.. “பாவி மனுசன்...! இவ்வளவு காலமும் சும்மா இருந்திட்டு, இப்ப நிக்க வச்சி கழுத்த அறுக்கலாமா..?” என்று ஒரு பாட்டி அங்கலாய்த்தாள்..

வேலாயுதம் மாஸ்டர் கடந்த கால நடப்புக்களைச் சொன்னார்... “நாங்க இன்னைக்கி நேத்தா வடக்குல வந்து குடியேறியிருக்கோம்..? பிரிட்டிஷ் காரேன் காலத்திலேயிருந்து முல்லத் தீவு, கிளிநொச்சி, வவுனியான்னு நம்ம சனங்க இன்னைக்கி வரைக்கும் காணி நெலத்தோட வாழ்ந்துக்கிட்டுதான் இருக்காங்க.. இப்ப மட்டும் இந்த அதிகாரிக்கு என்னா நடந்திருச்சி..? வந்த வழியப் பாத்துக்கிட்டு போகச் சொல்றாரு..?”

வேலாயுதம் மாஸ்டர்,முழு சிங்கள பிரதேசமான காலி மாவட்டத்தில் தமிழனாகப் பிறந்து... கொட்டை போட்டு பழம் தின்றவர்.. நாக்கியாதெனிய தோட்டத்தில் தமிழ் வாத்தியாராக இருந்தவர்... எத்தனையோ சிங்களவர்களுக்குத் தமிழும் ஆங்கிலமும் கற்றுக் கொடுத்தவர் ... நாட்டின் நடைமுறை அரசியலை நன்றாக அறிந்தவர். டீ.ஆர்.ஓ காரியாலய வாசலில் கூடியிருக்கும் மக்களிடம் கடந்த கால அனுபவங்களைப் பகிர்ந்துக் கொண்டிருந்தார்..

“ஒவ்வொரு வன் செயல் காலத்திலேயும் சிங்கள இனவாதிக்கிட்ட நாங்க அடி படுறப்பயெல்லாம்..... மலையகத் தலவர்மாருங்க.. வெக்கமில்லாமே அரசாங்கக் காலடியிலேயே கெடந்தாங்க....! தானாடாட்டி யும் அவுங்க சத கூட ஆடாமப் போச்சி..! வட பகுதி தமிழ்த் தலவர் மாருங்கதான் ஆதங்கப்பட்டாங்க.!வடக்குல குடியேற எவ்வளவோ ஒதவி செஞ்சாங்க...! அவுங்க கிட்டேயும் மலைநாட்டுத் தமிழ் சனங்களப் பத்தி வெவ்வேறு கருத்து வேறுபாடு இருந்திச்சு.. தலவர் செல்வநாயகம் நம்ம சனங்கள ஆதரிச்சாரு... மந்திரி பொன்னம்பலம் வெறுப்பு காட்டினாரு.... அவர் தொடர்ந்து பேசினார்.. “காந்தியம் நிறுவனத்தை யெல்லாம் மறக்க முடியுமா..?”ஓமந்தை,குருவி மேடு, பம்பைமடு, செக்கடிபிளவு, கணேசபுரம், கல்லியங்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காடு... குடாச்சூரி.. வாரிக்குட்டியூர்.. கப்பாச்சி, அழகாபுரி, நேரியக் குளம், நித்திய நகர்ஆகிய கிராமங்களையெல்லாம் மூச்சு விடாமல் வாய்விட்டுக் கூறி... கடந்த கால நினைவுகளை மீட்டிக் கொண்டிருந்தார்..

கதை கேட்டுக் கொண்டிருந்த அவர்களின் கவனத்தை திருப்பும் வகையில் காரியாலய பியோன் வந்து கத்தினான் ... "இஞ்சை நிக்காதிங்கோ..! ஒருத்தரும் இவ்விடத்தில இருக்கக் கூடாது..!. பொலிஸ் வரப் போகுது..!" என்றான். டீ.ஆர்.ஓ. காரியாலயத்தில் கூடி இருந்த யாவரும் நெடுஞ்சாலையை நோக்கி நகர்ந்தார்கள்....

இன்று நெடுஞ்சாலையில் நிற்கும் வேலாயுதம் மாஸ்டர், அன்று அந்த இனக் கலவரத்தில் மாட்டி, தத்தளித்த போது, உயிர் பிச்சைக் கொடுத்து, தங்களைக் காப்பாற்றி அனுப்பிய அந்த சிங்களக் குடும்பம் வாழும் தென் மாகாணத்தின் திசையை நோக்கி... செட்டிக் குளத்திலிருந்து கை கூப்பிக் கும்பிட்டார்...!

செட்டிக்குளத்தில் பூர்வீகமாக வாழும் பெரியவர் ஒருவர் வேலாயுதம் மாஸ்டரின் காதுகளில் குசு குசுத்தார்.. "கந்தோர் பெரியாள் டீ.ஆர்.ஓ. தான் நெருப்பு வைக்கச் சொன்னவர்...! குடியிருந்தச் சனங்கள அடிச்சிக் கலைக்கச் சொன்னவர்...!உங்கள அடிச்சி கலைச்ச பெடியள்மார்களுக்குத்தான் உங்கட காணியெல்லாம் பயிர் பச்சையோடு சொந்தமாகப் போகுது...! இத மனசுல வச்சிக் கொள்ளுங்கோ.. பிடிச்சக் காணிகள விட்டுப் போட்டு போகாதீங்கோ..! போராடிப் பாருங்கோ..! நீதி கிடைக்கும்..வருத்தமா இருக்கு.. நீங்களும் எங்கட தமிழ்ச் சனங்கள்..!" என்றவர் அவ்விடத்தை விட்டு நகர்ந்தார். அவர் முகத்தில் திருநீறு நிறைந்திருந்தது.

வியர்த்துப் போய் நின்ற வேலாயுதம் மாஸ்டருக்கு அந்தப் பெரியவர்...பாலையில் ஊறிய சுனையாகத் தெரிந்தார்... அவர் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டு போனதை கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த வேலாயுதம் மாஸ்டரின் கண்கள் பணித்தன...

கலவரத்தில் பாதிக்கப் பட்டு வந்த மக்களை, வவுனியா பிரதேசத்தில் குடியேறும்படி ஆதரவு காட்டியவர்கள்..... குடியேறக் கூடிய இடங்களைக் காட்டி "முடிஞ்சதை செய்து கொள்ளுங்கோ.." என்று கண்களைக் காட்டிவிட்டுச் சென்றவர்கள்.. இந்த துரதிஸ்டமான வேளையில் எவரையும் காண முடியவில்லை..

***

அகதிகளாக வந்த குடும்பங்கள், அவர்கள் காட்டிய காட்டுப் பகுதிகளை சுத்தம் செய்தார்கள்.. நிலத்தைக் கொத்தினார்கள்.. வேலிகள் போட்டுக் கொண்டார்கள்.. கிணறு தோண்டி தண்ணீரை எடுத்தவர்கள் எல்லையற்ற சந்தோசமடைந்தார்கள்...!உளுந்து, பயறு, கவ்பீ, கச்சான், எள்ளு, சோளம், வெங்காயம் பப்பாசி,முருங்கை. தென்னை யாவும் புது மண்ணில் செழிப்புடன் பசுமை காட்டி வளர்ந்தன.

முதல் அறுவடையில்... குடிசைகளை, வீடுகளாகக் கட்டிக் கொள்ள வேண்டும்... கூரைத் தகரங்கள், சீமெந்து கல்லுகள்... காலம் போகப் போக மின்சாரம் என்றெல்லாம்... அவசர அவசரமான திட்டங்கள் மனதுக்குள் குவிந்து நிறைந்தன...

அடிக்கடி இவர்களது குடியிருப்புப் பிரதேசங்களில் நோட்டமிட்டுச் சென்ற நபர்களைப் பற்றி இந்தப் பாமரக் குடும்பங்கள் அறிந்திருக்கவில்லை..

கிராம சேவகர்கள் அகதிகள் குடியிருக்கும் நிலங்களில் வந்து விபரங்களைத் திரட்டிக் கொண்டிருந்தார்கள்.. அவர்களுக்கு விவசாய நிலங்களைப் பகிர்ந்தளிக்கும் திட்டம் ஏற்பாடாகியிருந்தது. இவர்கள் எந்தப் பிரதேசத்து அகதிகள்..? பலாத்காரமாக குடியிருப்பதற்கான காரணங்கள் யாவை..? குடும்பத் தலைவர்கள் யாவர்...? உழைக்கக் கூடியவர்கள் இருக்கின்றனரா...? என்றெல்லாம் வினா எழுப்பிக் கொண்டிருந்தவர்களிடம், வடக்குத் தமிழ்க்குடிவாசிகள் பலர் வந்து எதிர்ப்பு தெரிவித்தார்கள்... இங்கே குடியிருப்பவர்கள் மலைநாட்டுத் தமிழர்கள் என்றும், சொந்த ஊர்களுக்கு அவர்கள் போய் விடுவார்கள் என்றும்.. அவர்களுக்கு இங்கே காணிகள் கொடுக்கக் கூடாது என்றும்... அவர்கள் இந்த ஊர் தமிழர்கள் அல்ல என்றும்... கண்டனக் குரல்கள் எழுப்பிக் கொண்டிருந்தார்கள்.

"நாய்கள் நாய்களின் இறைச்சியைச் சாப்பிடுகின்றன...!" என்ற ஒரு சீன நாட்டுப் பழமொழி... இந்தப் பர பரப்பான சூழ்நிலையை அங்கீகரித்துக் கொண்டிருந்தது..

வந்திருந்த சிங்கள கிராமசேவகர்களுக்கு நாட்டில் வாழும் தமிழர்கள் வெவ்வேறு இனங்களானவர்கள்... என்பதை அன்றுதான் விளங்கிக் கொள்ள முடிந்தது. இவ்வளவு காலமும் தமிழர்கள் எல்லாம் ஒரே இனம் என்று நினைத்துக் கொண்டிருந்த தங்களது முட்டாள் தனத்தை எண்ணி, விபரங்கள் சேகரிக்காமலேயே, கிண்டலாகச் சிரித்தபடி திரும்பிச் சென்றார்கள்..!

***

வேலாயுதம் மாஸ்டர் நேற்று இரவு நடந்த அந்தக் கொடூரமான சம்பவத்தை மீண்டும் நினைத்துப்பார்த்தார்.

ஒரு நாள் அந்திப் பொழுது.... இருள் கவ்வும் நேரம்... அன்றுதான் அந்தச் சம்பவம் நடந்தது..

சண்டியர்கள் பலர் மது அருந்தியவர்களாக வெறியோடு,சத்தம் போட்டுக் கொண்டு, குடிசைகளில் இருந்தவர்களை, குழந்தைக் குட்டிகளோடு வெளியே விரட்டி,குடிசைகளுக்கு நெருப்பு வைத்தனர்.. அவர்கள் சிங்களவர்கள் அல்ல..தமிழ் வாலிபர்கள்...! பயங்கரமாகத் தோற்றமளித்தார்கள்.. கம்பு, தடிகள், வெட்டரிவாள், என ஆயுதங்களோடு அவர்களை நெடுஞ்சாலைக்கு விரட்டிக் கொண்டிருந்தார்கள்..

இதுவரை காலமும் சிங்களச் சண்டியர்களின் அட்டகாசங்களையே அனுபவித்து வந்தவர்களுக்கு, இந்தக் காடையர்கள் புதுமையாகவும் நம்ப முடியாதவர்களாகவும் தெரிந்தார்கள்.. "ஐயோ தம்பிகளா..! ஐயோ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ராசா..!"என்று வயதானவர்கள் கூக்குரலிட்டார்கள்..கண் மண் தெரியாமல், அடிகள் விழுந்தன.. காய்ந்த ஓலைகளால் வேயப்பட்டிருந் த குடிசைகள், சுடர் விட்டு எரிந்து.. சாம்பலாகின... விவசாயப் பயிர்களுக்கு எந்த சேதங்களையும் அவர்கள் ஏற்படுத்தவில்லை..

***

இன்னும் அவர்கள் டி.ஆர்.ஓ. காரியாலய பஸ் பாதையில் நின்றார்கள்...சுட்டெரிக்கும் பட்டப் பகலில், வியர்த்து வடியும் அம்மக்களின் முகங்கள் கண்ணீரையும் கொட்டிக் கொண்டிருந்தன.. திடு திப்பென பொலிஸ் வண்டிகள் பறந்து வந்தன.. பின்னால் ஓடிவரும் இரண்டு மூன்று அரசாங்க பஸ் வண்டிகளில் நிர்க்கதியாக நின்ற மக்கள் பலவந்தமாக ஏற்றப்பட்டார்கள்.. அவைகள், எந்தப் பிரதேசத்தை நோக்கி ஓடும் என்று எவருக்கும் புரியாமலிருந்தது.... வாகனத்துக்குள் திணிக்கப் பட்டவர்கள் பரிதாபகரமாகக் கூக்குரலிட்டார்கள்.. மன்னர் பிரதேசங்களில் கொண்டு சென்று இறக்கி விடுவதுதான் உத்தேசமாகும் என்பதை அறைகுறையாக அறிந்திருந்தார்கள்.

திக்கற்ற அவர்கள் அதிகாரங்களையும்.. அதி காரிகளையும்... காக்கிச் சட்டைகளின் துப்பாக்கி களையும்.. எதிர்த்துப் போராடும் திராணியிழந்து நின்றார்கள்.. எத்தனை காலங்கள்தான் இவர்களின் அதிகாரங்களுக்கும். ஆயுதங்களுக்கும் எதிராகப் போராடி மாய்வது..?

அகதிகளாக செட்டிக்குளத்துக்கு வேலாயுதம் மாஸ்டரும் அவரது மனைவியும் இளங் காளைகளான இரண்டு மகன்மார்களோடும், மகளோடும் வந்தார்கள்.. இயக்கங்களின் நடவடிக்கைகள் துளிர்விட்ட காலம் அது... போராளிகள் "வீட்டுக்கு ஒரு பிள்ளை..." என்று வாகனங்களோடு வந்து நின்றார்கள்.. மறுக்க முடியாத நிலை... வேலாயுதம் மாஸ்டர் ஒரு கணம் கலங்கிப் போய் நின்றார்.. மேட்டுக்குடியினரிடம் போகாது, தரித்திரப் பட்ட அடி நிலை மக்களிடமே அவர்கள் வந்து நின றார்கள்.

போரின் முதல் குண்டு வெடிச் சத்தத்திலேயே விமானமேறி வெளிநாடுகளுக்கு ஓடிவிடத் தகுதி பெற்றவர்கள், அகதி விசா வாங்கிக் கொள்வதற்கு, யுத்தத்தை சாதகமாக்கிக் கொண்டார்கள். தஞ்சம் புகுந்த நாடுகளில் அகதி விசா மறுக்கப்பட்டவர்கள்,"தமிழர்கள் "வகை தொகையாக" சாக வேண்டும்...அது சர்வதேசச் செய்தியாக வெண்டும் அதன் மூலம் விசா கிடைக்க வேண்டும் என்று கந்தனையும், கணபதியையும் வேண்டிக் கொண்டார்கள்...!

பாமர மக்களோ, தங்கள் பிள்ளைகளைக் கட்டியணைத்து முத்தமிட்டு, கண்ணீருடன் யுத்தக் களத்துக்குத் தாரை வார்த்துக் கொடுத்தார்கள்.. அந்தக் காட்சிகளை அவர் மனத் திரையில் ஓட விட்டுப் பார்த்துக் குமுறினார்.. ஒரு மகனை போராட்டத்துக்கு காணிக்கையாகவும், இன்னொருவனை ராணுவத்துக்குப் பலியாகவும் பறி கொடுத்துவிட்டு, வாழ்ந்த வாழ்க்கை யில் இரண்டு இழப்புக்களை எண்ணி, பஸ்ஸூக்குள், ஒரு பக்கம் மனைவிக்கும், மறுபக்கம் மகளுக்கும் இடையில் மீதி "மூவருமாய் இருப்பதை" உறுதி செய்துக் கொண்டு, ஜடமாக அமர்ந்திருந்தார்.. சாலையோரத்து வீர மரம், பாலை மரம், நாவல் மரங்களும் அசையாது நிற்பதை அவரது கண்கள் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தன

டீ.ஆர்.ஓ. காரியாலய ஜன்னல்களூடே, அரச பணிபுரியும் விசுவாச ஊழியர்கள் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர்..

தேசிய இருப்புக்கான நிலமும், குடியிருப்புமற்ற ஒரு சிறுபான்மைத் தேசிய இனம்.....போக்கற்றுப் போய், பிறந்த நாட்டுக்குள்ளேயே பரதேசிகளாக அலைக் கழிக்கப்பட்டு.. பேரினவாதப் பகையாலும், ஒரே இனத்தின் பிரதேசவாதப் பேதங்களாலும், எங்கெங்கும் அந்நியமாக்கப்பட்டு வரும் நிலைமையை நினைத்து அவர்கள் விம்மி அழுதார்கள்..

பாரதி வேதனையடைந்ததைப் போன்று அவர்கள் விம்மி விம்மி... விம்மி விம்மி... அழுங்குரலை காற்றிடம் மட்டுமே சாட்சி சொல்லிவிட்டு, அயர்ந்து விட முடியுமோ...? அதன் பின்னர் வாழ் க்கையை எங்கே தேடுவது?

பஸ் வண்டிக்குள் தலையைக் குப்புறக் கவிழ்த்துக் கொண்டிருக்கும் வேலாயுதம் மாஸ்டரின் செவிப்பறையில் சில வார்த்தைகள் வந்து விழுந்தன... அந்த மந்திரச் சொற்கள் எவ்வளவு பரிச்சயமானவை! "த..மி..ழ்..த்... தே...சி..ய..ம்.." "தமி..ழர்.. தா..ய..க..ம்.."! அந்த நிழலுக்குள் அண்டிக் கொள்ள முடியாத அவரும் ஒரு தமிழரே...! கடைசியாக அந்தத் தமிழர் ஒருமுறை...அதே வார்த்தையை உச்சரித்து விட்டு வாயை மூடிக் கொண்டார்...!

பஸ் வண்டிகள் பறந்துக் கொண்டிருந்தன.. எந்தப் பிரதேசத்தை நோக்கி என்று தெரியவில்லை...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ.சு.முரளிதரன்

# வியர்வையும் கண்ணீரும் செந்நீரும் கலந்த தேநீர் : ஒப்பாரிக்கோச்சி




மலையகத்தின் மிக முக்கியமான கதை சொல்லியாகவும், அரசியல் வாதியாகவும் மு.சிவலிங்கம் காணப்படுகின்றார். மலையகத்தினை முதன்மைப் படுத்திப் பல சிறுகதைகளை எழுதியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரது ஒப்பாரிக்கோச்சி என்ற சிறுகதைத் தொகுப்பானது விதந்து குறிப்பிடத்தக்க பிரதியாக அமைந்துள்ளது. காலம் - வெளி - கதாமாந்தர் என்பவற்றை மிகத்துல்லியமாக இணைக்கின்ற வித்தை அறிந்தவர்களே அற்புதமான கதை சொல்லிகளாக இனங் காணப்படுகின்றனர். அந்த வகையில் மு.சிவலிங்கம் எழுதிய ஒப்பாரிக்கோச்சி என்ற சிறுகதைத் தொகுப் பானது துன்பியலைச் சுவறச் செய்கின்ற மிகத் தரமான பிரதியாகவே கொள்ளத்தக்கது. தேநீருள்ளே வியர்வை யும், கண்ணீரும், செந்நீரும் கலந்திருக்கும் நிதர்சனத்தை உணர்த்துகின்றது. மலையக மக்களின் உதிரத்துளிகளை உறிஞ்சி ஒரு நாட்டின் பொருளாதாரம் நிமிர்ந்து நிற்கிறது. எனினும் அம்மக்கள் கூனிக் குறுகித்தளர்ந்து போயுள்ளமையைக் கதைகள் தெளிவுபடுத்துகின்றன. நகரத்தின் வாசலில் ஓடுகின்ற வைதரணி நதிபோன்ற நாற்றம் சுவற அவல வாழ்வுக்குள் அகப்பட்ட தொழி லாளர்களின் இழிநிலையை இக்கதைகள் அப்பட்டமாக எடுத்துரைக்கின்றன. துல்லியமான வட்டார மொழியோடு வாழ்வியற் கூறுகளை இனங்காட்டு கின்றன. துன்பியலின் வாசனையை நாசியில் ஏற்றுகின்றன. காலங் காலமாக ஏமாற்றப்படுகின்ற தொழிலாளர்களின் மெய்ந்நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டுகின்றார். மலைத் தொடர்களின் தொடர் அவலத்தைச் சுமக்கும் தொடருந்தாக ஒப்பாரிக் கோச்சி பயணிக்கின்றது.

"ஒப்பாரிக்கோச்சி" தொகுப்பிலே பதினாறு கதைகள் அடங்குகின்றன. புகையில்லாத தொழிற் சாலைகள், நகை ஈடுபிடிக்குமிடம் என்ற இருகதைகளை யும் தவிர, ஏனைய 14 கதைகளும் மலையகச் சூழலையே பிரதிபலிக்கின்றன. தலைப்புக்கதையான ஒப்பாரிக் கோச்சி தலைசிறந்த படைப்பாகக் (Master Piece) கொள்ளத்தக்கது. தேசத்தின் முதுகெலும்பாக அமைத்து பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியவர்கள், காலங் காலமாகச் சுரண்டலுக்கு உள்ளாகும் அவலத்தை இக்கதை புலப்படுத்துகின்றது. பேரரசியலும் நுண்ணரசி யலும் மலையக மக்களுக்கு எதிராக அமைகின்ற பண்பினை உணர்த்துகின்றது. மலையமக்கள் எவ்வா றெல்லாம் ஏமாற்றப்படுகின்றனர் என்பதையும் தெளிவு படுத்துகின்றது. தென்னிந்தியாவிலிருந்து ஏமாற்றி அழைத்து வரப்பட்ட மக்களை, மீண்டும் ஏமாற்றி அனுப்பி வைக்கும் கபட நாடகத்தினை ஒப்பாரிகோச்சி வெளிப்படுத்துகின்றது. "சுக்குரு" என்ற சுப்பிரமணி இந்தியா திரும்ப ஆசைப்படுகின்றான். கடவுச் சீட்டிலே விசாவைக் குத்திவிட்டு, காலம் முடிந்தவுடன் பலவந்த மாகத் திரும்பி அனுப்பி வைக்கின்றனர். குற்றவாளி யாக்கிக் கைது செய்து நிர்வாகத்தாலும், தொழிற் சங்கத்தாலும், அரசாலும், சட்டத்தாலும் ஏமாற்றப்பட்டு அனுப்பப்படுகின்றான். இருநூறு வருட வாழ்வினைத் தொலைத்து விட்டு மீள இந்தியாவிலும் அவலவாழ்வுக் குள் தள்ளப்படுகின்றனர். தேயிலையை உற்பத்தி செய்யும் தொழிலாளி உயர்ரக தேயிலைக்கு ஆசைப் பட்ட போது, அதுகூடக் கிடைக்காத பேராவல் அவர்களது வாழ்வின் மோசமான சூழலைத் தெளிவுபடுத்துகின்றது.

எங்க ஊர்த்தேர்தல், சங்க காலம் ஆகிய இரு கதைகளும் தேர்தல் அரசியலை மையமாகக் கொண்டுள் ளன. மலையக மக்களின் நிறைவேறாத கனவின் புனைவாக எங்க ஊர்த்தேர்தல் கதை அமைந்துள்ளது. சலூனில் அரசியல் பேசுகின்ற சாதாரணமக்கள், தேர்த லில் ஈடுபட்டு வெற்றிகண்டு. தமது கோரிக்கைகளை அரசிடம் முன்வைப்பதைக் கதை உணர்த்துகின்றது.

இக்கதையில் மலையக அரசியலின் பல்வேறு நிகழ்வுகள் கேலிக்குள்ளாக்கப்படுகின்றன. மந்திரி ஒருவனின் பின்னோக்கிப் பார்த்தல் உத்தியாகச் "சங்க காலம்" கதை அமைந்துள்ளது. "பட்டாளி முன்னேற்றச் சங்கம்" தொடங்கும் வாலிபர் இளைஞர், மலையகத் தொழிலாளர்களை ஏமாற்றி தேர்தல் அரசியலில் வெற்றியடைவதையும் இருவரில் ஒருவர் கொல்லப்படு வதையும் கதை இனங்காட்டுகின்றது. மகேந்திரன் கதாபாத்திரம் மலையக அரசியல் வாதிகளின் நிகழ்வுப் பாத்திரமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

நாசமாய்ப்போக, வழித்துணை ஆகிய இருகதை களும் மலையகக் கல்விச் சூழலை மையப்படுத்திய கதை களாகும். மலையகத்திலுள்ள பாடசாலை ஒன்றினைத் தரிசிக்க வருகின்ற மேலதிகாரியையும் பாடசாலையின் அதிபரையும் மையப்படுத்தியதாக "நாசமாய்ப்போக"


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கதை அமைகின்றது. இக்கதையில் கல்வி சார்ந்த நுண்ணரசியல் பூரணமாக வெளிப்படுத்தப்படுகிறது. 186 பிள்ளைகளைக் கொண்ட பாடசாலையில் ஒரே ஒரு அதிபர் மட்டுமே அமைந்து, அனைத்து வகுப்புகளை முகாமை செய்து கற்பிக்கின்றார். லயத்தில் வாழுகின்ற அவரால் திருமணம் கூட செய்ய முடியவில்லை. மலசல கூடங்களைப் பேணி, அத்தனை பிள்ளைகளுக்கும் கற்பிப்பது சவாலான அமைகிறது. அதிபர் கூட்டம், பாடசாலை விபரம் மற்றும் சம்பளப்பட்டியல் எடுப்பது கொடுப்பது போன்ற அனைத்திற்கும் பாடசாலை மூடப்படுகிறது. தோட்டத்துரை கல்விக்கு எதிராகச் செயற்படுகிறார். உயரதிகாரிகளும், பேராசியலும் மலையகக் கல்வியைக் கண்டு கொள்வதே இல்லை என்னும் பல்வேறு தகவல்களைக் கதை வெளிப்படுத்து கின்றது. வாழ்விலே ஒளியேற்றி வைத்த ஆசிரியர் குறித்த நினைவின் நீட்சியான பதிவாக வழித்துணை கதை அமைகின்றது. இலவசமாகக் கற்பித்த நல்லாசான் ஒருவரின் கீர்த்தியினை கதை வெளிப்படுத்தி நிற்கிறது. இலவசமான "ரியூசன்" கற்பித்தல் மலையக சூழலில் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதையும் கதை உணர்த்துகிறது.

தொழிலாளர்களின் புரட்சிகரமான சிந்தனை யினை வெளிப்படுத்தும் கதைகளாக பிரிட்டிஷ் முகாம்கள் தார்க்கப்படுகின்றன, மார்கழிப்பூக்கள் என்னும் இருகதைகளும் அமைந்துள்ளன. மலையகத் தொழிலாளிகளின் கிளர்ச்சியால் "லயம்" தகர்க்கப்பட, மண்வீடுகள் கட்டப்படும் புரட்சியை "பிரிட்டிஷ் முகாம்கள் தகர்க்கப்படுகின்றன" கதை வெளிப்படுத்துகின்றது. தொழிலாளர் ஒற்றுமையால் தோட்டத்தில் வாகமம், அரசும் திகைப்பதோடு கதை நிறைவுகிறது. மலையகத் தோட்டங்களில் முகிழ்க்கும் பன்முக மாற்றங்களை "மார்கழிப்பூக்கள்" இனங்காட்டுகின்றது. தொழிலாளர் ஒற்றுமை, சுயமரியாதை, சுய உடைத்தேர்வு, அரசியற் தெளிவு, சலுகை பெறுதல் உட்படப் பல்வேறு விடயங்களை நுணுக்கமாக வெளிப்படுத்துகின்றது.

மலையகத் தொழிலாளர்களின் தெளித்த சிந்தனையைப் பதிவு செய்யும் கதாசிரியர் அவர்களின் அறிவீனங்களையும், அவர்களின் மீது திணிக்கப்படும் அழுத்தங்கள் கேலிகள் என்பவற்றைக் கூடச் சிறப்பாகப் பதிவு செய்துள்ளார். இவ்வகை யில் பல்லுருப் பெருமான் வைகறைப் பொழுது, வடதிசைக்காற்று, PWD போன்ற கதைகள் குறிப்பிடத்தக்கன. பிரித்தானியர் வழங்கும் வாய்ப்பினைத் தவறவிடுகின்ற தகிழனும், சரியாகப் பயன்படுத்தி வெற்றியடைகின்ற சிங்கள இனத்தவனையும் "பல்லுப் பெருமாள்" கதையிலே பதிவு செய்துள் ளார். பேரரசியலின் குறியீடாகக் கொள்ளத் தக்க கதையாக அமைகின்றது. மலையகத் தொழிலாளர்களின் சனத்



தொகையைக் கட்டுப்படுத்த அரசு கையாளும் பிறப்பு எண்ணிக்கைச் சட்டத்தை "வைகைப்பொழுது" தெளிவுபடுத்துகின்றது. இக்கதையிலும் எதிர்ப்புணர்வே கிளர்ந்தெழுகின்ற "மாணிக்கம்" என்ற கதாபாத்திரத்தைத் தரிசிக்க முடிகின்றது. தீவிரவாதி என்ற முத்திரையோடு கைது செய்யப்படுகின்ற மலையக இளைஞனைக் குறித்த கதையாக "வடதிசைக் காற்று" அமைகின்றது. மலையகத் தமிழர் மீது அரச இயந்திரம் செலுத்துகின்ற அழுத்தத் தினை இக்கதையும் சிறப்பாகப் பதிவு செய்துள்ளது. அப்பாவி இளைஞர்கள் ஆயுதாரிகளாக மாறுவதன் பின்புலத்தை இனங்காட்டுகிறது. தேசத்திற்காக உதிரம் சிந்திப்பாடுபட்ட உறவுகளை PWD (பாரே வெடகரன தெமிரு) என்று அரசியற் பிரமுகர் கேலி செய்வதை "PWD" என்ற கதையில் இனங்காண்கிறோம். பாதையில் வேலை செய்யும் தமிழன் என்றும் பிரிட்டிஷ்காரர்களின் குழந்தைகள் என்றும் தேசபிதாக்களைக் கேலி செய்யும் தெருப்பொறுக்கி அரசியல்வாதியை அக்கதையிலே கதாசிரியர் இனங்காட்டுகின்றார்.

சிறுவர் துஷ்பிரயோகத்தினை "விட்டில் பூச்சிகள்" கதையிலே பதிவு செய்துள்ளார். மலையகச் சிறுமியைக் குழந்தை ஊழியமாகவும், வன்புணர்வுக்கும் எளிதாகவே இந்த தேசம் உட்படுத்துவதைச் சுட்டிக் காட்டுகின்றார். இக்கதை உட்பட ஒவ்வொரு கதை யினையும் தேசத்திலுள்ள ஒவ்வொருவரும் வெட்கம் கொள்ளும் வகையிலே படைத்துள்ளமையும் குறிப்பிடத் தக்கது. "நமப்பார்வதி பதியே" "நுவரெலியா முதல் சுன்னாகம் வரை" என்பன மாறுபட்ட விடயப்புலத்தை வெளிப்படுத்துகின்றன. "இது நம் ஆளு" (பாலகுமாரன் பாக்யராஜ் கூட்டணி) திரைப்படத்தை நினைவுபடுத்து வதாக "நமப்பார்வதி பதியே" கதைக்கரு காணப்படு கின்றது. இலட்சிய புருஷனை முதன்மைக் கதா பாத்திரமாகக் கொண்டு "நுவரெலியா முதல் சுன்னாகம் வரை" என்னும் கதை கட்டமைக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொகுப்பில் இடம்பெறுகின்ற "புகையில்லாத தொழிற்சாலைகள்" கதையின் முடிவில் எனக்குச் சிறிதேனும் உடன்பாடில்லை. எனினும் அவ் வாறான முடிவினைக் கூறுகின்ற கதாசிரியரின் உரிமையில் எவருமே தலையிட முடியாதென்ற தெளிவும் எனக்குண்டு. இத்தொகுப்பானது பல்வேறு புதிய விடயங்களையும் எனக்கு இனங் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. தேயிலை என்பது செடி யன்று; மரம் என்னும் அறிவியற் செய்தி, "சித்திரத்தில் வரைந்த தமிழனையும் நம்பாதே" என்ற சிங்களப் பழமொழி போன்ற எண்ணற்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.

ஒட்டுமொத்தமாக நோக்கினால், மலையத் தமிழர்களின் வாழ்வியலைத் துல்லியமாகப் பதிவு செய்த தொகுதியாக "ஒப்பாரிக் கோச்சி" அமைந்துள்ளமை தெளிவாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலோலியூர் வேல்நந்தகுமார்



# மலையக மூத்த படைப்பாளி மு.சிவலிங்கத்தின் வெந்து தணிந்தது காலம் சிறுகதைத் தொகுப்பு குறித்த ஒரு பார்வை

ஈழத்து சிறுகதை வளர்ச்சியில் மலையக எழுத்தாளர்களின் பங்களிப்பும் மகத்தானதாக விளங்குகிறது. அவ்வகையில் மலையகத்தின் மூத்த தலைமுறைப் படைப்பாளிகளில் ஒருவராகிய மு.சிவலிங்கம் அவர்களால் 2013 ஆம் ஆண்டு மலைநாட்டு எழுத்தாளர் மன்ற வெளியீடாக பாக்யா பதிப்பகத்தால் வெளியிடப்பட்ட சிறுகதைத் தொகுப்பாக வெந்து தணிந்தது காலம் என்ற இத் தொகுப்பு அமைந்துள்ளது. நெருப்பு எரியும் பின்ணணியில் அழுகை முகத்துடன் ஒரு சிறுமி என்றவாறு அமையும் இதன் அட்டைப்படமே அதன் உணர்வுகளை புரிய வைக்கிறது. இங்கு தணிதல் என்பது முற்றாக அணைந்து விடல் என்ற கருத்து அல்ல மாறாக குறைந்து போதல் என்பதையே அது குறிக்கிறது. புத்தகங்களோடு வாழுகின்ற முழு மனிதருக்கும் இந்நூல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்தொகுப்பில் எலிகளும் பூனைகளும் மாடுகளும், வெந்து தணிந்தது காலம் முதல் ஒரு ரட்சகனின் புறப்பாடு அவைகளும் அவர்களும் வரையான பதின்நான்கு சிறுகதைகள் இடம் பெற்றுள்ளன.




இத்தொகுப்புக்கான பதிப்புரையை பாக்யா பதிப்பக உரிமையாளர் படைப்பாளர் மல்லியப்பு சந்தி திலகர் அவர்கள் வழங்கியுள்ளார். இவ்வுரையில் மு.சி பற்றி குறிப்பிடுகையில் 1960களில் எழுதத் தொடங்கிய அவர் எழுத்தினூடாகவும் தனது செயற்பாடுகளூடாகவும் மலையக சமூகத்தின் அசைவியக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டவர் என்று குறிப்பிடுவதுடன் மலையக சிறுகதைப் போக்கில் அந்த வாழ்வியலோடு அரசியல் போக்கையும் விமர்சித்து செல்லும் எழுத்து நடை இவரது தனித்துவம் என்றும் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் பாக்கிய பதிப்பகத்துக்கும் தனக்கும் அவருக்குமான உறவு குறித்தும் பேசியுள்ளார். இந்நூலுக்கான முன்னுரையை சமூக முக்கியத்துவத்தின் அடி நீரோட்டங்கள் என்ற தலைப்பில் மறைந்த மலையக இலக்கிய முன்னோடி சாகித்யரத்னா தெளிவத்தை ஜோசப் அவர்கள் தந்துள்ளார். அவர் தனது உரையில் மு.சி அவர்களின் பன்முக இலக்கிய ஆளுமையை எடுத்துக்காட்டி அவரது சிறுகதைத் துறை சிறப்பைச் சொல்லி இவரது முன்னைய படைப்புக்களான மலைகளின் மக்கள், ஒருவிதை நெல், ஒப்பாரி கோச்சி. இவரது இத் தொகுப்புக் கதைகளின் உள்ளடக்கம், அரசியல், ஈழத்து சிறுகதைப் பரப்பில் அவருக்கான இடம் என்பவற்றை எடுத்துக் காட்டியுள்ளார். மனவிலாசம் பெற்ற எழுத்தின் குரல் என இத்தொகுப்புகான அணிந்துரைக் குறிப்பொன்றை தமிழக எழுத்தாளர் பொன்னீலன் வழங்கியுள்ளார். பின் அட்டைக்குறிப்பிலும் அதன் சில பகுதிகள் இடம் பெற்றுள்ளன. அவர் தமது உரையில் எல்லாக் கதைகளின் சிறப்புக்களையும் தனித்தனி எடுத்துக் காட்டி இவை ஒட்டு மொத்தத்தில் வடிவச் சிக்கல் இல்லா எளிமைக் கதைகள் என்று கூறியுள்ளார். என்னுரையாக நூலாசிரியர் தனது இலக்கியப் பயண விபரங்களையும் நன்றியையும் பகிர்ந்துள்ளார்.

எலிகளும் பூனைகளும் மாடுகளும் என்பது இத்தொகுப்பில் உள்ள முதலாவது கதை. இக்கதை நாடாளுமன்றத்தை மையப்படுத்தி உறுப்பினர்களிடையே நிகழும் வாதப்பிரதிவாதங்கள் இந்தியா பூனைகளைத் தராதா என்ற விடயங்களை கூறி இன்றைய சூழலுக்கு கூட பொருந்தும் வகையில் இக் கதை ஒரு கற்பனைச் சித்திரமாக எழுதப்பட்டாலும் இவற்றின் வழி குறியீட்டுப் பாங்கில் சொல்லப்படும் யதாரத்தங்கள் முக்கியமானவை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

இக்கதை 2003 ஜூலையில் தினக்குரலில் எழுதப்பட்டது.

அடுத்து இடம்பெறும் சிறுகதை வெந்து தணிந்தது காலம் என்பதாகும். இதுவே இத் தொகுப்பின் தலைப்புக் கதையாகும். ஈழத்து வெந்து தணிந்தது காடு என்றதொரு திரைப்படத்தை அண்மையில் பார்த்து பரவசமடைந்திருக்கிறோம். ஆனால் மு.சி அவர்கள் 2003 ஆம் ஆண்டிலேயே மலையக சமூகம் சார்ந்து பாரதியின் இக்கவி வரியை வெந்து தணிந்தது காலம் என தனது சிறுகதை ஒன்றுக்கு தலைப்பாக பயன்படுத்தியுள்ளதை இத் தொகுப்பு வழி அறிய முடிகின்றது.

அகதிவாழ்வு முகாம் வாழ்வு என்ற பின்புலத்தில் பூர்வீக நிலங்களில் இருந்து யுத்தத்தால் பெயர்க்கப்பட்ட மக்களின் கதையையே இக்கதை பேசுகிறது. வட பகுதியில் யுத்த அவலங்களுக்குள்ளும் பிரதேசவாத உணர்வுகளுக்குள்ளும் வாழ்ந்த மலையக தமிழரின் கதையும் ஒட்டு மொத்த தமிழரின் கதையும் இங்கு பேசப் படுகிறது. இங்கும் பார்வதி ஆச்சிக்கூடாகவே கதை நகர்கிறது. 2011 இல் வீரகேசரியில் எழுதப்பட்ட இக்கதை வன்னியின் இறுதி யுத்தத்துக்கு பின் போர் அவலம், அகதி வாழ்வு சார்ந்து எழுதப்பட்ட கதையாய் அமைந்து நெஞ்சைப் பிளிகிறது. பல இடங்களில் இக் கதை மதிசுதாவின் வெந்து தணிந்தது காடு திரைப் படத்தை நினைவூட்டுவதும் தவிர்க்க முடியாததாகிறது.

உத்தியோகம் புருஷலட்சணம் என்ற கதை பஸ்ஸில் ஏறி பல வகையில் பிச்சை எடுப்போர், பொருட்கள் விற்போர், மலசலகூடம் நடத்துவோர் உழைக்கும் உழைப்பை கணக்கு பார்த்து தான் ஒரு அரச உத்தியோகத்தராய் உழைக்கும் மாதச் சம்பளம் அவர்களின் வருமானத்தை விட குறைவாக இருக்கும் நிலையை அழகியல் மிக்க கதையாக கூறியுள்ள சிறப்புக்கும் சிந்தனைக்கும் உரியதாக அமைகிறது.

கேட்டிருப்பாயோ காற்றே என்ற கதை காலி தெணியாய தோட்டத்தில் இருந்து சிங்களவர்களால் துரத்தப்பட்டு வவுனியா செட்டிக்குளத்தில் குடியேறி வாழ்ந்த மலையகத் தமிழர்கள் அங்கிருந்த தமிழர் களாலும் தமிழ் அதிகாரிகளாலும் பிரதேசவாத மனப்பாங்குடன் அடித்து விரட்டப்பட்ட சம்பவத்தைத் வேலாயுதம் மாஸ்டர் என்ற மலையக தமிழ்த் தேசிய வாதியை மையப்படுத்திக் கூறுவதாய் அமைந்துள்ளது. இக் கதையில் வரும்,

"சக தமிழரிடம் அப்படி அடி வாங்குவதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை உடலில் ஏற்பட்ட வலியை விட மனதில் ஏற்பட்ட வலியை ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை..."

அவர்கள் இனவாதிகளுக்கும் அரசியல் வாதிகளுக்கும் அப்பாற்பட்ட மனிதாபிமானவாதிகளாய் இருந்தார்கள்...

அந்த மந்திரச் சொற்கள் எவ்வளவு பரிச்சய மானவை தமிழர் தாயகம் தமிழ்த்தேசியம்.

அந்த நிழலுக்குள் அண்டிக் கொள்ள முடியாத அந்தத் தமிழரும் கடைசியாக ஒருமுறை அதே வார்த்தை களை உச்சரித்து விட்டு வாயை மூடிக் கொண்டார் போன்ற வரிகள் சாட்டையடிகளாய் வந்து விழுகின்றன.

மீண்டும் பனை முளைக்கும்? என்ற கேள்விக் குறியும் அமையும் கதை ஒரு எழுத்தாளனின் அவலத்தை மிக யதார்த்தமாக ஒரு புத்தக வெளியீட்டு விழாவை மையப்படுத்தி சொல்லும் கதையாக அமைந்து சிறப்புப் பெறுகிறது. ஒரு எழுத்தாளனின் எதிர்ப்பார்ப்பும், புத்தகங்களை விற்க முடியாத நிலையும் வாங்கியோரின் செயற்பாடுகளும் வீட்டில் மனைவியின், ஏனைய குடும்ப உறுப்பினர்களின் மனநிலையும் என இக் கதையை ஒரு எழுத்தாளனின் மனநிலையில் இருந்து வாசிக்கத் தூண்டும் வகையில் எழுதியுள்ளமை சிறப்பானதாக அமைந்துள்ளது. மீண்டும் பனை முளைக்கும் என்ற குறுநாவலை எழுதும் அவரது கனவு கருகிப் போகும் நிலையும் மனைவியின் நகையை அடகு வைத்து புத்தகம் வெளியிட்ட நிலையும் ஒரு எழுத்தாளன் குறித்த மனைவியின் நிலைப்பாடும் எழுத்தாளனின் கனவுகள் எதிர்பார்ப்புக்கள் ஏமாற்றங்களாய் அமையும் நிலை என எமது சமூகத்தில் எழுத்தாளனுக்கும் எழுத்துக்கும் சமூகம் கொடுக்கும் மதிப்பு நிலையையும் யதார்த்தமாக இக் கதைவழி எடுத்துக் காட்டியுள்ளமை சிறப்பு.

மந்திரி இட்ட தீ என்ற கதை அமைச்சர் குழாமாய் யாழ்ப்பாணம் வந்து தங்கி அங்கு நல்ல உணவுகள் உண்டு குடித்து விட்டு அரசியல் பேசும் நிலையும் இவர்களால் தமிழரின் வரலாற்றில் எந்த மாற்றமும் நிகழ முடியாது என்பதையும் முன்னை இட்ட தீ என்ற பட்டினத்தார் பாடல் அடியை நினைவூட்டி இது மந்திரி இட்ட தீயென இக்கதையை முடித்து பேரப் பிள்ளைகளுக்கென ஏதும் அரசியல் இருக்குமா என்ற கேள்வியுடன் இக்கதைய முடித்துள்ளார். போலி வாக்குறுதி அரசியலின், மனம்மாறா அரசியலின் முகங்கள் இக்கதைவழி வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

மேற்கில் தோன்றி உதயம் என்ற கதை ஒரு மலையகத் தோட்டப் பின்னணியில் எழுதப்பட்டுள்ளது. தோட்ட மனேச்சருக்கும் வாசு என்பவனுக்குமான வாழிடப் பிரச்சினை சார்ந்து இக்கதை பேசுகிறது. கூரையைப் பிரிக்க நினைக்க தகரம் வழங்கிய செயல் புரட்சிகளால் தான் விடியல் சாத்தியம் என்பதை மேற்கில் மறைந்த சூரியனையும் உதய சூரியனாக்கி குறியீடாக்கி இக்கதை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. வாழ்வுரிமைக் கான போராடும் ஒரு இனக் குழுமம் தனக்குள் வாழும் ஒருவனின் வாழிடப் பிரச்சினையை கூட சரியாக கையாளமுடியா நிலையில் இருக்கும் யதார்த்தத்தை இக் கதை கதாசிரியர் எடுத்துக்காட்ட முனைகிறார். இக்கதை 2013 டிசம்பரில் ஜீவநதியின் மலையக மலரில் வெளி வந்துள்ளது.

புது மாப்பிள்ளை என்ற கதை தங்கவேலி, ஜானகி அவர்களது பிள்ளைகள் என்ற பாத்திரங்களை மையப்படுத்தி வெளிநாட்டுக்கு பணிபெண்ணாக செல்லுதல் என்ற பண்பாடு மலையக பெண்கள் வாழ்விலும் குடும்ப வாழ்விலும் உறவுகளிலும் ஏற்படுத்தி யுள்ள தாக்கங்களை பேசுவதாக அமைகிறது. தாயையும் மகளையும் வெளிநாட்டுக்கு அனுப்பி விட்டு தனித்திருக்கும் தங்கவேலுவின் மனநிலையும் இதனால் அவர்களது குடும்ப வாழ்வில் ஏற்பட்ட விரிசல்களும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கதை வழி எடுத்துக் காட்டப்படுகின்றன. வசதி வாய்ப்புக்கள் தேவை அவை எம் அடிப்படை குடும்ப உறவை, உணர்வை சிதையா வண்ணம் இருக்க வேண்டும் என்பதை கதாசிரியர் இக்கதை வலியுறுத்துகிறார். இக் கதை 2013 டிசம்பர் ஞானம் இதழில் வெளிவந்த கதையாக அமைந்துள்ளது.

மந்திரி கட்டாத பாலம் என்ற கதை ஒரு மாணவ உட்பட பலரை பலியெடுத்த பாலப்புரமைப்பின் போலிகளை எடுத்துக்காட்டி இறுதியில் மந்திரியே அப்பாலம் இடிந்து விழுந்து சாவதாகக் காட்டி இன்றைய புனரமைப்புக்களின் பொய் முகங்களை, தேர்தல் வாக்குறுதி தோலுரித்துக் காட்டுவதாய் அமைந்துள்ளது. கதையின் இறுதியில் அப் பாலத்தின் அடியை அறுத்து விட்டவர்கள் நாங்கள்தான் என உரிமை கோரும் துண்டுப் பிரசுரம் மரத்தில் ஒட்ட பட்டதை காட்டி இது ஆடி மழை அழுதாலும் விடாது என கதையை முடித்து இவ் அநீதிகளுக்கான புரட்சியை மறைமுகமாக காட்டுகிறார்.

கும்பா என்ற கதை. எப்படி மலையக எழை மக்களின் பாரம்பரியப் பொருட்கள் உயர் பணக்காரர் களுக்கு விற்கப்பட்டன என்பதையும் கும்பா என்ற பாத்திரத்தை அந்த வீட்டில் பார்த்ததும் ஏழைத் தொழிலாளியான கந்தசாமிக்கு நினைவு வரும் தன் பழைய கால ஞாபகங்களையும் இணைத்து ஒரு கலாசார விழிப்புணர்வை தரும் கதையாக இதனைப் படைத் துள்ளார். மலையகச் சூழலில் இவர் இக்கதையை படைத்தாலும் எமது சூழலுக்கும் இக்கதை பொருத்த முடையதாகவே அமைகிறது. இதனை ஒரு கதையாக அவர் கட்டமைத்தமுறை சிறப்புக்குரியது. இறுதியில் கும்பாவை அவன் களவெடுத்து வருதவதாக காட்டி எது கனவு என்ற சிந்தனையை எம்மிடம் ஊட்டியுள்ளார்.

அம்மாவும் தீபனும் என்ற கதை மனதை உருக்கி இப்போதும் மனதை விட்டகதை கதையாக என்னை ஏதோ செய்கிறது. பிறப்பிலேயே கை கால் சூம்பி வலது குறைந்த ஒரு மகனை அவனது தாய் எத்தனை கஷ்டங்கள் பட்டாலும் அவனுக்கு வேண்டிய பணிவிடைகளை செய்து வளர்ப்பதும். அவள் இளைஞனாகிய பின்னும் அப்பணிவிடைகளை செய்யும் போது அவனது பருவ உணர்வுகளை அடையும் மாற்றங்களும், காமம், பாலியல் போன்ற உணர்வுகளை அவன் கையாளும் முறையும் இறுதியில் அவனுக்கு சன்னத்து சடங்கு செய்ய முயல்வதும், அதற்குள்ளாகவே அவன் மரணம் அடைந்து விடுவதும் என ஒரு விசேட தேவையுள்ள பிள்ளை சார் உளவியல் பின்புலத்தில் வைத்தும் தாய்ப்பாசம் என்ற தளத்தில் வைத்தும் எழுதப்பட்ட கதையாக அமைந்து இக்கதை சிறப்புப் பெறுகிறது. தமிழிச் சூழலில் இத்தகைய கதைகள் மிக அரிது அதை சிறப்பான நேர்த்தியுடன் தந்துள்ளார். மு.சி. அவர்கள் இத்தகைய கதைகள் தான் அவரை மலையக எழுத்தாளர் என்ற எல்லை கடந்து ஈழத்து தமிழ் எழுத்தாளர் என்ற வகைக்குள் வைத்துப் பார்க்க வைக்கிறது என்று கூறலாம். இதே போல இத் தொகுப்பில் உள்ள பேய்களும் சேதுமாதவனும் என்ற கதை பேய்ப்பயம் காட்டி




சிறுவயதில் வளர்க்கப்படும் சிறுவர்கள் பின்னர் தரம் 5 புலமைப் பரீட்சை என்ற பேய்ப்பயத்தை காட்டி எப்படி யெல்லாம் உளநெருக்கடிகளுக்குள் உள்ளாக்கப்படு கிறார்கள் என்பதை கூறும் சமகால கல்வி முறை சார்ந்த விமர்சனமாய் அமைந்த கதையாகி சிறப்புப் பெறுகிறது. ஒரு ரட்சகனின் புறப்பாடு என்பது ஒரு சமூகத்தை மீட்க தேர்தல் அரசியல் மூலம் புறப்படும் புதிய இளைஞனை மையப்படுத்தி அமையும் கதை. அதில் உள்ளூராட்சி, மாகாணசபை தேர்தல் அரசியலின் பலங்களும் பலவீனங்களும் புதிய மாற்றமும் பேசப்படுகிறது. அவைகளும் அவர்களும் என்ற நிறைவுக் கதை ஒரு யானை உலாவும் வனப்பகுதியில் வாழும் வனவிலங்கு அதிகாரிகளை அங்கிருந்த குசுமா, சோமாவதி, ரன்பண்டார போன்றவர்கள் வழி அந்தக் காட்டு வாழ்வும் அதில் அவர்கள் எதிர் கொண்ட நெருக்கடி களும் இறுதியில் அவர்களின் மரணமும் காட்டப்பட்டு யானைகளை விரட்ட தம் வாழ்வையே தியாகம் செய்யும் வன இலாக்கா ஊழியர்களின் நிலை எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. இதுவும் ஒரு புதிய கருப் பொருளாக அமைந்து சிறப்புப் பெறுகிறது.

எனவே ஒட்டுமொத்தமாக மலையகத்தின் மூத்த படைப்பாளியான மு.சிவலிங்கத்தின் வெந்து தணிந்தது காலம் என்ற இச் சிறுகதைத் தொகுப்பு பேசும் எல்லாக் கதைகளுக்குள்ளும் ஏதோ ஒரு தனி மனித அவலம், சமூக அவலம், இன அவலம், அரசியல் அவலம் குடி கொண்டிருப்பதை எம்மால் இனங்காண முடிகிறது. பல கதைகளில் அவரது அரசியலை தரிசிக்க முடிகின்ற அதே வேளை புதிய கருப்பொருள் சார்ந்த அவரது கதைகள் சமூக மனச்சாட்சியை உலுப்பி எம்மை சிந்திக்க வைப்பனவாய் அமைந்துள்ளமையும் சிறப்புக்குரியது. வெந்து தணிந்த காலத்தின் இக் கதைகள் இன்னமும் வெந்து தணியாமல் எம் மனதுக்குள் இருக்கும் உணவுகளுக்கு உயிர்ப்பூட்டும் கதைகளாய் அல்லது ஒரு காலகட்ட சம்பவங்களின் நினைவு மீட்டல்களாய் அமைந்து வாசகர்களாகிய எம்மையும் அவ்வக் காலங் களுக்கு அழைத்துக் சென்று வாழ வைக்கும் சிறப்புக் கொண்டனவாய் அமையும் ஒரு வாசகனாய் உணர முடிகிறது. மலையக தமிழர்களும் இந் நாட்டில் எங்கும் பாராபட்சமின்றி நடத்தப்பட வேண்டும் என்பதையும் மலையகத்தில் ஏற்பட வேண்டிய உண்மையான மாற்றங்களையும் கூட இத் தொகுப்பின் சில கதைகள் உணர்த்துகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



மு.சிவலிங்கம் அவர்கள் மலையகத்தின் முக்கியமான படைப்பாளியாகத் திகழ்பவர். மலையக மக்களின் பிரச்சினைகளை தன் படைப்புகள் வாயிலாக வெளி உலகிற்கு காட்சிப்படுத்தி வருபவர். பல்வேறு ஆளுமைத்திறன்களை உடைய மு.சிவலிங்கம் அவர்கள் மலையக மக்களின் குரலாக ஒலித்துக் கொண்டிருப்பவர். இலக்கியவாதி, அரசியல் வாதி என இரண்டு தளத்தில் நின்று சமூக சேவை செய்து வரும் உன்னத மனிதன். இலக்கியத்துக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். மலையக மக்களின் வளர்ச்சியில் அதிக சிரத்தையுடைய படைப்பாளியாக திகழுகின்ற மு. சிவலிங்கம் அவர்களது நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்காக தருகின்றோம்.

## மு.சிவலிங்கம் - சந்திப்பு - பரணீ

பரணீ:
உங்கள் குடும்பம், பாடசாலைக்கால வாழ்வு, தொழில் பற்றிக் கூறுங்கள்

மு.சிவலிங்கம்:
தலவாக்கொல்லை பெரிய மல்லிகைப்பூ தோட்டத்தில் முத்து முருகன், அழகன் கண்ணம்மா பெற்றோருக்கு 1946 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 26 ம் திகதி பிறந்தேன். ஆரம்ப கல்வியை தோட்டப் பாடசாலையிலும், உயர் கல்வியை சென் பெட்ரிக்ஸ் கல்லூரி தலவாக்கொல்லையிலும், அட்டன் ஹை லன்ட்ஸ் கல்லூரியிலும் கற்றேன். பட்டப் படிப்புக்காக களனி பல்கலைக் கழக அனுமதி கிடைத்தும், பொருளாதார நிலை காரணமாக தொடர முடியாத நிலை ஏற்பட்டது.

பரணீ:
இலக்கியத்துறையில் ஈடுபடவேண்டும் என்ற ஈர்ப்பு ஏன் ஏற்பட்டது? உங்களது முதல் படைப்பு?

மு.சிவலிங்கம்:
ஆரம்பத்தில் கவிதை எழுதுவதில் நாட்டம் ஏற்பட்டது. சஞ்சிகைகள், பத்திரிக்கைகளில் எனது ஆக்கங்கள் வெளிவரத் தொடங்கின. கவிதைகளுக்கப்பால் கதை, கட்டுரைகள் எழுதுவதில் விருப்பம் ஏற்பட்டது. எனது முதல் கவிதை, ஆங்கில கவிஞர் ருட்யார்ட் கிப்ளிங் அவர்களுடைய "IF" என்ற மொழி பெயர்ப்பு கவிதையாகும். இக் கவிதை தினகரன் புதன் மலர் என்ற பக்கத்தில் பிரசுரமாகியது. அதைப் போன்று எனது முதல் சிறுகதை "சுமை தாங்கி" என்ற பெயரில் வீரகேசரியில் 1963 ம் ஆண்டில் வெளி வந்தது. அக் கதை எனது முதலாவது சிறுகதைத் தொகுப்பில் "பேப்பர் பிரஜை" என்ற பெயரில் வெளியாகியது

பரணீ:
உங்களது சிறுகதைகள் பற்றிக் கூறுங்கள்...

மு.சிவலிங்கம்:
எனது சிறுகதைகள் யாவுமே மலையக மக்களின் தேசிய உரிமை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் பற்றியே பேசுகின்றன. எனது கதைகள் யாவற்றையும் புனை கதைகள் என்று என்னால் சொல்ல முடியவில்லை. இந்நிலைக்கு மாறுபட்டு எனது கதைகள் யதார்த்தத்தை தாங்கி நிற்பதாக உணர்கின்றேன். எனது எழுத்துத் தளம் முற்று முழுதாக ஒரு பாட்டாளி வர்க்கச் சூழல் நிறைந்தது. பிறந்தது முதல், இன்று வரை எனது கதை மாந்தர்களுடனேயே, அவர்களது சுக துக்கங்களுடன் ஒன்றி வாழ்ந்து வருகின்ற பிரஜையாகவும் நான் இருந்து வருகின்றேன்.

"உழைக்கும் மக்களின் அரசியல்" என்று ஒரு வீரியம் கொண்ட சிந்தனை என் எழுத்தில் இருப்பதில் நான் உறுதி கொண்டுள்ளவன்.

மானிடத் துயரங்களைத் தரிசிக்க விரும்புகின்ற.... அடிமட்ட மக்களின் வாழ்க்கையை அவதானிக்க விரும்புகின்ற.... வாசகர்களுக்கு ஓரளவேனும் எனது கதைத் தகவல்கள் உதவி செய்யுமென்று நம்புகின்றேன்.

**பரணீ:**

**நாவல் எழுதவேண்டும் என்ற எண்ணம் ஏன் தோன்றியது?**

**மு.சிவலிங்கம்:**

நாவல் என்ற நெடுங்கதை எழுத வேண்டும் என்ற அவசியம் என்னை வலியுறுத்திக் கொண்டேயிருந்தது. மலையகத் தமிழ் மக்களின் 200 வருட வரலாற்றை கல்வித் துறையைச் சார்ந்த சிலர் ஆங்காங்கு அரை குறையாகவே எழுதி வந்துள்ளார்கள். அதுவும் அவர்களது மொழிப் புலமைக் கொண்ட எழுத்து நடையிலேயே எழுதப்பட்டு வந்துள்ளது. அதுவும் கட்டுரை வடிவிலேயே வந்துள்ளது.. அவைகள் பொது மக்களை சென்றடையாமல், கல்வி சார் சமூகத்துக்குள்ளேயே பாதுகாக்கப்பட்டு வந்துள்ளன.! இம் மக்களின் வரலாற்றை இவர்கள் கட்டாயம் அறிந்துக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் இவர்களது மொழி நடையிலேயே, இவர்களைப் பற்றிய வரலாறு எழுத வேண்டும். அதுவும் இம்மக்களின் அனைத்து அரசியல் சமூக நிலைமைகளை சிறுகதை வடிவில் எழுதுவதை விட நெடுங் கதையில் நிறைய தகவல்களை எழுத முடியும் என்றும் கருதினேன். அந்த எண்ணமே எனது முதல் நெடுங்கதையான "பஞ்சம் பிழைக்க வந்த சீமை" என்ற நெடுங் கதையும் "உயிர்" என்ற நெடுங் கதையும் பிறந்தன,

**பரணீ:**


**உங்கள் படைப்புகள் ஊடாக மலையகப் பிரச்சினைகளை வெளிக்கொணர முடிந்ததா?**

**மு.சிவலிங்கம்:**

எனது படைப்புகள் ஊடாக கணிசமான அளவு மலையக மக்கள் முகம் கொடுத்து வரும் பிரச்சினைகள் வெளிக் கொணரப் பட்டுள்ளன..

**பரணீ:**

**மலையக இலக்கிய வளர்ச்சியில் உங்கள் பங்களிப்பு பெரிதாக**



**உணரப்படுகின்றது உங்கள் படைப்புகளுக்கு எவ்வாறான வரவேற்பு உள்ளது?**

**மு.சிவலிங்கம்:**

இலக்கியப் படைப்புலகில் இரண்டு பிரிவுகள் விமர்சகர்களால் வகுக்கப்பட்டுள்ளன. ஒன்று ரசனை இலக்கியம் மற்றையது சிந்தனை இலக்கியம். எனது படைப்புக்கள் இரண்டாம் ரகத்தைச் சேர்ந்தவை. மலையகத் தமிழ் மக்கள் வந்தேறு குடிகளாக இலங்கைக்கு வந்தது முதல் இன்று வரை அவர்கள் முகம் கொடுத்து வந்துள்ள அரசியல் சமூக வாழ்வியல் பற்றிய தகவல்களை எழுதி வருவதால், அவை யாவும் ஆவணங்களாக வாசகர்களால் உணரப்பட்டு வருகின்றன. ஆகையால் எனது படைப்புகள் தனித்துவமாக நிற்கின்றன. அதனால் வாசகர் மத்தியில் வரவேற்பைப் பெற்று வருகின்றன.

**பரணீ:**

**மலையக இலக்கிய வளர்ச்சி பற்றி...**

**மு.சிவலிங்கம்:**

மலையக இலக்கிய வளர்ச்சி அரசியல், தொழிற்சங்கவாதி கோதண்டராமன் நடேச ஐயர் காலத்திலிருந்து தோன்றி வந்துள்ளது. அவரே மலையக இலக்கியத்தின் முன்னோடியாக இருந்தார். அவருக்கு அடுத்த நிலை இலக்கியவாதியாக ஆங்கில மொழி படைப்பாளர் கவிமணி சி.வி.வேலுப்பிள்ளை அடையாளமாகின்றார். 1960 களில் மிக வேகமான




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முறையில் மலையகத்தில் பல படைப்பாளர்கள் தோன்றினார்கள். குறிப்பாக பல படைப்புக்களை தந்து, தொடர்ந்து எழுதி வாசகர் மத்தியில் நெருக்கமாக அறியப்பட்ட சிலரின் பெயர்களை மட்டும் இங்கு நினைவூட்ட வேண்டியது அவசியமாகின்றது. அவர்களுள் கதாசிரியர்களாக என்.எஸ்.எம்.ராமையா, தெளிவத்தை எஸ்.ஜோசப், மு.சிவலிங்கம், சாரல் நாடன், நயீமா பஸீர், பூரணி, மல்லிகை சி.குமார், மலரன்பன், மாத்தளை வடிவேலன், மொழி வரதன், கவிஞர்களாக தமிழோவியன், குறிஞ்சித் தென்னவன், பூண்டுலோயா தர்மு, குறிஞ்சி நாடன், மல்லிகை சி.குமார், சு.முரளிதரன், ஆகியோர்களை அறிய முடிந்தது. புதிய படைப்பாளர்களாக தொடர்ந்து எழுதி வரும் பிரமிளா பிரதீபன், சிவனு மனோகரன், விமர்சன உலகில் லெனின் மதிவானம். அவருக்கு அடுத்து, சு.தவச்செல்வன், போன்றோர். சில நூல்கள் எழுதி, வாசகர் மத்தியில் அறிமுகமாகியுள்ளனர். இன்னும் பலர் நிறைய கவிதைகள் எழுதியும், சிலர் தொகுப்புகள் போட்டவர்களாகவும் உள்ளனர். இருந்த போதிலும் சிறுகதை, நெடுங்கதை,கவிதை ஆய்வுகள் போன்ற துறைகளில் இன்னும் வேகமாக மலையக இலக்கியம் வளர வில்லையெனக் கூறலாம்.

**பரணீ:**

**200 ஆண்டு கடந்த நிலையில் மலையக இலக்கியத்தில் வளர்ச்சில் பங்காற்றியவர்கள் பற்றி கூறுங்கள்**

மு.சிவலிங்கம்:



மேற்கூறப்பட்டவர்களோடு பல புதியவர்களும் பங்காற்றி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

**பரணீ:**

**மலையகத்தில் இன்னும் வளர்ச்சி காண வேண்டிய துறைகளாக நீங்கள் கருதுவது?**

மு.சிவலிங்கம்:

பாரம்பரிய பெருந்தோட்டத் தொழிலுக்கப்பால் புதிய தொழில் துறையில் காண வேண்டிய மாற்றங்களும், பொருளாதார நிலையும், கல்வி முன்னேற்றமும், முக்கியமாக கவனிக்கப்படவேண்டிய வளர்ச்சிகளாகும். இந்த வளர்ச்சிகளுக்குத் தடையாக அரசே இருப்பதால் எமது மக்கள் இயலாமைக்குள்ளாக்கப் பட்டுள்ளார்கள்.!

**பரணீ:**

**மலையக மக்கள் இன்று எதிர் நோக்கும் பாரிய பிரச்சினைகளாக நீங்கள் கணிப்பது?**

மு.சிவலிங்கம்:

தேசிய அந்தஸ்தைப் பெற வேண்டிய நில உரிமை, அவர்கள் வாழுமிடம் கிராமமயமாக்குப்படல், அவர்கள் கிராம மக்களாக அங்கீகரிக்கப்படுதல், நாட்டுரிமை அந்தஸ்தைப் பெற வேண்டிய உள்ளூராட்சிக்குள் அவர்கள் உள் வாங்கப்படுதல், நாடளாவிய மட்டத்தில் உலக தரத்திற்கு சவால் கொடுக்கும் விஞ்ஞான, கணித கல்வி வாய்ப்புகள் வழங்கப்படுதல், அரசின் கல்வி ஒடுக்கு முறை தகர்க்கப்படுதல், போன்ற கோரிக்கைகளுக்குத் தீர்வை எதிர் பார்ப்பதே இன்றைய பாரிய பிரச்சினைகளாக இருந்து வருகின்றன.

**பரணீ:**

**உங்களுடைய அரசியல் ஈடுபாடு, அரசியற் செயற்பாடுகள் பற்றி கூறுங்கள்?**

மு.சிவலிங்கம்:

*1975 ம் ஆண்டு ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தில் பத்திரிக்கையாசிரியராக ஈடுபட்டு வந்துள்ளேன். அதன் பிறகு மலையக இளைஞர் முன்னணியில் இணைந்து செயல்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டேன். 1989 ம் ஆண்டு மலையக மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியை உருவாக்கியவர்களுள் ஒருவனாக இருந்து, அக் கட்சியின் செயலாளர் நாயகமாகவும், பொறுப்பேற்று, பின்னர் மத்திய மாகாண சபை பிரதித் தலைவராகவும் பணி புரிந்துள்ளேன். கட்சிக்குள் கருத்து முரண்பாடு காரணமாக, கட்சி அரசியலை விட்டு விலகி, இன்று வரை சமூக அரசியலில் ஈடுபட்டு வருகின்றேன்.

பரணீ:

நீங்கள் பெறுக் கொண்ட விருதுகள் பட்டங்கள் பற்றிக் கூறுங்கள்?

மு.சிவலிங்கம்:

அரச சாகித்திய விருதுகளை நான்கு முறையும், கொடகே தேசிய விருதுகளை இரண்டு முறையும், வி.ப.வி விருது, காலி, தேசிய இலக்கிய விருது ஆகிய வற்றோடு தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தின் கரிகாற் சோழன் விருது, அரச கலாச்சார திணைக்களத்தின் கலாபூசணம் விருது, கலை மாமணி விருது, பெற்றுள்ள தோடு, இலங்கையின் அதி உயர் இலக்கிய விருதான சாகித்திய ரத்னா விருதினையும் பெற்றுள்ளேன்.

இன்னும் எழுத வேண்டும் என கருதுபவை?

மு.சிவலிங்கம்:

இலங்கை பெருந் தோட்ட தொழிற்சங்க வரலாறு, மலையக மக்களின் நிலவுரிமை பற்றிய நெடுங்கதை, தற்போது பிரசுரத்துக்குக் காத்திருக்கும் "எமதர்மன் விசாரணை" என்ற நகைச்சுவை ஓரங்க நாடகம் என்பனவாகும்.

பரணீ:

உங்களுடைய Master piece எனக் கருதுவது?

மு.சிவலிங்கம்:

"பஞ்சம் பிழைக்க வந்த சீமை" என்ற வரலாற்று நெடுங் கதையே எனது உச்சப் படைப்பாகும் (Master piece)

பரணீ:

ஈழத்து இலக்கியம் பற்றி உங்களது பார்வை...

மு.சிவலிங்கம்:

உன்னதமான படைப்புக்களும், உன்னதமான படைப்பாளிகளும், ஈழத்தின் இலக்கியத்தின் உச்ச நிலையை அன்று உருவாக்கிய காலமிருந்தது. அக் காலத்துக்குப் பின்னர் இன்று புதிய செல் நெறியில் படைப்புக்கள் உருவாகியுள்ளன. அவைகள் பல்துறை பார்வைகளுக்கப்பால் போர்க் காலத்து சம்பவங்களே பேசு பொருளாக அதிகமாக எழுதப்பட்டுள்ளன. புலம் பெயர் இலக்கியங்கள் அந்தந்த நாட்டு சூழலுக்கேற்ற வாறு சமூக, கலாச்சார, பண்பாட்டு போக்குகள் பற்றியும் எழுதி வருகின்றன. தமிழக இலக்கியங்களை ஒப்பிடும் போது, ஈழத்துப் படைப்புகள் சமூக, அரசியல் நிலை பற்றி அதிகமான படைப்புக்கள் எழுதப்பட்டு வருகின்றன.

பரணீ:

மலையகத்தில் வாசிப்பு பழக்கம் எவ்வாறு உள்ளது? இளந்தலைமுறையினர் எழுத்துச் செயற்பாட்டில் ஈடுபடுகின்றார்களா?

மு.சிவலிங்கம்:

வாசிப்பு பழக்கம் மலையகத்தில் மிகக் குறைவு. அத்தோடு கை தொலை பேசி,ஸ்மார்ட் போன் முக நூல், தொலைக் காட்சி போன்ற இலத்திரனியல் ஊடகங்கள் வந்த பிறகு அறவே வாசிப்பு குறைந்து விட்டன. சவாலாக, புதுக் கவிதைகள் என்று சிலர் காத்திரமாகவும், சிலர் எழுதிப் பழகி வருபவர்களாகவும் உருவாகிக் கொண்டிருப்பதில் சிறிது நம்பிக்கையும் திருப்தியும் உண்டு.



மாயாண்டியாக மு.சிவலிங்கம்

பரணீ:

நீங்கள் கலைத் துறையில் ஈடுபாடு கொண்டு மேடை நாடகங்களிலும். பின்னர் மலையகம் சம்பந்தப்பட்ட "புதியகாற்று" என்ற சினிமா படத்திலும் நடித்துள்ளதைப் பற்றி சற்று கூறுவீர்களா..?

மு.சிவலிங்கம்:

ஆரம்பத்தில் பாடசாலை நாடகங்களிலும், பாடசாலைக்குப் பின்னர் பெருந் தோட்டங்களில் பல மேடை நாடகங்கள் அரங்கேற்றியுள்ளேன். 1975 ஆம் ஆண்டு தொழிற்சங்கவாதி திரு.வி.பி.கணேசன் தயாரித்த "புதிய காற்று" படத்துக்கு மூத்தப் படைப்பாளர் தெளிவத்தை ஜோசப் திரைக் கதை,வசனம் எழுதினார். அப்படத்துக்கு உதவி நெறியாளராக நான் பொறுப் பேற்றிருந்தேன். மிக முக்கியமான தோட்டத் தொழி லாளர் தலைவனாக மாயாண்டி என்ற கதா பாத்திரத்தில் நடித்துள்ளேன்..!.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஜெயப்பிரசாந்தி ஜெயபாலன்

# தோட்டத்து உழைப்பாளிகளின் துன்பியல் வாழ்வின் வெளிப்பாடாய் சி.வி யின் தேயிலைதேசம்




ஈழத்து இலக்கிய உலகில் மறக்கப்பட முடியாத மகத்தான ஆளுமைகளில் ஒருவரான சி.வி வேலுப் பிள்ளை அவர்களின் "Born to Labour" என்னும் ஆங்கில மலையகப் படைப்புக்களை மு. சிவலிங்கம் அவர்களின் செம்மையான தமிழ் மொழியாக்கத்தில் "தேயிலை தேசம்" என்னும் சிறுகதைத் தொகுப்பாக துரைவி பதிப்பகத்தினர் 2003 ஆம் ஆண்டில் பதிப்பித்து வெளி யிட்டுள்ளனர். இந்நூல் என்னதான் மொழிபெயர்ப்பு ஆக்கமாக இருந்தாலும் சி.வி வேலுப்பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் வெளிப்படுத்திய துயரம் சுமக்கின்ற உழைப்பாளிகளான தோட்டத் தொழிலாளர்களின் துன்பியல் வாழ்வை அவ்வாறே இரத்தமும் சதையுமாகத் தமிழில் எடுத்தியம்பி நிற்கின்றது.

நம் நாட்டின் முதுகெலும்பாய் இருந்து பொருளாதாரத்தைப் பலப்படுத்தும் மலையக மாந்தரின் வெளியே காண்பிக்கப்படாத அவல வாழ்வை அவர் களின் காதல், விருப்பு, வெறுப்புகள், பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வியல் சடங்குகள், உணவு முறைகள், மருத்துவப் பழக்கவழக்கங்கள், இருப்பிட அமைவுகள், தொழிலில் அனுபவிக்கும் துயரங்கள், உரிமைக்கான போராட்டங்கள், கூலி அதாவது உழைப்பிற்கான ஊதியம் பெறும் முறைகள், முதலாளி வர்க்கத்தின் சுரண்டல்கள், முதுமையின் போதான ஏக்கங்கள் முதலான பல்வேறு அம்சங்களின் ஊடாக இக்கதைகள் ஒவ்வொன்றும் பதிவு செய்து செல்கின்றன.

சான்றாக சிலவற்றை நோக்கலாம்,

தாலாட்டு, தங்கத்தோடுகள், வசந்த காலங்கள், வைகுந்த அம்மானை என முன்னுள்ள நான்கு கதைகளும் ஒன்றன்பின் ஒன்றாக ஒரே கதையின் தொடர்ச்சியாக இம்மாந்தர்களின் பிறப்பு முதல் இறப்பு வரையான வாழ்வியல் சடங்குகளையும் அவற்றினூ டான அவர்களது வாழ்வியல் அவலத்தையும் பேசிச் செல்கின்றன. குறிப்பாக தாலாட்டு என்ற சிறுகதையில் ஒருபெண் கர்ப்பம் தரித்தது தொடக்கம் அக்குழந்தை யைப் பிரசவிக்கும் வரை அவர்களது லயத்தில் கடைப் பிடிக்கப்படும் சடங்கு சம்பிரதாயங்கள் பழக்க வழக்கங்கள் அனைத்தும் மிகச்சிறப்பாக சுவாரஸ் யத்துடன் விபரிக்கப்படும் அதேவேளை அவற்றினூடே வெளிப்படும் அவர்களது வாழ்வியல் அவலத்தையும் பதிவு செய்யத் தவறவில்லை. சான்றாக,

"இலைகள் படர்ந்த பச்சைக்காடுகளில் கவ்வாத்தும் கொழுந்தும் என்ற போர்வையிலேயே தங்களை மூடிக்கொண்டு வெளி உலகத்தை இழந்து வாழ்ந்து வந்தார்கள்" என கதையின் ஆரம்பத்தில் இன்றைய உலகிலிருந்து தூரமாகிப்போன அவர்களது துயரவாழ்வைப் படம்பிடிக்கும் ஆசிரியர் "அவர்களின் வாழ்க்கை வறுமையில் கிடந்தாலும் அந்தத் தாலாட்டுக் கோடி இன்பத்தைக் கொண்டேயிருந்தது" என கதையின் இறுதியில் வறுமையிலும் செம்மையாக வாழும் அவர் களது காதல் வாழ்வையும் பதிவுசெய்யத் தவறவில்லை.

மச்சான் மாமன் முறைக்காரர்களின் கேலி கிண்டல்களுடன் ஆரம்பித்து விறுவிறுப்புடன் நகர்ந்து செல்லும் "தங்கத்தோடுகள்" என்னும் தலைப்பிடப்பட்ட கதை முதற்கதையின் தொடர்ச்சியாக சடங்கு சம்பிர தாயங்களை நீட்டிச் சொல்கின்றது மொய் வைத்தல் விருந்தோம்பல் உறவுகளுக்கு உரிய மரியாதை அளித்தல் முதலானவற்றைக் காதுகுத்துச் சடங்குடன் இணைத்துச் சொல்லும் ஆசிரியர் "இந்தக் கலிகாலத் தில நம்ம சனங்க... எவ்வளவோ நடத்த வேண்டிய காரியங்களயெல்லாம் மறந்து போறாங்க.... சம்பிரதாய சமாச்சாரங்கள் கூட அவங்களுக்கு ஞாபகப்படுத்த வேண்டியிருக்கு...." என்கின்ற பழனி மாமனின் கூற்றின் மூலமும் சடங்கு சம்பிரதாயங்களை மறந்த இன்றைய தலைமுறையினரைச் சாடவும் தவறவில்லை.

தாலாட்டு என்னும் கதையில் பிறந்த குழந்தை யான ஜானகி வளர்ந்து குமரியானதையும் அவளது திருமணத்தையும் எடுத்துச் சொல்லும் "வசந்த காலங் கள்" என்னும் கதை திருமணம் சார்ந்த அவர்களின் சடங்குகளைப் பேசிச்செல்கின்றது "பொம்பிளப் புள்ளகள வளக்கணுமுன்னா... உள்ளங்கைக்குள்ள மடிச்சி வச்சிக்கிட்டுத்தான் வளக்கணும்" என்கின்ற யதார்த்தத்தைப் பதிவுசெய்துள்ள இக்கதை பெண் ணொருத்தி திருமணத்துக்கு மனதளவில் தயாராகி விட்டாளா? அதுபற்றிய அவளின் விருப்பு வெறுப்புகள் என்னென்ன என்பது எதையுமே கேட்காது பெரியவர் விருப்பப்படி மணம் செய்து வைக்கின்ற அவர்களின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழக்கத்தையும் பதிவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இறப்புச் சடங்கையும் அது சார்ந்த சம்பிர தாயங்களையும் உறவுகளின் தோள் கொடுத்தலையும் பற்றிப் பேசிச்செல்கின்ற வைகுந்த அம்மானை என்னும் கதையும் அவர்களின் வாழ்வியல் யதார்த்தத்தை எடுத்து விளக்கி இப்பாத்திரங்கள் இவ்வாறே நாவலாக நீண்டு செல்லாதா என்கின்ற ஏக்கத்தை உண்டுபண்ணிச் செல்வதும் இக்கதைகளின் சிறப்பம்சம் எனலாம்.

உழைக்கும் வர்க்கத்தின் உரிமைக்கான போராட்டத்தை வேறுபட்ட கோணத்தில் தாடியையே ஆயுதமாக்கி நகர்ந்து செல்லும் ஒரு புதிய ஆயுதம் என்னும் கதை வரலாற்றுப் பதிவாகின்றமையும் குறிப்பிடத்தக்கதே.

தேயிலைத் தோட்டத்தில் மாடாய் உழைத்து ஓடாய்த் தேய்ந்து தம் கடைசிக் காலத்தில் ஒருவேளை சோற்றிற்கும் இருப்பிடத்திற்குமே வழியற்றுத் தவிக்கும் உழைப்பாளிகளின் ஒட்டுமொத்த வாழ்விற்கும் எடுத்துக் காட்டாய் சிவசாமி ஐயரின் வாழ்க்கையை விபரிப்பதாக உழைக்க மட்டுமே பிறந்தவர்கள் என்ற சிறுகதை அமைகின்றது

"பொறந்து... வளந்து...தலையெழுத்து.. அப்புறம் அடுத்தவனுக்கு ஊழியஞ் செய்து... கடைசியில் மண்டையைப் போடுற கூட்டம்.. ஒரு பொறவி" என்கின்ற கந்தசாமியின் தத்துவம் உண்மையில் தோட்டச் சிறார்களின் தலைவிதியை அவரது வாழ்வியல் அனுபவத்தினூடாக ஒட்டுமொத்த உலகிற்கும் எடுத்துச் சொல்வதாக அமைகின்றது. இவ்வாறாக இக்கதையில் அவர்களது உணவு முறைகள், மருத்துவப் பழக்கங்கள், காதல் வாழ்வு, உழைப்பு முறை, முதுமைக்காலத்துயர் என்பன "அவரது வாழ்க்கையில் இன்று இன்னொரு பொழுதும் புலர்ந்தது" என்கின்ற கதையின் இறுதிக் கூற்றினூடாக முத்தாய்ப்பாகின்றது.

இவ்வாறு இத்தொகுப்பிலுள்ள கதைகள் ஒவ்வொன்றும் உழைக்க மட்டுமே பிறந்த மலையக மக்களின் துன்பியல் வாழ்வை இரத்தமும் சதையுமாகப் பதிவு செய்வதில் வெற்றி கண்டுள்ளன என்றே கூறலாம்.

---

மு.சியின் படைப்புக்கள் பற்றி மூத்த எழுத்தாளர் - சாகித்திய ரத்னா - தெளிவத்தை ஜோசப்...

"மு.சிவலிங்கம் என்னும் பெயர், இலங்கைத் தமிழ் இலக்கிய உலகில் பொதுவாகவும், மலையக இலக்கிய உலகில் குறிப்பாகவும் முனைப்புற்றுத் திகழும் ஒரு முன்னணி பெயராகும்.,

சி.வி.யின் "Born to labour" என்ற ஆங்கிலப் படைப்பை "தேயிலை தேசம்" என்று தமிழில் தந்தவர். நாட்டாரியல் "மலையகத் தமிழர் நாட்டுப்புறப் பாடல்கள்" என்னும் கவனத்துக்குரிய இரு நூல்களுடன், கவிதை, நாடகம், சினிமா, நடைச் சித்திரம், கேலிச் சித்திரம் என பல் துறைகளில் தடம் பதித்தவர். என்றாலும் அவருக்கான இலக்கியத் துறையாக, அவரே விரும்பி எடுத்துக் கொண்டிருக்கும், அவரை முக்கியப்படுத்திய எழுத்துத் துறையாக இருப்பது சிறுகதைத் துறையாகும். மலைகளின் மக்கள் - 1991 (13 கதைகள்). ஒரு விதை நெல் - 2004 (15 கதைகள்) ஒப்பாரி கோச்சி - 2010 (15 கதைகள்). வெந்து தணிந்தத காலம் - 2013 (15 கதைகள்). சிறுவர் பண்ணைகள் - 2016 (12கதைகள்). ஒரு மழைக் காலத்து வெயில் - 2022 (10 கதைகள்) ஆகிய தொகுப்புக்களில் மூன்று தொகுப்புகளுக்கும், "தேயிலை தேசம்" என்ற மொழி பெயர்ப்பு நூலுக்குமாக நான்கு முறை அரச சாகித்திய விருது பெற்றுள்ளவர்.

மு.சி.யின் சிறுகதைகளின் உள்ளடக்கம் சமூக முக்கியத்துவம் கொண்டது என்பதை மறக்க முடியாது.

அறுபதுகளில் எழுதத் தொடங்கிய மு.சி., மலையக சிறு கதை உலகில் மட்டுமின்றி.. ஈழத்து சிறுகதை பரப்பிலும் இன்னமும் ஆழச் சுவடிடும் ஒருவராகத் திகழ்கிறார் என்றால், அது அவரது எழுத்தின் ஆளுமையாகும்..

மு.சி. என்ற எழுத்தாளன் பத்திரிகை ஆசிரியர், பாடசாலை ஆசிரியர், சினிமா கலைஞன் தோட்ட உத்தியோகத்தர், தொழிற்சங்கவாதி, அரசியல்வாதி, மத்திய மாகாண சபை பிரதித் தலைவர், என தொழிலிலும், பொதுத் துறையிலும் தன்னை பரவலாக்கிக் கொண்டவர்.

"பஞ்சம் பிழைக்க வந்த சீமை" வரலாற்று நாவலும், "உயிர்" என்ற நாவலும் எழுதியுள்ள மு.சி.க்கு, "பஞ்சம் பிழைக்க வந்த சீமை" நாவலுக்கு தஞ்சாவூர் தமிழ் பல் கலைக் கழகத்தின் "கரிகாற் சோழன்" விருதினையும், காலி, பெயார் வே சாகித்திய நிறுவனத்தின் 5 லட்ச ரூபாய் பண முடிச்சையும் பெற்றுக் கொடுத்தது.. தஞ்சை பல்கலைக் கழக இலக்கியக் குழு இலங்கைக்கு வந்து "முஸ்தபா அறக் கட்டளை" விருதை, கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் விழா நிகழ்த்தி விருது வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

மு.சி. இலங்கையின் இலக்கிய பெரும் விருதான "சாகித்திய ரத்னா" விருதினை, எனக்குப் பின்னர் வாங்கி மலையக இலக்கியத்துக்குப் பெருமை சேர்த்துள்ளவர்.

"ஒரு விதை நெல்" சிறுகதைத் தொகுப்பு - 2004 பற்றி செ.கணேசலிங்கன்

"இந் நூலின் கதைகள் யாவும் சிறுகதைத் தோன்றலாக ஆயினும், யாவும் ஒரு தனிப்பட்ட சமூகத்தின் வாழ்வைக் கூறும் நூலாக அமைந்துள்ளதை தொடர்ந்து படிக்கும் போது அறிந்துக் கொள்ளலாம் இக் கதைகள் யாவும் வெறும் கற்பனைக் கதைகள் அல்ல. யதார்த்த வாழ்வை, பல் வேறு கதை மாந்தர்கள் மூலம் கூறி நிற்கின்றன. அரசியலையும் ஆசிரியர் விட்டு விடவில்லை.! தேயிலைத் தோட்டங்களில் நிலவும் வர்க்கப் பிரிவுகளையும், முரண்பாடுகளையும், போராட்டங்களையும் கதைகள் வெளிப்படுத்துகின்றன.

வெறும் அதிகக் கற்பனையில்லாது, மக்களின் வாழ்க்கையை வெளிப்படுத்தி கதைகள் எழுதப்பட்டிருப்பது தனிச் சிறப்பாகும்.

"தேயிலைத் தோட்டம் என்ற நரக லோகத்திற்கு சுப்பிரணடன் எமதர்ம ராஜனாகவும், பெரிய கிளாக்கர் சித்திரகுப்தனாகவும். அடுத்தடுத்த உத்தியோகத்தர்கள் குண்டோதரர்களாகவும், தொழிலாளர்கள் பாவிகளாகவும் அமைந்திருக்கிறார்கள்.." என்று சிவலிங்கம் கதைக்குள் கூறுவது யதார்த்த நிலைமையாகும்..! இவர் தோட்டங்களில் வாழ்ந்து, அங்குள்ள மக்களுடன் பழகிய அனுபவம் மட்டுமல்ல, பகுத்தறிவுடன் பார்த்து, கதைகளை படைத்துள்ளார். இவை யாவும் பொழுதுபோக்கு... நேரங் கொல்லி கதைகளல்ல. சமூகம் பற்றிய இலக்கிய ஆவணமாகும்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மு.சிவலிங்கத்தின் படைப்புகள்

■ சு.தவச்செல்வன்



அறிமுகம்

மலையகத்தில் சுமார் ஐம்பது வருடங்களுக்கு மேலாக புனைக்கதைத் துறையில் இயங்கி வருகின்ற எழுத்தாளர்கள் பலர் உள்ளனர். அவ்வாறானவர்களுள் மு.சிவலிங்கம் மிக முக்கியமானவர். 1960களில் எழுதத் தொடங்கிய இவரது ஆரம்பகால எழுத்து முயற்சிகள் கவிதை சார்ந்ததாக அமைந்திருந்தாலும் கவிதைத் தொகுப்புக்கள் எதுவும் வெளிவரவில்லை. மு.சிவலிங்கம் அவர்கள் 1962ல் வீரகேசரியின் உதவி ஆசிரியர்களில் ஒருவராகச் சேர்ந்து பத்திரிகைப் பணியை ஆற்றியிருந்திருக்கின்றார். இக்காலப் பகுதியில் அவர் எழுதிய முதல் சிறுகதையான "கூலி" வீர கேசரியில் வெளியானது. 1963ல் அவர் எழுதிய மற்றுமொரு கதைதான் "சுமைதாங்கி". அதன் பிறகு அப்துல் அஸீஸ் அவர்களின் ஜனநாயக காங்கிரஸின் "ஜனநாயக தொழிலாளி" என்ற தொழிற்சங்க பத்திரிகையின் பொறுப்பாசிரியராகவும், வீரகேசரியின் கார்ட்டூன் ஓவியராகவும் பங்கு வகித்துள்ளார். 1975ல் "புதிய காற்று" சினிமா படத்தில் நடிகராகவும், உதவி நெறியாளராகவும் செயற்பட்டார். 1976ம் ஆண்டு அக்கரபத்தனை ஊட்டுவள்ளி தோட்டத்தில் ஆசிரியராகவும், பின்பு அக்கரபத்தனை தமிழ் மகா வித்தியாலயத்தில் தமிழ், ஆங்கில ஆசிரியராகவும் கற்பித்துக் கொண்டு, பகுதி நேர எழுதுவினைஞராக தோட்டக் காரியாலயங்களில் தொழில் புரிந்தார். இதற்குப் பின்னர் மு.சிவலிங்கத்தின் திசை அரசியல் சார்ந்ததாக மாறத் தொடங்கியது. "மலையக மக்கள் முன்னணியின்" ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவராகவும், செயலாளர் நாயகமாகவும் தேர்தலில் போட்டியிட்டு மத்திய மாகாணசபை உறுப்பினராகவும், அக்காலப்பகுதியில் மாகாண சபையின் உப தலைவராகவும் செயற்பட்டுள்ளார். இவ்வாறு பத்திரிகை ஆசிரியராகவும், பாடசாலை ஆசிரியராகவும், தோட்ட உத்தியோகத்தராகவும் (எழுது வினைஞர்) நடிகராகவும், தொழிற்சங்கவாதியாகவும், அரசியல்வாதியாகவும், பல்வேறு துறைகளில் ஈடுபாடு கொண்டவர்தான் மு.சிவலிங்கம் அவர்கள். இவையெல்லாம் அவரது ஒரு பக்கமாக அமைந்திருந்தாலும், சிவலிங்கத்தின் ஆளுமையினை மிகத் தெளிவாகவும், துல்லியமாகவும் மக்களுக்கு வெளிப்படுத்தியது, அவரது எழுத்துக்கள் தான். பத்திரிகை ஆசிரியராக தனது பணியை ஆரம்பித்தது முதல், அரசியல்வாதியாக மாறியது வரை தான் சமூகத்திற்கு எதைச் சொல்ல வருகிறாரோ அல்லது எதைச் செய்ய நினைக்கிறாரோ அதனை அவரது எழுத்துக்களில் பிரதிபலிக்கிறார். மலையகத்தில் சுமார் ஐம்பது வருட காலப் பகுதியில் மு.சிவலிங்கம் அவர்கள் மேற்கொண்டுள்ள எழுத்து முயற்சியின் வாயிலாக இதுவரையில் ஏழு நூல்களை வெளியிட்டுள்ளார்.

1. மலைகளின் மக்கள் - 1991 - சிறுகதைத் தொகுப்பு
2. தேயிலை தேசம் - 2003 - மொழி பெயர்ப்பு. (சி.வி.யின் Born to labour)
3. ஒரு விதை நெல் - 2005 - சிறுகதைத் தொகுப்பு
4. மலையக நாட்டார் பாடல்கள் - 2007 - ஆய்வு
5. ஒப்பாரி கோச்சி - 2010 - சிறுகதைத் தொகுப்பு
6. வெந்து தனிந்தது காலம் - 2013 - சிறுகதைத் தொகுப்பு
7. பஞ்சம் பிழைக்க வந்த சீமை - 2016 - நாவல்

இவை இதுவரையில் வெளிவந்த நூல்களாக விளங்குவதுடன், இவை தவிர அவ்வப்போது பத்திரிகைகளில் வெளிவரும் கட்டுரைகள், சிறுகதைகள், பத்திகள் (புத்தகமாகத் தொகுக்கப்படாதவை) முதலியவற்றையும் குறிப்பிடலாம்.

இவ்வாறு மலையகத்தில் அனுபவம் வாய்ந்த மூத்தப் படைப்பாளியாக விளங்கும் மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளை முழுமையாக யாரும் ஆய்வு செய்யவில்லை எனினும் வெவ்வேறு நோக்கத்திற்காக சிலர் அவரது கதைகளைப்பற்றி எழுதியுள்ளனர். அவ்வாறு எழுதியவர்களில் தெளிவத்தை ஜோசப், மொழிவரதன். பெ.சரவணகுமார், எம்.எம்.ஜெய சீலன், சிவலிங்கம் சிவகுமாரன், ஜே.சற்குருநாதன் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

இச்சூழ்நிலையில் மு.சிவலிங்கத்தின் சிறுகதைகளின் இயங்குநிலை குறித்த ஒரு பார்வையை வாசகர் மத்தியில் ஏற்படுத்துவதும் சிவலிங்கத்தின் புனைக்கதையின் சமூக வரலாற்றுப் பின்னணியை வெளிப்படுத்துவதும் கட்டுரையின் நோக்கமாகும். இதுவரையில் சிவலிங்கம் நான்கு சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டிருப்பதுடன், பல சிறுகதைகளை பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் எழுதிக் கொண்டுமிருக் கிறார். எனினும் இவ்வாய்வின் முக்கியத்துவம் குறித்தும், நூல் வடிவில் வெளிவராத சிறுகதைகளை தவிர்த்துகொண்டு இவ்வாய்வானது அவரது "மலைகளின் மக்கள்" (1991), "ஒரு விதை நெல்" (2005), "ஒப்பாரி கோச்சி" (2010), "வெந்து தனிந்தது காலம்" (2013) ஆகிய சிறுகதைத் தொகுதிகளுக்குள் வரையறை செய்து கொள்கிறது.

நுழைவாயில்

எந்தவொரு சமூகத்திலும் படைப்பாளியை சரியாக இனங்காண வேண்டியதும், அவனது படைப்புகளை வாசித் தறிவதும் மக்களது இன்றியமையாத பணியாகவிருக்கிறது. அதே வேளை படைப்பாளனையும் படைப்பையும் துல்லியமாக இனங்கண்டு, இரண்டையும் நேர்மையாக மதிப்பீடு செய்து, மக்கள் முன் அடையாளப்படுத்த வேண்டியது, ஒரு திறனாய்வாளனது கடமையாகவிருக்கிறது. "விமர்சனம் என்பது படைப்பையும், மக்களையும் இணைக்கும் பாலமாக இருக்க வேண்டியது மட்டுமன்றி, படைப்பாளியை யும் மதிப்பீடு செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு.சி அவர்களது சிறுகதைகள் சமூக அடித்தளத்திலிருந்து பிறப்பவைதான். எப்பொழுதுமே அவர் தன்னை ஒரு மக்கள் படைப்பாளியாகவே அடையாளம் காட்ட விரும்புபவர். முதலாவதாக மக்கள் படைப்பாளி என்பவன் யார்..? என்று பார்ப்போமாயின் "மக்களைச் சார்ந்து இயங்குகின்ற படைப்பாளிகள் யாவரும் மக்கள் படைப்பாளிகளே" என்று இலகுவாக வரையறுத்துக் கொள்ள முடியும். எனினும் இக் கருத்தை சற்று விரிவாக பார்ப்போமானால், ஒரு மக்கள் படைப்பாளி, மக்கள் சார்ந்து இயங்கும் போது, அவன் எந்த சமூகத்தைச் சார்ந்தவனாக இருக்கின்றானோ. அச்சமூகத்தை அடையாளப்படுத்த வேண்டியவனாக இருக்கிறான். மேலும் தான் வாழும் அச்சமூகம் எதிர் கொள்கின்ற பிரச்சினைகள், தேவைகள், அபிலாஷைகளை அவர்களுடன் இணைந்தவாறு வெளிப்படுத்தக் கூடியவன். இவைத்தவிர குறித்த சமூகத்தில் வாழும் மக்களின் பண்பாடு, கலை, கலாசாரம், அரசியல், பொருளாதாரம் ஆகிய அனைத்து விடயங்களிலும் அவர்களது நம்பிக்கைகள், மாற்றங்கள், நெருக்கடிகள் குறித்து வெளிப்படுத்தக் கூடியவனாகவும் இயங்குவது அவசியமாகிறது.

சிவலிங்கமும் இவ்வாறு சமூகம் சார்ந்து இயங்குகின்றவர்தான் என்பதை கண்டறிவது பெரும் சிரமமில்லை. சிறுகதைகளுக்கு அவர் வழங்கியுள்ள முன்னுரைகளில் ஒரு பகுதி இவ்வாறு அமைகிறது.

"அன்று சீர்கெட்ட தென்னிந்திய பொருளாதார அமைப்பில் சிக்குண்டு, ஜமீன்தார், மிராசுதார், பண்ணையார், நிலப் பிரபுக்கள் ஆகிய சக்திகளின் கொடுமைகளில் நசுக்கப்பட்டு, கூலி விவசாயிகளாக பண்ணை அடிமைகளாகப் பணிபுரிந்து வாழவே முடியாமல் வறுமையையும், கண்ணீரையும் மடியில் கட்டிக் கொண்டு, வாழ்வைத் தேடி இலங்கை, மலேஷியா, பிஜித் தீவுகள், தென்னாபிரிக்கா என்று சிதறியோடிய மக்களில் ஒரு பகுதியினரின் 165 கால வரலாற்றில் நான் கண்ட ஜீவாதாரப் பிரச்சினைகளையும், அம்மக்களின் தேசிய அந்தஸ்து, அரசியல் உரிமைகள், பொருளாதார, சமூக, கலாசார வளர்ச்சி இவைகளின் நிலைமைகளைப் பற்றியும் எனது கதைகளில் நான் தொட்டுக் காட்டியிருக்கும் உண்மைகள், இன்றைய கால கட்டத்தில் மக்கள் வரலாறு படைக்க விரும்பும் சமூக சிந்தனையாளர்களுக்கும், இந்த மக்களை வழி நடத்த முன்னே வரும் உண்மையான இளந்தலைவர்களுக்கும், இந்த மக்களையே பகைப் புலனாக வைத்து கதை எழுதும், எழுதிப் பயிலும் அகில இலங்கை எழுத்தாளர்களுக்கும் உதவி புரிந்தாலே போதுமானது." *(மலைகளின் மக்கள் - 1991)*

"எனது எழுத்துத்தளம் முற்றும் முழுதான ஒரு பாட்டாளி வர்க்கச் சூழல் நிறைந்தது, பிறந்தது முதல் இன்று வரை எனது கதை மாந்தர்களுடனேயே, அவர்களது சுக துக்கங்களுடன் ஒன்றித்து வாழ்ந்து வருகின்ற பிரஜையாகவும் நான் இருந்து வருகின்றேன்." *(ஒப்பாரி கோச்சி - 2010)*

மேலே நாம் அவதானித்த இரண்டு முன்னுரை குறிப்புகளிலும் மலையக சமூகம் குறித்து சிவலிங்கம் என்னும் படைப்பாளியின் பார்வை எத்தகையதென்பதையும், மக்கள் மீதான அவரது சிரத்தையும் எமக்குத் தெளிவாக விளங்குகின்றது. இக்குறிப்புக்களை மேலும் வியாக்கியானம் செய்ய வேண்டிய தேவை இருக்காது என்று நான் நினைக்கின்றேன்.

ஒரு மக்கள் படைப்பாளனாக, மலையக சமூகத் தளத்தில் நின்றுக் கொண்டு தனது எழுத்தினூடாக எதனை முன் நிறுத்த வருகிறார், எதனை வெளிப்படுத்த நினைக்கின்றார். என்பதை அவரது மூன்று சிறுகதைத் தொகுப்புகளையும் அடிப்படையாகக் கொண்டு ஆராய்வது பொருத்தமுடையதாக இருக்கும்.

இம் மூன்று தொகுப்புகளிலும் மொத்தமாக நாற்பத்து நான்கு கதைகளுள்ளன. இக்கதைகள் யாவும் 1963 தொடக்கம் 2010 வரை எழுதப்பட்ட 47 வருடங்களுக் கிடைப்பட்டவையாகவுள்ளன. எனினும் இக்கதைகள் எழுதப்பட்ட கால ஒழுங்கில் தொகுக்கப்படவில்லை. மேலும் இக்காலப் பகுதியில் எழுதபட்ட பல கதைகள் இன்னும் தொகுக்கப் படாமலும் உள்ளன. இந்த நாற்பத்து நான்கு கதைகளின் உள்ளடக்கம், அவை வெளிப்படுத்தும் பிரச்சினைகளின் முக்கியத்துவம் குறித்து இக்கதைகளை சில வகைப்படுத்தி நோக்குவது அவசியமாகிறது. பொதுவாகவே சிவலிங்கத்தின் கதைகள் "மலையகம்" என்ற கருத்துநிலை அடிப்படையில் தோன்றியவையே. அவரது கதைகளில் எவ்வகையான கருப்பொருளை எடுத்துக் கொண்டாலும், மலையகம் சார்ந்த சிந்தனைகள் அதில் இழையோடுவதை தெளிவாகவே அவதானிக்கக் முடியும். வாழ்வியல் முறைமைகள், வாழ்வியல் நெருக்கடிகள், அரசியல் அழுத்தங்கள் போன்ற பார்வைகளூடாக மக்களை கடிந்து கொள்ளல், மேல் மட்டத்தினரின் கெடுபிடிகளுக்கெதிராக ஆக்ரோசமான குரல்களை ஒலிக்கச் செய்தல், இன நெருக்கடிகள் தொடர்பான பிரச்சினைகளை அம்பலப்படுத்தல் போன்றவாறான அணுகுமுறைகளை கதைகளுக்குள் கொண்டு வருவது அவரது அணுகுமுறை. இந்த அணுகுமுறைகளுக்கு அடிப்படையாகவுள்ள சமூகப் பின்னணி மிக முக்கியமாகிறது. இந்த சமூகப் அடிப்படையிலேயே இக்கதைகள் அனைத்தும் இயங்கியுள்ளன. அவரது கதைகளை பின்வருமாறு வகைப்படுத்திப் பார்க்கலாம்.

- மலையக மக்களும் குடியுரிமை பிரச்சினையும்
- சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் மலையக தொழிலாளர்களும்
- சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தமும் இந்திய முதலாளிகளும்
- தொழிலாளர்கள் மீதான அடக்குமுறையும் உயிர்பலிகளும்
- மலையகத் தொழிலாளர்களின் வாழ்வியல் அவலங்கள்
- தோட்ட நிர்வாகிகளின் தொழிலாளர் மீதான அழுத்தங்கள்
- கொழும்புக்கு வேலைக்குச் சென்றோர் தொடர்பான பிரச்சினைகள்
- சிங்கள குடியேற்றவாதமும், இனத்துவ அரசியலும்
- அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடைச்சட்டத்தின் தாக்கங்கள்
- அரசியல் விமர்சனங்களை முன்வைக்கும் கதைகள்
- மலையக அரசியலை விமரசிக்கும் கதைகள்
- தேசிய அரசியல் போக்கை விமர்சிப்பவை
- உதிரி மனிதர்களின் பிரச்சினைகள்


இந்த ஆய்வானது மு.சி. யின் மூன்று சிறுகதை தொகுப்புகளையே மூலங்களாகக் கொண்டுள்ளது; கதைகளினூடாகவே பயணிக்கிறது. மலையகத் தமிழர்களின் ஐம்பது வருடகால வரலாற்றின் முனைப்பான மேந்நிலை அழுத்தங்களை இக்கதைகளை ஆதாரங்காட்டி வெளிப்படுத்துகிறது. மலையக சிறுபான்மைச் சமூகம் மீது அரச மேலாதிக்கம் மேற்கொண்ட ஒடுக்குமறைகளின் வழித்தடங்களிலேயே மு.சி.யின் கதைகள் பயணிக்கின்றன. இதனையே இந்த ஆய்வு வகைப்பாடுகள் முன்வைக்கின்றன. ஒரு சமூகத்தில் நீண்ட காலம் எழுதும் படைப்பாளி அச்சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளில் உந்தப்பட்டு அவற்றை இலக்கிய படைப்புகளில் கொண்டு வருவது சமூகத்தின் மீதான அவனது நெருக்கத்தையே குறித்து நிற்கிறது. அவனது ஒட்டுமொத்தப் படைப்புக்களையும் ஆராயும் போது அது வெளிப்படும். அவ்வாறானதொரு ஆரம்ப முயற்சியே இப்படைப்புகளில் செய்து பார்க்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒப்பாரி கோச்சி.....

■ மு.சிவலிங்கம்



இன்னும் அந்த உச்சி மலை கற்பாறையின் மேல் உட்கார்ந்துக் கொண்டு, பள்ளத்தாக்கை.. பணிந்த நிலப்பரப்பை.. நோக்கி கண் கொட்டாமல் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான் “சுக்குரு” என்ற சுப்பிரமணி.. உலகத்தின் பாதி பிரதேசத்தை தன் கண்கள் பார்த்து விட்ட பரவசத்தில் ஆழ்ந்திருந்தான்.. அதி உயரத்திலிருந்து காணும் காட்சியை “பறவைப் பார்வை“ என்பார்கள்.

இனி ஒரு காலத்தில்.... இந்த மலையில்.. இப்படி வந்து உட்கார்ந்து... இவ்வளவு அழகு கொட்டும் பூமியைப் பார்க்க முடியுமா...? அவன் கண்கள் தூரத்து பார்வையிலிருந்து அருகில் இருக்கும் மலைத் தொடர்கள் வரை நோட்டமிடுகின்றன.. அவனுக்கு ஒரு மலையின் உருவத்தைப் பார்த்ததும் வெட்கமும், சிரிப்பும் வந்தது..! “ஒரு பெண் மல்லாக்கப் படுத்துக் கிடக்கின்றது போல.. தலை.. முகம்.. கழுத்து.. மார்பு.. வயிறு.. தொடை.. முழங்கால்.. அப்படியே மனித உருவம்.!!! இன்னொரு மலையில், “ஒரு கூனக் கிழவன் நடந்து போவது போன்ற காட்சி...!” இவ்வாறு ஒரு பாமர ரசிகனின் பார்வையில் பட்ட அந்த எழில் கொஞ்சும் மலை நாட்டை ஒரு கவிஞன் பார்த்திருந்தால்... அவன் இயற்கையை எப்படியெல்லாம் பாடியிருப்பான்...!

வெள்ளை பஞ்சு மேகங்கள் மனிதர்களை, மிருகங்களை, பறவைகளை பல உருவங்களாக ஜாலம் காட்டி, கலைந்து ஓடுகின்றன.. உயர்ந்த காடு.. ஏகாந்தமான சூழல்.. பறவைகள், வண்டுகள், பூச்சிகளின் குரலோசைகள்... காற்றினால் உரசித் தழுவிக்கொள் கின்ற மரங்களின் இன்ப முணகல்கள்.. குளிர் வாடையாய், தென்றலாய் அவனைத் தழுவுகின்ற பாசக் காற்று இன்னும் எத்தனை மாதங்களுக்கு உறவாடும்..? அவனுக்கு இலங்கை மண்ணை விட்டு இந்தியாவுக்குப் போகவே விருப்பமில்லை.. பெற்றோர்கள் செய்த முட்டாள் தனத்தால் பழியை இவன் அனுபவிப்பதா..? கடலை நேரில் பார்த்திராத அவனுக்கு கப்பல் பயணம் நெருங்கிக்கொண்டிருக்கிறது.. வழி காட்டத் தவறிய தலைமைகளினால் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு இன்னும் தேடிக்கொண்டிருப்பவர்களில் அவனும் ஒரு திசை தெரியாதவன்.

சுக்குரு நடு விரலை மடித்து “உள்ளாங் கையில்“ நிழலைப் பார்த்தான். மணி... நடுப் பகல் தாண்டி ஒரு மணி இருக்கும்.. “உறுமு நேரம்” என்று வாய்க்குள்ளே சொல்லிச் சிரித்துக் கொண்டான்... உறுமு நேரமென்றால் பேய்கள் திரியும் நேரமென்பார்கள்! சுக்குரு கற் பாறையிலிருந்து எழும்பி... கல்லிடுக்கில் பளிங்கு போல் வடியும் காட்டு நீரில் முகத்தைக் கழுவிவிட்டு... இரண்டு வாய் தண்ணீரை அள்ளிக் குடித்து.. ஏப்பம் விட்டான்... காட்டுத் தண்ணீரைக் குடித்தால், வயிறு நிறைந்து, பசியாறியது போல் தெம்பு வரும். காட்டுத் தண்ணீர் ஊற்றிலும் நண்டுகள் இருக்கும்.. நண்டுகள் நினைவு வரவே சுக்குரு மீண்டும் சிரித்தான்.

ஊற்று நீரில் வசிக்கும் நண்டுகள், களி மண்ணைத் தோண்டி அழகான வலைகள் செய்திருக்கும். வண்ணான் பீலியில் நண்டுகளைப் பிடித்து, அதன் வயிற்றைத் திறந்து பார்ப்பான் சுக்குரு. ஒரு நாள் ஒரு நண்டின் வயிற்றுக்குள்ளே நிறைய குஞ்சுகள் இருந்தன.. நண்பர்களை சத்தமிட்டு அழைத்து குஞ்சுகளைக் காட்டி பத்திரமாக வண்ணான் கானுக்குள் “புள்ளத்தாச்சி“ நண்டை விட்டு விட்ட விளையாட்டு நினைவுகளை மீட்டிப் பார்த்ததும், மனதுக்குள் ஆனந்தம் ஆர்ப்பரித் தது.. சும்மாடு துணியில் முகத்தைத் துடைத்துக் கொண்டு.. விறகுக் கட்டை சுமப்பதற்கு தொப்பியை மாட்டினான். ஆரம்ப காலத்தில் தொழிலாளர்கள் தலைப் பாகைக் கட்டுவார்கள்.. இது நாகரீகக் காலம்.. இப்போது விதம் விதமான தொப்பி மாட்டிக் கொள் கிறார்கள். மழைக்கும், வெய்யிலுக்கும் தொப்பிதான் துணை..!

“இனிமே.. நமக்கு என்னாத்துக்கு இவ்வளவு வெறகு..?” 7ம் நம்பர் தேயிலை மலையை இன்றைக்கு கவ்வாத்து வெட்டுவார்கள். ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை தேயிலைச் செடிகளை கவ்வாத்து செய்ய வேண்டும்... இல்லா விட்டால் அது மரமாக வளர்ந்து விடும்..! தேயிலை பிறப்பிலேயே, மர இனத்தைச் சேர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாவரமாகும்.. அதை வெள்ளைக்காரன் கவ்வாத்து செய்து, மர இனத்தை செடி இனமாக மூன்றடி, நான்கடி உயரத்துக்குள்ளேயே வளர விடாமல் வைத்துக் கொண்டான்.. புதிய பரம்பரை தொழிலாளருக்கு, தேயிலை மரமா..? செடியா..? என்று கூடத் தெரியாது...! தேயிலை, கொய்யா மரத்தைப் போல, தோடம் மரத்தைப் போல உயர்ந்து வளர்ந்து, கிளைகள் பரப்பி, வானத்தை நோக்கி வளரும் மரங்களாகும்.. அதன் வளர்ச்சியின் தடையில்தான் இன்று தேயிலை பொருளாதாரம் கொடி கட்டிப் பறக்கின்றது.. தொழிலாளிக்கும் தேயிலைக்கும் ஒரே நிலமைதான்!.

சுக்குரு.. விறகுக் கட்டைத் தூக்கிக் கொண்டு பள்ளத்தை நோக்கி நடந்தான். கவ்வாத்து மலையில் அவன்தான் கடைசி ஆள். சக தொழிலாளர்களெல்லாம், ஒவ்வொரு விறகுக் கட்டுகளோடு பள்ளத்தைக் கடந்து.. மலை அடிவாரத்துக்குச் சென்று.. கருத்தை ரோட்டில் இறங்கி நடப்பது தெரிகிறது.

*

சுக்குரு என்ற சுப்பிரமணியை "நானூத்திப் பத்து" என்றால்தான் பெயர் விளங்கும்..! மேக மலை தோட்டத்தில் பத்து.. பதினைந்து பேர் சுப்பிரமணி என்ற பெயரில் இருக்கின்றார்கள். எல்லோருக்கும் பட்டப் பெயர்கள் உண்டு. பல்லு சுப்பிரமணி.. கட்ட சுப்பிரமணி... நெட்ட சுப்பிரமணி.. செரங்கு சுப்பிரமணி.. கொரங்கு சுப்பிரமணி.. என்ற அடையாளப் பெயர்கள் இல்லாவிட்டால், ஆட்களைக் கண்டு பிடித்துக்கொள்ள முடியாது.. சுக்குரு சுப்பிரமணிக்கு ஈ.பி.எப். நம்பர்.... சேம லாப நிதி இலக்கம் 410 என்பதால், எல்லோரும் இலேசாக "நானூத்தி பத்து" என்றே கூப்பிடுவார்கள்...!

களைப்போடு விறகுக் கட்டை சுமந்து வந்து, அடுத்த வீட்டு செல்லம்மா வீட்டு வாசலில் போட்டான்.. "செல்லம்மாக்கா..! இனிமே எனக்கு என்னாத்துக்கு வெறகு..? இருக்கிற வெறகு போதும்.. அது முடியிறதுக் குள்ள, நாங்க இந்தியாவுக்கு பயணப்பட்டுருவோம்...!" என்றான்.

"அப்புடியெல்லாம் சொல்லாத சாமி.! நீ மகா தைரியசாலி..! சொந்த ஊர்ல போயி புள்ளக் குட்டி களோட மவராசனா இருப்ப..! ஈந்தியா நம்ம ஊருதானே சாமி..? திரும்பவும் சொந்த ஊருக்கு போறதப் பத்தி சந்தோசப்பட்டுக்கணும் ராசா..! இந்தா தேத்தண்ணி..! ஆட்டுப் பாலு தேத்தண்ணி..!" என்று செல்லம்மா அத்தை சுப்பிரமணிக்கு "தேத்தண்ணி" யைக் கொடுத்தாள். இந்தியா தெரியாவிட்டாலும் ஆறுதல் கூறினாள். அவளுக்கு இந்த வருசத்துக்கே போதுமான தேயிலை விறகை சுப்பிரமணி கொண்டு வந்து குவித்திருந்தான். தேயிலை விறகு காய்ந்து விட்டால், அதுவும் கட்டை விறகாக இருந்தால் விளக்கு மாதிரி புகை இல்லாமல் எரியும்.. பத்து விறகு குச்சிகளில் சோறு, கறி சமைத்து விடலாம். கன கனக்கும் அடுப்பங்கரையில் சுகமாக குளிர் காயலாம்.. கவ்வாத்துக் காலங்களில் விறகுக்குப் பஞ்சம் கிடையாது.. எல்லோரும் வெந்நீர் குளியல் செய்வார்கள்..

எந்தக் காலமும் அடுத்த வீட்டு செல்லம்மா.. சுப்பிரமணியின் பிள்ளைகளிடம் உயிராய் இருப்பாள். குழந்தையிலிருந்து பெரிய குமரிகளாய் வளரும் வரை அவளும் ஒரு தாயாக இருந்தாள். சுப்பிரமணியின் பிள்ளைகள் "அம்மாயி.. அம்மாயி.." என்று ஆயிரந் தடவை கூப்பிடுவார்கள். ஒவ்வொரு நாளும் என்ன கறி குழம்பு வைத்தாலும், கிண்ணம் நிறைய ஊற்றிக் கொண்டு அடுத்த வீட்டுக் கதவைத் தட்டிக் கொடுப்பாள். "அம்மாயிக்கு தொந்தரவு" என்று பிள்ளை கள் சொன்னாலும், "நாங்க ரெண்டு பேருதானே இருக் கோம்.. சுக்குரு புள்ளக் குட்டிக்காரன் இல்லையா..?" என்று பாசத்தைப் பொழிவாள்.. சுக்குருவின் பிள்ளைகளும் கறி மாற்றம் செய்து கொள்வார்கள்.. நாட்டுக் கோழி இறைச்சி கறி வைத்தால், எலும்பில்லாத இறைச்சிகளை கிண்ணம் நிறைய போட்டு, அம்மாயிக்கு கொண்டு போய் கொடுப்பார்கள். செல்லம்மாவின் வழக்கப்படியே இறைச்சி கறி கொண்டு போகும்போது கையில் ஆணியும், அடுப்புக் கரித்துண்டும் கூடவே கொண்டு போவார்கள். மாமிசக் குழம்பில் ஆசைபடும் பேய் பிசாசுகள் பக்கத்தில் வராது என்று தோட்டத்தில் ஐதீகம் உண்டு...!

செல்லம்மா குடும்பம் கொஞ்சம் விபரம் தெரிந்த குடும்பம். புருசன்காரன் மருதை படிப்பறிவு உள்ளவன். அவன் நேரங் காலத்தோடே இலங்கைக்கே பிரஜா உரிமைக்கு விண்ணப்பம் செய்து விட்டவன். நாடு பிரிட்டிஷ்காரனிடமிருந்து, சுதந்திரம் அடைந்ததும், சிங்கள அரசியல்வாதிகளின் ஆட்சி அமைந்ததும், இந்தியத் தொழிலாளர்களின் குடியுரிமையைப் பறித்தது தான் முதல் அரசியல் நடவடிக்கையாக இருந்தது.. பிரிட்டிஷ்காரர் ஆட்சிக்காலத்திலேயே அவர்களிடம் இந்திய எதிர்ப்புவாதம் கொளுந்து விட்டு எரிந்துக் கொண்டிருந்தது. இந்தியத் தமிழரின் குடியுரிமையைப் பறித்த அரசியல்வாதிகள், மீண்டும் இலங்கை பிரஜையாவதற்கு விருப்பமானவர்கள் குறிப்பிட்டக் காலத்துக்குள் விண்ணப்பம் செய்யலாம் என்று சட்டமும் போட்டார்கள். தொழிலாளரின் தலைவர்கள் என்று சொல்லப்பட்டவர்கள், ஒழுங்காக... தெளிவாக.. வழி காட்ட வில்லை. "விண்ணப்பம் செய்ய வேண்டாம்.. போராடுவோம்.." என்றார்கள். நடு வழியில் கையை விரித்து விட்டார்கள்..! கடைசி நேரத்தில் "அப்ளிகேசன் போடுங்கோ..!" என்று அபயக் குரல் எழுப்பினார்கள்.

இலங்கையில் சிறிமா ஆட்சி வந்தது. இந்தியாவில் லால் பகதூர் சாஸ்திரி ஆட்சி வந்தது.. இரண்டு நாட்டுப் பிரதம மந்திரிகளும் இந்தியத் தமிழர்களை பங்கு வைக்கும் ஒரு பண்டமாற்று ஒப்பந்தத்தை போல் ஒப்பந்தம் எழுதி, மக்களை பங்கு வைத்துக் கொண்டனர். வழி தெரியாமலும்.. அனுபவித்த துயரத்தாலும்.. "பாட்டன் பூட்டன் பொறந்த தாய் நாட்டுக்கே போயி சேருவோம்.." என்ற ஆக்ரோஷத்தால், இந்தியக் குடியுரிமைக்கு மனு போட்டவர்களில் சுப்பிரமணியத்தின் தகப்பன் சிவசாமியும் ஒரு ஆளாகும்.. இந்தியாவுக்கு விண்ணப்பம் செய்துவிட்ட பிறகுதான் "மடையன் மாதிரி தவறு செஞ்சிப்புட்டேன் ராக்கம்மா..!" என்று மனைவியின் கைகளைப் பிடித்துக்கொண்டு பிள்ளைகளுக்குத் தெரியாமல் அழுதார்..

சுப்பிரமணி இந்தியாவுக்குப் போவதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொண்டே இருக்கிறான்.. முன் பின் அறியாத ஒரு ஊருக்கு "தாய் நாடு" என்ற பெயரை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே கேள்வி பட்டு.. அங்கே.. மூன்று குமரிப் பிள்ளைகளையும், ஒரு மகனையும், லயக்காம்பிரா, பிரட்டுக் களம், அம்மன் கோயில், தேயிலைக் காடு என்ற இந்த நான்கு இடங்களைத் தவிர வேறு எதுவுமே தெரியாத மனைவியையும், வயசாகி, நடை தளர்ந்து போன பெற்றோர்களையும் இழுத்துக் கொண்டு, இன்னொரு நாட்டில் போய் எப்படி புதிய வாழ்க்கையை ஆரம்பிப்பது..? அவனுக்கு முன் போய் சேர்ந்தவர் களெல்லாம் "இங்கே வராதே..! அந்த நாட்டிலேயே செத்துப் போனாலும் நல்லது..!" என்று அழுதழுது எழுதிய கடிதத்தின் மேல் கொட்டியக் கண்ணீரை, மை கசிவின் மூலம் சுக்குருவினால் அறிய முடிந்தது. அவன் தனது திக்குத் தெரியாத பயணத்தை நினைத்து மனம் கலங்கினான். எதற்கும் அஞ்சாத நெஞ்சம் படைத்தவனின் முறுக்கேறிய அவனது உடல் தளர்ந்து, மெலிந்து போய்க் கொண்டிருந்தது.

*

"தாயகம் திரும்புவோர்" (Repatriates) என்ற ஒரு புதிய அரசியல் நாமத்தோடு, இந்தியா சென்றவர்களின் ஓலங்கள் இந்து மகா சமுத்திரத்தின் பேரலைகளின் இரைச்சலை விட ஓங்காரமாக ஒலித்துக் கொண்டி ருந்தன. பலரது வாய்ப் பேச்சுதான் பர பரப்பை தோட்டங்களில் உண்டு பண்ணியது. "ஏன்டா ஈந்தியாவுக்கு எழுதினோம்..?" என்ற ஏக்க பெருமூச்சு.. நூறு விதமான மக்களின் நெஞ்சறைகளிலிருந்து வெளிக் கிழம்பிக் கொண்டிருந்தன..

சுப்பிரமணியின் தகப்பனாரின் சொந்தக் கிராமம்.. திருச்சி மாவட்டம், வாலி கண்ட புரம், முருக்கன்குடி என்று நன்றாகத் தெரிந்து வைத்திருந்தான். அவனது தகப்பன் சிவசாமி சம்பளம் போட்டதும்.. "தண்ணி" போட்டு விட்டு, இஸ்தோப்பிலிருக்கும் கோழி கொடாப்பில் ஏறி அமர்ந்துக் கொண்டு, அந்த காலத்து கூத்துப் பாடல்களைப் பாடுவார். சிறியவனான சுப்பிர மணியைக் கூப்பிட்டு "கொப்பியும், பென்சிலும் எடுத்துக்கிட்டு வா மவனே..!" என்று அன்பாகக் கூப்பிடு வார். சுப்பிரமணி அருகில் வந்ததும், "நான் செத்துப் போயிட்டா... சிலோன்ல யாரும் இருக்காதீங்க..! என் சித்தப்பன் மவன், பெரியப்பன் மவன் எல்லோரும் நஞ்சை, புஞ்சையோட, காணி, பூமியோட செறப்பா வாழுறாங்க.. அட்ரஸ்ஸ எழுதிக்கோ.. பத்திரமா ரேங்கு பெட்டியில வச்சுக்கோ..!" என்று அவர் அன்று கூறிய வார்த்தைகளை எண்ணிப் பார்த்தான்.

"நாலு, அஞ்சி பரம்பரைக்குப் பொறகு இனிமே... அந்த நாட்டுக்கு போயி, சித்தப்பன், பெரியப்பன் மகன்மார்கள கண்டு, கதைச்சி என்னா புரயோசனம்..?" சுப்பிரமணியின் தலை சுற்றியது. இந்தியப் பயணத்தின் மேல் வைத்த நம்பிக்கை அவனுக்கு குறையத் தொடங்கியது.

சிறிமா, சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் 1964 லிலிருந்து, இந்தியா திரும்பிய உறவினர்கள், நண்பர்கள் அடிக்கடி, கண்ணீரில் நனைந்த கடிதங்களையே அனுப்பிக் கொண்டிருந்தார்கள். "என் இரு கண்களிலும் கிடைக்கப் பெற்ற சுக்குருவுக்கு தங்கவேலு எழுதும் கடதாசி.. நாங்கள் இப்பவும் கடவுள் கிருபையால் ஷேமமாக இருக்கோம்.. தம்பி இந்தியாவுக்கு வர்ற ஆசைய வுட்டுப்புடு..! நாங்க ஏமாந்துட்டோம். குடும்ப கார்டு எல்லாம் பொய்யி. புனர் வாழ்வும் பொய்யி. இங்க இருக்கிறவனெல்லாம் மனுசங்களே கெடையாது..! திருட்டு, ஏமாத்து, பொய்தான் வாழ்க்க...! வாக்குவாதம் செஞ்சா.. வெட்டு, கொத்து, கொல.. எல்லாருமே கொடூரமானவங்க.!

இலங்கையில சிங்கள சனங்க எவ்வளவு தங்க மானவங்க... பண்பு, பாசம் உள்ளவங்கன்னு இந்தியா வந்தபொறகுதான் புரியுது... கையில... மடியில.. கொண்டு வந்த பணமெல்லாம் மண்டவம் கேம்போடு முடிஞ்சி போச்சி.. இப்போ இந்தியா கவுருமெண்டு குடுக்கிற ரேசன் சாமான்களை வாங்கித்தான் வயிறு கழுவுறோம். அது தர்மமோ, பிச்சையோ தெரியல்ல.. யாவாரக் கடன், விவசாயக் கடன், எல்லாம் வாங்கினா லும், எங்களால ஒன்னும் செய்ய முடியாது.. பெருமாளு, கோவிந்தசாமி, தங்கராசு மூனு பேரும் வட நாட்டுப் பக்கம் போயி காடு வெட்டி, கொஞ்ச காலம் இருந்து.. சொகமில்லாம செத்துப் போனாங்கன்னு.. பாப்பாத்தி காயிதம் போட்டிருந்திச்சு... அவங்கெல்லாம் என்னா கெதி என்று தெரியாது. நாங்க இன்னும் மண்டவம் கேம்புலதான் இருக்கோம்.

இந்தியாவுக்கு யாரும் வந்தா.. ஒரு மீன் டின், ஒரு சிகரட் பக்கெட்டு பத்து பீடிகட்டு, வாச சவுக்காரம் ஒன்னு வாங்கி அனுப்பு. எப்பவும் இலங்கை நெனப்பு தான். நாங்க தவறு செஞ்சிட்டோம். கேப்பார் பேச்ச கேட்டு.. இந்தியாவுக்கு எழுதியது விதியாப் போச்சி.. கடவுள் உங்களையெல்லாம் நல்லா வச்சிருப்பார். நீங்கள் இங்கே வரும் யோசனையை விட்டு விடுங்கள். வணக்கம்.. அன்புள்ள தங்கவேல் குடும்பத்தினர்." இந்தக் கடிதத்தோடு, தாயகம் திரும்பிய ஒரு இலங்கை வாலிபனின் வேதனை மிக்க கவிதை வரிகளையும் தங்கவேல் அனுப்பியிருந்தார்.

"இலங்கையாம் இந்த நாடு என்
இரு கரம் சமைத்த வீடு...
வாழவே வந்த நாடு என்
வளத்தினை தின்ற நாடு..."

சுப்பிரமணி கடிதத்தை வாசித்து, மனைவி, பிள்ளைகளுக்குத் தெரியாமல் உடுப்புப் பெட்டிக்கடி யில் ஒளித்து வைத்து விட்டான். அவன் மனம் இன்னும் தளர்ந்தது.

*

சிறிமா, சாஸ்திரி ஒப்பந்தத்தின் மூலம் "தாயகம் திரும்புவோர்" என்ற பெயர் இலங்கையிலும், அக்கரையில் "சிலோன் அகதி" என்றும்... சீர் கெட்ட புனர் வாழ்வு திட்டத்தில் தொழிலை அமைத்துக் கொள்ள முடியாமல் இடம் மாறியவர்கள்.. "விட்டோடி கள்" என்றும் பட்டப் பெயர் பெற்றார்கள். விவசாயக் கடன், வியாபாரக் கடன் வாங்கித் தருவதாக முன் நின்றவர்கள், பணத்தை வாங்கிக்கொண்டு மறைந்தார் கள். ஒவ்வொரு அசைவிலும் ஏமாற்று, களவு, கொள்ளை, கொடூரம், நிர்க்கதி என்ற நிலைமைகளை சுப்பிரமணி அறிந்தான்.

அவன் தைரியத்தை இழக்க வில்லை. "பாக்கியம்..! நாளைக்கு வேலைக்குப் போகாத..! வீட்டுல இரு.. புள்ளைக ஸ்கூலுக்குப் போனதும் நீயும் நானும் ஒக்காந்து இந்தியா பயணம் பத்தி பேசணும்..!" என்றான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே இந்தியாவுக்கு கொண்டுபோக சாமான் பெட்டி ஒன்று "அடித்து" வைத்து மேல் விலாசமும் எழுதி வைத்திருந்தான்... "சிவசாமி சுப்பிரமணியம் - மண்டபம் கேம்பு.."

*

மேகமலை தோட்டம், டயகாமம் காட்டுத் தொங்கலில் இருக்கின்றது. தலவாக் கொல்லையிலிருந்து டயகாமம் பஸ் பிடித்து.. சந்திரகாமம் போய், இன்னும் ஆறு, ஏழு கிலோ மீட்டர் தூரம் கருப்பந்தைலக் காட்டில் நடக்க வேண்டும். இந்தக் காலத்திலும் கோச்சி தெரியாத தொழிலாளர்கள் அங்கே இருக்கிறார்கள் என்றால் யார் ஏற்றுக்கொள்வார்கள்..?

பாக்கியம், சுப்பிரமணி சொல்வதற்கெல்லாம் மறுத்துப் பேசாமல், சம்மதம் தெரிவித்துக் கொண்டிருந் தாள். அந்தப் பேதைக்கு உலகம், வாழ்க்கை, உயிர், மரணம் எல்லாமே அவன்தான். "பெரிய பாப்பாவுக்கும், சின்ன உங்காளுக்கும், நண்டுக் குட்டிக்கும் மூனு பவுன்ல செயினு.. ரெண்டு பேருக்கும் தோடு.. தம்பிப் பயலுக்கு கால் பவுன்ல மோதரம்.. ஒனக்கும் ஒரு செயினு.. எனக்கும் ஒரு மோதரம்... அப்புறம் உடுப்பு, துணி மணி.. கொஞ்சம் சமையல் பாத்திரம் புதுசா வாங்கிக்கனும்.. எல்லாம் கெடைக்கப் போற கடைசி சீட்டுப் பணத்தில வாங்கிக்கலாம்.. சீட்டு எப்ப கெடைக்கும்..?" என்று கேட்டான் சுப்பிரமணி.

"இன்னும் கடைசி சீட்டுக்கு ரெண்டு மாசம் இருக்கு.. சீட்டு சல்லி ஐயாயிரத்துல சமாளிச்சுக்கலாம்." என்றாள் பாக்கியம்.

"அப்புறம் ஈப்பியெப் பணம்.. சர்வீஸ் பணம் கெடைச்சா... செலவுக் கட கடன், கை மாத்துக் கடன், தீவாளி அட்வான்ஸ் எல்லாம் குடுத்து மீதி காசு இருக்கும். பத்திரமா அந்தப் பணத்தோடதான் மண்ட பம் கேம்பு போயி, வேல வெட்டி கெடைக்கிற வரைக் கும், கை செலவுக்கு வச்சிக்கனும்...! யாருக்கும் பத்து சதங்கூட கடன் வைக்காம இந்த நாட்டவுட்டுப் போக னும்...!" என்று பெருமூச்சு விட்டான் சுப்பிரமணி.

*

இது வைகாசி மாதம்.. மழை ஆரம்பமாகும் காலம்.

தேயிலைக்கு "ஒரம் போடுற" காலமுமாகும்.

சுப்பிரமணி அவனது பாடசாலை நண்பனான சுந்தரத்துடன், ஞாபகத்துக்காக ஒரு புகைப் படம் பிடித்துக் கொள்ள ஆசை பட்டான். இருவரும் தோட்டத்துப் பாடசாலையில் ஐந்தாம் வகுப்பை முடித்துக் கொண்டு, நகரப் பாடசாலையில் ஓ.எல். வரை படித்து, ஒருவன் நான்கு பாடங்களும், மற்றவன் மூன்று பாடங்களும் சித்தியடைந்து, தேயிலைக் காட்டுக்கே தொழிலுக்கு வந்து விட்ட துரதிஷ்டசாலிகள்..!

"சுந்தரம்..! ஒரம் போட்டு முடிச்சதும் ரெண்டு பேரும் டவுனுக்கு போயி ஒரு போட்டோ புடிச்சுக்குவோம். இனிமே எந்தக் காலம் நீயும் நானும் இப்படி இருக்கப் போறோம்..?" என்று சுப்பிரமணி சொன்னான். அவனது கைகளை இறுகப் பிடித்துக் கொண்ட சுந்தரம்.. "டேய்.. நீ போனப் பொறகு ஒன்னைய பாக்குறதுக்கு கட்டாயம் வருவேன். கவலப் படாத...! போட்டோ செலவு நாந்தான் குடுப்பேன்.." என்றான். இருவரும் உர மூட்டைகளைப் பிரித்து, தேயிலை நிறைக்குள் இறங்கினார்கள்.. பகல் 11 மணிக்கெல்லாம் 7 ம் நம்பர் மலையில் உரம் போடும் வேலை முடிந்தது.

தேயிலைச் செடிகளுக்கு சீமை உரம் (செயற்கை உரம்) போடும் வேலையின்போது தொழிலாளர்கள் உடல் முழுக்க சாம்பல் பூசியது போல், முகத்தில் அரிதாரம் பூசிய கோமாளிகள் போலவும் இருப்பார்கள். சீமை உரம் தாவரங்களுக்கான ஊட்டச்சத்து நிறைந்த ரசாயன கலவையாகும். இவை கண், மூக்கு, சுவாசத்துக்கு ஊறு விளைவிக்கும். உரம் போடும் வேலை முடிந்ததும் தொழிலாளர்கள், குளிக்காமல் வீடு செல்ல மாட்டார் கள். உரம் போடுவதற்கு பாதுகாப்பு உடைகள் உண்டு. ஆனால் நிர்வாகம் கொடுக்க மாட்டாது. அவர்களும் கேட்கமாட்டார்கள்.

வேலை முடிய காட்டுப் பீலியில் குளிப்பதற்கு இருவரும் தோட்டத்து ஆப்பீஸ் ரோட்டு வழியாக இறங்கினார்கள். தோட்டத்து சுடு காட்டில் கொய்யா மரம், பீக்ஸ் மரம், மா மரம் எல்லாம் புதை குழிகளில் வளர்ந்திருக்கும். சிலருடைய கல்லறைகளில் இந்திய கிராமங்களின் ஊர், பேர் எழுதப்பட்டிருக்கும். சுடு காட்டுக் காய்களைத் தின்றால் தலை வழி வராது என்ற ஒரு ஐதீகம் தோட்டங்களில் இருந்தது. சுப்பிரமணி என்றுமே இல்லாத சந்தோசத்தில், இன்று சுடு காட்டு கொய்யா மரத்தில் ஏறி "வரட்டு" காய்கள் இரண்டு பறித்துக் கொண்டு இறங்கினான்.

சுப்பிரமணிக்கு டவுன் பக்கம் போவதற்கு கொஞ்சம் அச்சம் மனதில் உறுத்திக் கொண்டே யிருந்தது.... அசோக சக்கரம் பொறித்த இந்திய சிவப்பு பாஸ்போட் வாங்கி.. சென்ற மாதத்தோடு நான்கு வருசங்கள் முடிந்து... இலங்கையில் வசிக்கும் விசா காலம் முடிவடைந்திருந்தது...

தோட்டங்கள் தோறும் பொலிஸ் வண்டி நடமாடியது... இந்திய குடியுரிமைக்கு விண்ணப்பம் செய்தவர்களுக்கு பாஸ் போட் வழங்கப்பட்டது. இந்த மண்ணில் பிறந்தவனுக்கு, இன்னொரு நாட்டு விசா குத்தப்பட்டு இங்கே வசிக்க வேண்டிய கால வரையறை வழங்கப்பட்டது. இந்தியாவுக்குப் பயணமாகும் கால வரையரை முடிந்தவர்களின் குடும்பத் தலைவனைப் பிடித்து பலவந்தமாக வண்டியில் ஏற்றி, கொழும்பு கொம்பனித் தெரு சிறைச்சாலையில் அடைத்து வைத்துக் கொண்டு, சம்பந்தப்பட்ட தொழிலாளியின் குடும்ப உறவினர்களுக்கு தோட்ட நிர்வாகம் கொடுக்க வேண்டிய கொடுப்பனவுகளை துரிதப் படுத்துவார்கள். இந்த நடவடிக்கைகளுக்கு குடியேற்ற, வெளியேற்றத் திணைக்களமும், பொலிஸ் திணைக்களமும் இணைந்து செயல்படும்.

இன்று காலை எட்டு மணிக்கெல்லாம் மேக மலை தோட்ட காரியாலயத்துக்கு பொலிஸ்காரர்கள் ஐந்து பேர் வந்து காத்திருந்தார்கள். பொலிஸ் வண்டி தோட்டத்துக்கு வெளியே, அரை கிலோ மீட்டர் தொலைவில் மறைந்திருந்தது.

குளிப்பதற்கு போய்க் கொண்டிருந்த இருவரில், சுப்பிரமணியத்தை ஆப்பீஸிலிருந்தபடி பெரிய கிளாக்கர் அடையாளம் காட்டினார். சிவில் உடையில் வந்திருந்த இரண்டு பொலிஸ்காரர்கள் ஓடிப் போய் சுப்பிர மணியைப் பிடித்துக் கொண்டார்கள். திருடனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்ததுபோல் இழுத்துக் கொண்டு பொலிஸ் வண்டியில் ஏற்றிக்கொண்டு பறந்தார்கள்..! சுக்குரு தேயிலைக்கு உரம் போட்டவன். அந்த உரம் படிந்த கோலத்தோடு பொலிஸ் வண்டியில் ஏற்றப்பட்டான்..!

"சேர்..! சேர்..! நான் எங்க வேணுமுன்னாலும் வர்றேன்.. இப்போ வூட்டுக்குப் போகனும்.. குடும்பத்த சந்திக்கனும்.. மொதல்லாவது நான் குளிக்கனும்..!"

"கட்ட வஹப்பன் ஒய்..! இந்தியாவே கிஹின் நாப்பான்.."

"வாய் மூடு ஒய்..! இந்தியாவுல போய் குளி..!" என்றான் ஒரு பொலிஸ்காரன். சுக்குருவுக்கு சிங்களம் நன்றாகப் பேச முடியும்.. அவனும் சிங்களத்தில் பதில் சொன்னான்..

"தமுசே மனுச ஜாத்தித..? தமுசெட்ட மனுஸ்ஸகம் தியெனவாத..?

"அடோ உம்பட்ட சிங்ஹள கத்தா கரண்ட புளுவன்த..! உம்ப அப்பிட்ட தமுசே கியனவானேத... தெமளா..!"

உரையாடல் காரசாரமாகியது.. மூன்று போலீஸ்காரன்கள் ஓடுகின்ற ஜீப்புக்குள் சுக்குருவை கொடூரமாகத் தாக்கினார்கள்.. வாயில் வடிந்த இரத்தத் தைத் துடைத்துக்கொண்ட சுக்குரு, ஒரு போலீஸ் காரனின் குரல்வளையையாவது கடித்துக் குதறுவோமா என்று திமிறியவன், திடீரென குடும்பத்தை நினைத்து மௌனமாகினான்... ஜீப் வண்டி போலீஸ் ஸ்டேசனை நோக்கி ஓடியது.

சுந்தரம் பதை பதைத்தவனாய் பாக்கியத்திடம் தகவலைச் சொல்வதற்கு ஓடினான்.

தோட்டத்து கிளாக்கர் பொலிஸ் அதிகாரியின் கட்டளைப்படி சுப்பிரமணி, அவன் மனைவி பாக்கியத் தின் கொடுப்பனவுகளை அவசர அவசரமாகத் தயார் செய்து கொண்டிருந்தார். இன உணர்வு, சமூக உணர்வு, அரசியலில் பொது அறிவு எதுவுமே அற்ற ஜடமாகவே தோட்டத்து உத்தியோகத்தர்கள் நிர்வாகத்தின் விசுவாசி களாக மட்டுமே இருப்பார்கள்.

பாக்கியத்துக்கும். சுப்பிரமணியத்துக்கும் தோட்ட நிர்வாகம் சேமித்து வைத்திருந்த ஊழியர் சேமலாப நிதியுடன் ஏனைய லீவ் போனஸ், சேவைக் காலப் பணம் என்று இருவருக்கும் மொத்தமாக முப்பதாயிரம் கணக்கு எழுதி, அதில் தோட்டத்துக் கடன் பணத்தையும் கழித்துக் கொண்டு, இருபத்தையாயிரம் ரூபாவை பாக்கியத்தின் கையில் கொடுத்தான் தோட்ட நிர்வாகி. பாக்கியம்.. கொடுத்த பணத்தைக் கணக்கு பார்ப்பதற்கோ, அதை வாங்கிக்கொள்ளும் நிலையிலோ இல்லை... கட்டியத் துணியோடு நாட்டை விட்டுப் போனாலும் பரவாயில்லை.. கணவனுக்கு ஆபத்து நடந்து விடக் கூடாதென்று மழை மழையாய் கண்ணீரைப் பொழிந்தாள்.

நண்பனின் மனைவி பாக்கியத்துக்கு, சுந்தரம் பயண ஏற்பாடுகளைச் செய்ய உதவினான்.

சுக்குருவின் குடும்பத்தினருக்கு தோட்டத்து உறவினர்கள், நண்பர்கள் வேட்டி, சேலை, பிள்ளை களுக்கு உடுப்பு துணிமணிகள் எடுத்துக் கொடுத்தார்கள். வசதியற்றவர்கள் 2 ரூபாய், 1 ரூபாய், என்று தங்களால் முடிந்ததை கொடுத்தார்கள். அநேகமானோர் கோழி அடித்து, விருந்து கொடுத்தார்கள். செல்லம்மாக்கா.. சுக்குரு குடும்பத்துக்கு உடுப்பு, துணிகளோடு.. அவனது கடைசி மகளுக்கு தான் அணிந்திருந்த ஒரு பவுன் தங்கச் சங்கிலியை கழற்றிக் கொடுத்தாள். பிள்ளைகள் எவ்வளவோ மறுத்தும், செல்லம்மா திரும்பி வாங்கிக் கொள்ளாமல் கோபப்பட்டாள். இந்தியா பயணம் ஆரம்பமாகிய நாள் முதல் தோட்டத்து லொறியில் ஏறும் வரை சுக்குரு வீட்டில் அடுப்பு எரிக்க எவருமே விட வில்லை..! பாக்கியம் தனது உடைமைகளான ஆட்டுக் கல், திருகைக் கல், உரல், உலக்கை, கோழிகள், கோழிக் கொடாப்பு என்று எல்லாவற்றையும் தங்களோடு நெருக்கமாக இருந்தவர்களுக்கு அன்பு பரிசாகக் கொடுத் தாள். அந்த பரிசில் மனித பாசமும், ஆத்மாவும் நிறைந்திருந்தன..

*

சுந்தரம் பாக்கியத்தை கூட்டிக் கொண்டு அக்கரபத்தனை, மாவட்ட யூனியன் காரியாலயத்துக்குச் சென்றான். 20, 30 வருசங்களாக சந்தா கட்டி... எதிர் கட்சிகாரர்களிடம் வெட்டு குத்துப்பட்டு, யூனியனை வளர்த்து.. அந்த தோட்டத்தில் முதல் கொடி கம்பம் நாட்டியவன் சுக்குரு.. சங்கத்துக்கு மாதா மாதம் 70ம் ஆண்டுகளிலேயே ஆயிரம்.. இரண்டாயிரம் என்று யூனியன் சந்தா சேகரித்து அனுப்பியவன்.. இன்று இந்தியாவுக்கு இவ்வளவு கேவலமாக... கடைசி காலத்தில் பலவந்தமாக, கைதியாகப் பிடிக்கப்பட்டு, அனுப்பி வைக்கப்படுகிறான்... இந்த அநியாயத்துக்கு நடவடிக்கை எடுக்காத யூனியன், இந்த குடும்பத்துக்கு சிறு தொகை பண உதவியாவது செய்யுமா என்று யூனியன் தலைவரிடம் எதிர்பார்த்தான் சுந்தரம்.

"இதெல்லாம் புது வழம சுந்தரம்..! அஞ்சு லட்சம் பேரு இந்தியாவுக்கு போகப் போறாய்ங்க.. அவ்வளவு பேருக்கும் யூனியன் பிரியாவிட சந்தோசம் குடுக்க முடியுமா..? நல்ல கதையா இருக்குது ஒங்கத..!" என்று பெரிய தலைவர் சொன்னார். பிரதிநிதியும் தலைவர் பேச்சி நூத்துக்கு நூறு சரி என்று தலையை ஆட்டினார்.

"இருங்கடீ..! தேர்தல் வரட்டும் செய்யிறேன் வேல..! அப்ப வருவீங்கடீ...! எங்க வூட்ல நாயி செத்தாலும் வருவீங்க.. கோழி செத்தாலும் வருவீங்க..!" என்று மேசையில் இருந்த டெலிபோனை தூக்கி நிலத்தில் அடித்து, யூனியன் கதவை ஓங்கி சாத்திவிட்டு.. பாக்கியத்தை கூட்டிக் கொண்டு தோட்டத்துக்குத் திரும்பினான் சுந்தரம்...

பெரிய தலைவர் பிரதிநிதியிடம் குசு குசுத்தார். "வரப் போற தேர்தல்ல இந்த நாய்ப்பயல் தோட்டத்த கொழப்பிப் போடுவான்...! இருவது ரூவா காசு தாறேன்.. குடுத்து தொலைச்சிட்டு வா..!" என்றார். பிரதிநிதி காசை வாங்கிக்கொண்டு ஊட்டுவள்ளி தோட்டத்து பாலம்வரை சென்று "காசை குடுத் திட்டேன். சந்தோசமா வாங்கிக்கிட்டான் சுந்தரம்.." என்று தலைவருக்கே டிமிக்கி கொடுத்தான். "தலைவன் அண்டப் புழுகன் என்றால், பிரதிநிதி ஆகாசப் புழுகன்..!" என்று தொழிலாளர்கள் சொல்வதில் எவ்வளவு உண்மை இருக்கிறது..!

கடைசியோ கடைசி என்று பார்வதியும் சுந்தரமும் தோட்டத்து ஆப்பிசுக்கு சென்று இரண்டு கிலோ உயர்ந்த ரகத் தேயிலை கேட்டார்கள். தோட்ட நிர்வாகியும், பெரிய கிளாக்கரும் கொடுக்க மறுத்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பணத்தைக் கொடுத்தாலும் "பி.ஓ.பி." தர முடியாது.. "டஸ்ட் நம்பர் வன்" தான் தரலாம்... என்று தொர சொல்லுறாரு சுந்தரம்..!" என்று பெரிய கிளாக்கர் மூக்குக் கண்ணாடியை உயர்த்தி சொன்னார். காலம் முழுவதும் சமூகத் துரோகிகளாகவே தோட்ட உத்தியோகத்தர்கள் செயல் படுகின்றார்கள்..!

"இருங்கடா வேச மகன்களா.. ஒங்களுக்கெல்லாம் நல்ல வேல செய்றோம்..!" என்று சுந்தரம் மனதில் கருவிக்கொண்டு தேயிலைத் தூளை வாங்கினான்...

பாக்கியத்துக்கு தோட்டத்து ஜனங்கள் விபூதி வைத்து, பிள்ளைகளை ஆசீர்வதித்து, கட்டிப்பிடித்து அழுது, புலம்பினார்கள். பிள்ளைக் காம்பரா சந்தியில் தோட்டத்து லொறி வந்து நின்றது.. பாக்கியம் குடும்பத்தை வழியனுப்புவதற்காக அந்த தோட்டத்தில் எவரும் வேலைக்கு போக வில்லை. இளம் வயதில் அந்த தோட்டத்தில் பேரழகியாக இருந்த சரஸ்வதி பாட்டி மங்களான கண் பார்வையுடன் கூன் விழுந்த முதுகோடு பாக்கியத்தின் வீட்டுக்கு வந்து கொண்டிருந்தாள்.. அவள் இன்று யாருமற்ற அனாதையாக ஒரு அரைக் காம்பிரா வில் தங்கியிருக்கிறாள்.. தன் சேலை முடிச்சியிலிருந்த சில்லறைகளை எடுத்து "இந்தாடி கண்ணு..! நாலு பணம்... புள்ளைகளுக்கு முட்டாயி வாங்கிக் குடு.." என்று பாக்கியத்தைக் கட்டிப்பிடித்துக்கொண்டு அழுதாள்.

பாக்கியம் சரஸ்வதி பாட்டியை வீட்டுக்குள் அழைத்துச் சென்று, தனக்கு கிடைத்த பரிசுகளில் சேலை ஒன்றையும் பாவாடை ஒன்றையும் உடுத்திவிட்டு, இன்னொரு சேலையையும் கொடுத்தாள். "எனக்கு கோடி சேலை குடுத்திட்டியா சாமி.." என்று ஒப்பாரி வைத்து அழுத சரஸ்வதி பாட்டியை அணைத்தபடி வெளியே கூட்டி வந்தாள் பாக்கியம். பிள்ளைக் காம்பரா சந்தியில் தோட்டத்து சனங்கள் குழுமியிருந்தார்கள். சுக்குருவின் சின்ன மகன் தனது பாட்டனின் பாரம்பரிய சொத்தான ரேங்கு பெட்டியைத் தலையில் சுமந்து கொண்டு சென்றான். சொந்தக்காரர்கள், நெருங்கிப் பழகியவர்கள் யாவரும் ரெயில்வே ஸ்டேஷன் வரை வந்தார்கள். மண்டபம் கேம்ப் வரையிலான பிரயாண டிக்கட்டுகளை யும், ரயில் நிலையம் வரை வாகன வசதியையும் தோட்ட நிர்வாகம் பொறுப்பேற்றிருந்தது. இந்தச் சலுகைகள் சிறிமா சாஸ்திரி ஒப்பந்தத்தில் உள்ளன...

றயில்வே நிலையத்தில் பாக்கியம் குடும்பத்தைப் போல பல தோட்டத் தொழிலாளர்கள் வந்து நிறைந்திருந்தார்கள்.

தலைமன்னார் கோச்சி பதுளையில் காலை 6 மணிக்கு புறப்படும். இந்தக் கோச்சியை "ஒப்பாரி கோச்சி" என்று பட்டப் பெயர் சூட்டியிருந்தார்கள்...! தலை மன்னார் கோச்சி, தலவாக்கொல்லை ஸ்டேஷனுக்கு வந்ததும், எல்லோரும் குய்யோ.. முறையோ... என்று ஓலமிட்டுக் கதறினார்கள். மரண வீட்டு ஒப்பாரி வைத்து அழுதார்கள். கோச்சி வண்டிக்குள் ஏறியவர்கள், கரங்களை நீட்டி கீழே நிற்பவர்களைப் பிடித்துக் கொண்டு அலறும் அந்த துயரக் காட்சி உயிரையும், ஆத்மாவையும் பிடுங்கியது... ஒப்பாரி சத்தத்தோடு கோச்சி புறப்பட்டது. கோச்சி ஓடத் தொடங்கியதும், பல இளைஞர்கள், தங்கள் உறவுகளைப் பிரிய முடியாமல், கைகளை அசைத்துக்கொண்டு, சிறிது தூரம் கோச்சியின் அருகிலேயே ஓடினார்கள்.. சட்டத்தின் முன்னால் மனிதத் தவிப்புகள் எப்படி எப்படியெல்லாம் சித்திரவதை செய்யப்படுகின்றன.. என்பதை அந்த காட்சி கண் முன்னே காட்டியது..

அந்த ரயில் வண்டியை "ஒப்பாரி கோச்சி" என்று பெயர் வைத்துக் கொண்டார்களே தவிர அது... "சாஸ்திரி கோச்சி..." "சிறிமா கோச்சி..." என்று சொல்லும் அளவுக்கு, கடைசிவரை அவர்களுக்கு அரசியல் தெரியாமலேயே போய் விட்டது....

*

- தலைமன்னார் இறங்குதுறை.

தேயிலைக்கு உரம் போட்ட நிலையில், கை கால் கூட கழுவாமல், வியர்த்த, பசளை பற்றிய உடலோடு, மனிதாபிமானமின்றி இழுத்து வரப்பட்டு , உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் கை கால் கழுவிக் கொண்டு, வேலைக்காட்டு உடையோடு, கொழும்பு, கொம்பனித் தெரு, சிறையில் இருந்த சுப்பிரமணி, சுந்தரம் கொண்டு வந்து கொடுத்த மாற்றுடையை உடுத்தியிருந்தான்.

சுப்பிரமணியை கப்பல் ஏற்றுவதற்கு பொலிஸ் அதிகாரிகள் தலை மன்னார் இறங்கு துறைக்கு அழைத்து வந்திருந்தனர்.

மனைவி பாக்கியம், மகள்மார் மூவரும், மகனும், சுப்பிரமணியின் பெற்றோர்களும் திகிலடைந்த நிலையில் தலை மன்னாருக்கு வந்திருந்தனர். குடும்பத்திடம் சுப்பிரமணியை ஒப்படைத்து விட்டு, அடுத்த வேட்டைக்கு பொலிஸ் அதிகாரிகள் கொழும்புக்குத் திரும்பினார்கள்.

நாட்டைச் சுரண்டும் வியாபாரிகளும், ஏனைய தீயச் சக்திகளும் இந்த நாட்டில் கௌரவ பிரஜாவுரிமை பெற்றுக் கொண்டு, நிலைத்து வாழுகின்ற போது.. காட்டை அழித்து.. நாட்டை உருவாக்கிய பாட்டாளிக் கூட்டம் நாடு கடத்தப் படுகின்றது.. சட்டம் ஒரு சிலந்திக் கூடு.. அதில் வலிமைப் பெற்ற வண்டுகள் துளைத்துக் கொண்டு பறந்தோடுகின்றன... எளியப் பூச்சிகளே சிக்கிக் கொள்கின்றன...

சுந்தரமும் சுக்குருவும் கட்டிப்பிடித்துக்கொண்டு குமுறிக் குமுறி அழுதார்கள். தலை மன்னார் இறங்குதுறையில் எங்கு பார்த்தாலும் ஒரே ஓலங்கள்.. ஒப்பாரி சத்தங்கள் துயரச் சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருந்தது... அதிகாரிகளின் அதட்டலும்.. வழி நடத்தலும் ஆரம்பமாகின...

வாழ்க்கையைத் தேடி இந்த நாட்டுக்கு வந்த மக்கள்.. இருநூறு வருசங்களை வீணடித்து.. மீண்டும் வாழ்க்கையைத் தேடிக்கொண்டு... கப்பலை நோக்கி.. கடல் பாலத்தின் மேல் நடந்தார்கள்.

அவர்களது மூதாதையர்கள் இதே திசையில், இதே கடல் பாதையில் தோணிகளிலும், வள்ளங்களிலும் வந்த வரலாறு... அந்த வழிப் பயணத்தில் பலரை கடல் விழுங்கிய கதைகள்... தப்பிக் கரையேறிய வம்சத்தினரின் இன்றைய எச்சங்களாகிய இவர்கள், வாழ்க்கையைத் தொலைத்துவிட்டு.. இன்று "அரச மரியாதையுடன்" கப்பலேறி, மீண்டும் அக்கரைக்கு திரும்பிப் போகும் கசந்த வரலாறு காவியமாகிக்கொண்டிருந்தது...!

ராமானுஜம் கப்பல் ஊளையிட்டுக்கொண்டு அசைவதை சிலையாக நின்று பார்த்துக்கொண்டிருந்தான் சுந்தரம்...

(யாவும் நடந்தவை)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தமிழகத்தில் 28500 மலையக அகதிகள்
16.10.2008
Hon. Members of Parliament

அவசர வேண்டுகோள்.

தமிழகத்தில் வாழும் மலையக அகதிகளுக்கு இலங்கை குடியுரிமை வழங்கும் சட்டமூலமும் சம்பந்தப்பட்ட மக்களின் விருப்பமறிதலும்..

Bill on granting Sri Lankan citizenship to Indian origin Tamil refugees in Tamil Nadu refugee camps..

இலங்கை நாடாளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணியினர் முன் வைக்கும், தமிழகத்தில் தங்கியுள்ள 28,500 அகதிகளுக்கு குடியுரிமை வழங்கும் பிரேரணையின் சட்டமூலம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இந்த பிரேரணையின் சட்ட மூலம் நல்ல நோக்கத்தின் பெயரில் ஏகோபித்து ஏற்றுக் கொள்ளப்படலாம்.. அல்லது வாத பிரதி வாதங்களுக்குள்ளாகலாம்.

இன்று, வட கிழக்கு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தமிழ்நாட்டு அகதி முகாம்களில் கடந்த 30 ஆண்டுகளாக இந்திய அரசின் உதவியுடன் வாழ்ந்து வருவது பலரும் அறிந்த விடயமாகும். இலங்கை அகதிகள் தமிழ் நாடு முழுவதும் பரவலாக அமைந்துள்ள அகதி முகாம்களில் சிதறி வாழ்ந்து வருகின்றனர்.. அகதிகளாகச் சென்றவர்களில் பலர் தமிழகத்திலிருந்தே வெளி நாடுகளுக்கும் சென்றுள்ளனர்.. பலர் சுமுக நிலை ஏற்பட்டதும் இலங்கை திரும்புவதென்ற மன நிலையில் வாழ்ந்து வருகின்றனர்..

இவர்களில் இன்று 28 ஆயிரத்துக்கும் மேற்பட்டவஉகள் இந்திய வம்சாவளி தமிழர்களாக அங்குள்ள 118 முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். 1977 களில் ஏற்பட்ட ஜுலை இனக் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்கள் வவுனியா, கிளிநொச்சி, முல்லைத் தீவு போன்ற மாவட்டங்களில் குடியேறி வாழ்ந்தனர். இம் மக்கள் யுத்தத்தின் தாக்கத்தினால் நிர்க்கதியாகி தமிழகம் சென்றவர்களாவர்.. 30 வருடங்கள் வாழ்ந்து முடிந்த கால எல்லைக்குள் ஒரு புதிய பரம்பரை உண்டாகியுள்ளதையும் நாம் அறிதல் வேண்டும்.

எனது அவதானிப்பின்படி அங்கு வாழும் இளைய சந்ததியினருக்கு, தாங்கள் இலங்கையைச் சார்ந்தவர்கள் என்றோ, இலங்கை யுத்த அகதி என்றோ, சரித்திரப் பின்னணி எதுவும் தெரியாது. தங்களை இந்தியர்களாகவே நினைத்து வாழ்ந்து வருகின்றனர்.

மனிதர் வாழ்வில் 30 ஆண்டுகள் என்பது ஒரு அறை நூற்றாண்டில் காலடி வைக்கின்ற காலமாகும். இங்கு பெற்றோர்கள் நிர்க்கதி நிலையோடு வந்து விட்ட பின்னர் ஏற்பட்ட இயற்கைப் பெருக்கமும், குழந்தைகளோடு வந்தவர்களின் வளர்ச்சியும் ஒன்று சேர்ந்து புதிய பரம்பரையினரின் தோற்றமும் ஏற்பட்டுள்ளது.. அகதி முகாம்களில் வாழ்கின்ற இளைய பரம்பரையினர் வளர்ந்து, கணிசமான அளவு உயர் கல்வி பட்டம் பெற்றவர்களாகவும் (M.A. M.Sc.) பலர் டாக்டர்களாகவும்:. (M.B.B.S) உருவாகியுள்ள சமூக மாற்றங்களையும் காணக் கூடியதாக இருக்கின்றது.

அதிகமானோர் தனியார் வர்த்தக நிலையங்களில், தொழிற்சாலைகளில் நிலையான உத்தியோகங்கள் செய்து வருகின்றனர். தொழிலாளர் நிலையிலுள்ளவர்கள் சென்னையைச் சார்ந்த திரிசூலம், சென். அந்தனிஸ் மலை பிரதேசங்களில் கல் உடைப்பவர்களாகவும், பெரிய நகரங்களில் பழைய கட்டிடங்களை உடைப்பதிலும், ஈயத் தொழிற்சாலைகளில் ஈய உருண்டைகள் உருட்டும் தொழில்களையும் செய்து வருகின்றனர்.. இவர்களுக்கு இலங்கைக்கு திரும்ப வேண்டிய நினைப்போ, பாரம்பரிய நிலம், வீடு, சொத்துக்களைக் கொண்ட வட கிழக்குத் தமிழர்களைப் போன்று இலங்கை திரும்ப வேண்டும் என்ற நிஉப்பந்தமோ, லட்சியமோ கிடையாது.. இந்த புதிய பரம்பரையினரின் பெற்றோர்கள் வட கிழக்கில் குடியேறி, வீடு, நிலம், விவசாயக் காணி என்று சொத்துடமைக் கொண்டவர்களல்ல.

இவர்கள் 30 ஆண்டுகள் தமிழகத்தில் வேரூன்றி விட்டவஉகள். தொழிலிலும், வாழ்க்கையிலும் நிரந்தர நிலையை உருவாக்கிக் கொண்டு, தமிழக வாழ்க்கை முறைக்கு தங்களை மாற்றியமைத்துக் கொண்டவர்கள். இவர்களின் விருப்பு வெறுப்புக்களை தனித் தனி குடும்ப உறுப்பினர்களாக சந்தித்து, அல்லது, ஒருமித்து அவர்களை அழைத்து, அவர்களின் மன நிலையை அறிந்த பின்னரே, அவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமை பெற்றுக் கொடுக்கும் நல்ல காரியம் ஒரு தீர்க்க தரிசனமான வேலைத் திட்டமாக அமையலாம். அதுவன்றி, இவஉகள் நாடற்றவர்கள், இவர்களுக்கு ஏதோ ஒரு நாட்டைச் சேர்ந்த தேசிய அந்தஸ்தை பெற்றுக் கொடுத்துவிட வேண்டும் என்ற முடிவு சிக்கலை ஏற்படுத்தலாம். இந்த நோக்கம் 1964 ல் சிறிமாவும், சாஸ்திரியும் செய்து கொண்ட பிழையான வரலாற்றுத் திருப்பத்தைப் போல் அமைந்து விடக் கூடாது..! அன்று சிறிமா - சாஸ்திரி, சிறிமா - இந்திரா ஆகிய இலங்கை, இந்திய பிரதமர்கள் தன்னிச்சையாகச் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் மூலம் பல விபரீதங்கள் நடந்தன. ஒப்பந்தத்துக்குள் பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவளி மக்களின் சமூகப் பிரதிநிதிகளிடம் இவ்விரு நாட்டுத் தலைவர்களும் கலந்தாலோசிக்கவில்லை. இந்த ஒப்பந்தமும், இந்த ஒப்பந்தத்தால் ஏற்பட்ட சட்டமும் மக்களின் மனித உரிமை பிரச்சினையாக அல்லாமல், ஒரு அரச நிர்வாக வேலையாகவே ஆகிப் போனதை நாம் அறிய வேண்டும்.

மலையகத் தமிழரின் அரசியல் வாழ்க்கையில் ஏற்பட்ட திருப்பங்களான 1948 ல் நடந்த குடியுரிமை பறிப்பு சட்டத்தின் போதும், மலையகத் தலைமைகள் வாளாவிருந்தன. 1964 ல் இலங்கை - இந்திய மக்கள் பங்கு பிரிப்பு ஒப்பந்தத்தின் போதும் வாளாவிருந்தன. இன்று வரை மலையகத் தமிழர்கள் இந்திய - பாகிஸ்தானிய 1949 ம் ஆண்டு 3 ம் இலக்க குடியிருப்பாளர் சட்டத்தின் கீழ்

(The Indian and Pakistani Residents(Citizenship) Act No.3 of 1949) சர்டிபிக்கேட் வைத்துக் கொண்டு குடிகளாக இன்றி(Citizen)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

குடியிருப்பாளராக (வநயெவெ) ஆப்பிரிக்கர் (Mode of African Pass) "பாஸ்" முறை வைத்திருந்ததைப் போல அரசியல் பேதமையில் வாழ்ந்து வரும் நிச்சயமற்ற தேசியத்தை நாம் கொண்டுள்ளோம்..

ஆகவே, இந்திய அகதி முகாம்களில் வாழும் மக்களிடம் அவர்கள் இந்திய குடிகளாக விரும்புகின்றார்களா..? இலங்கைக் குடிகளாக விரும்புகின்றார்களா..? என்பதை அறிந்து கொள்வதற்கு ஒரு ஆய்வு கணிப்பீட்டை (Study survey) ஏற்படுத்திக் கொள்வதே முதல் அடிப்படை முயற்சியாகும்.. இன்றைய மலையக பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த அகதி மக்களைச் சந்தித்து, அவர்களின் நிலைப்பாட்டை அறிந்து, டெல்லி அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தினால், அந்த அரசு செவி மடுக்கலாம். 120 கோடி குடிசனத் தொகையை அடையவிருக்கும் இந்தியாவுக்கு, 28500 மக்களை ஏற்றுக் கொள்வது ஒரு பொருட்டாக இருக்காது..

இந்தச் சமயத்தில் ஏற்கனவே நாடற்றவர்களாக மிஞ்சியிருந்த மலையகத் தமிழருக்கு, மக்கள் விடுதலை முன்னணியினர் முழு ஆதரவைக் காட்டி, குடியுரிமைப் பெறுவதற்கு துணை நின்றதை வரலாறு மறுக்காது.. மறக்காது.. அது போலவே அவர்களது இன்றைய முயற்சியும், பிரேரணையும் வரவேற்க வேண்டிய இச் சமயத்தில், இந்த மக்களுக்கு இலங்கை பிரஜா உரிமை வழங்கி, இலங்கைக்கு அழைக்கும் பட்சத்தில், இவர்கள் இலங்கை அரசினால் மீண்டும் ஒரு புனர்வாழ்வு திட்டத்தின் மூலம் இலங்கையில் குடியேற்றப்படுவார்களா..? தொழில் செய்த பலருக்கு பர்மா அகதிகளைப் போல, அதே தொழில் வாய்ப்பு பிரத்தியேகமாக செய்து கொடுக்கப்படுமா..? அல்லது ஏற்கனவே இவர்கள் வட கிழக்கில் குடியேறி வாழ்ந்த இடங்களில் இன்றைய யுத்த சூழலில் நிலம் பகிர்ந்தளிக்கப்பட்டு குடியேற முடியுமா..? அல்லது, இவர்களின் பாரம்பரிய தொழிலான பெருந்தோட்டத் தொழிலுக்குள்ளேயே மீண்டும் தள்ளப்படுவார்களா..? என்பவைகளைப் பற்றி நாம் யோசிக்க வேண்டும்..

சம்பந்தப்பட்ட மக்களின் விருப்பங்களையும், நிலைப்பாட்டையும் அறிந்துக் கொள்ளாமல் ஒரு நாட்டின் பிரஜையாக்கிவிடுவது 1964 ம் ஆண்டு நடந்துவிட்ட வரலாற்றுத் தவறை மீண்டும் செய்வதாக அமையும். மற்றும் ஒரு மனித உரிமை மீறல் செயலாகவும் அமையும்..

ஆகவே மக்கள் விடுதலை முன்னணியினர் கொண்டு வந்துள்ள பிரேரணையின் சட்டமூலத்தை அமுலாக்கும் நிலை ஏற்படுமாயின், அதை தற்காலிகமாக நிறுத்திவைத்து, சம்பந்தப்பட்ட அகதி மக்களின் விருப்பங்களை அறிந்த பின்னர், நமது அரசு செயல்பட வேண்டும் என்று, தங்களின் பாராளுமன்ற விவாதத்தின் போது உரையாடுவதற்கு, எனது கருத்தினையும் ஆலோசிக்கும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு,

Murugan Sivalingam
Ex. Councellor & Deputy Chairman,
Central Provincial Council..
Secretary, Plantation Tamils Social Forum.
No. 56, Rosita Housing Scheme, Kotagala.
T.P. & Fax - 051 2223012
E.mail - moonaseena@yahoo.com

## மு.சிவலிங்கம் பற்றிய சிறு குறிப்பு

தந்தை : முத்து முருகன்

தாய் : அழகன் கண்ணம்மா

பிறந்ததிகதி : 1946.8.26

உடன்பிறப்புகள் : 3 சகோதரிகள் ஒரு சகோதரன்

கல்வி கற்ற பாடசாலை:

1. தோட்டப்பாடசாலை(ஆரம்பக்கல்வி)
2. சென் பட்ரிக்ஸ் கல்லூரி(உயர்கல்வி)
3. அட்டன் ஹைலண்ட் கல்லூரி

முதல் படைப்பு : If மொழிபெயர்ப்பு கவிதை - தினகரன்

முதல் சிறுகதை - சுமைதாங்கி - வீரகேசரி

தொழில் :

1. வீரகேசரி உதவி ஆசிரியர்
2. ஜனநாயகத்தொழிலாளி பத்திரிகை ஆசிரியர்
3. அக்கரப்பத்தனை ஊட்டுவள்ளி தோட்ட ஆசிரியர்
4. அக்கரப்பத்தனை தமிழ் மகாவித்தியாலய ஆசிரியர்
5. தோட்ட உத்தியோகத்தர்(எழுது வினைஞர்)

வெளியிட்ட நூல்கள்

1. மலைகளின் மக்கள்(சிறுகதைத்தொகுப்பு)
2. தேயிலைத்தேசம்(மொழிபெயர்ப்பு)
3. ஒருவிதை நெல் (சிறுகதைத்தொகுப்பு)
4. மலையக நாட்டார் பாடல்கள்( ஆய்வு)
5. ஒப்பாரிக்கோச்சி(சிறகதைத்தொகுப்பு)
6. வெந்து தணிந்தது காலம்( சிறுகதைத்தொகுப்பு)
7. பஞ்சம் பிழைக்க வந்த சீமை(நாவல்)
8. உயிர்(நாவல்)
9. சிறுவர் பண்ணைகள்

விருதுகள்

1. அரச சாகித்திய விருதுகள் - 4 முறை
2. கொடகே விருது - 2 முறை
3. தஞ்சைப் பல்லைக்கழக கரிகாலச்சோழன் விருது
4. கலாபூசணம்
5. கலை மாமணி விருது
6. சாகித்தியரத்தினா
7. ஃபெயர்வே விருது

அரசியல் - அமரர் சந்திரசேகரனுடன் இணைந்து மலையக மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியை 1989ம் ஆண்டில் உருவாக்கியவர்களுள் மிக முக்கியமானவர்களில் மு.சியும் ஒருவராவார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org